

# தமிழரசு

16-3-1988 ரூ. 1





மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்களை சுவீடன் நாட்டுத் தூதுவர் திரு. ஆர்ஜான் பெர்னர் 4.3.1988 அன்று, ஆளுநர் மாளிகையில் சந்தித்தார்.

ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ். சித்து மதுரையில் 29.2.1988 அன்று, நலிவடைந்த பிரிவினருக்குத் தொழிற் கருவி களை வழங்கினார்.





# மேதகு ஆளுநர் சென்னை மாநகராட்சிக்கு வருகை

மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் தாம் பதவியேற்ற ஒரு வார காலத்திற்குள் பிப்ரவரி 24-ஆம் நாள் சென்னை மாநகராட்சித் தலைமை அலுவலகமான ரிப்பன் மாளிகைக்கு வருகை தந்தார்.

மாநகராட்சியின் செயல் திட்டங்களை விளக்கும் காட்சித் தொகுப்பைப் பார்த்து விளக்கங்களைக் கேட்டறிந்தார். பின்னர் அலுவலர்களிடையே உரையாற்றும்போது தாம் பதவியேற்ற மிகக் குறுகிய காலத்தில் மாநகராட்சிக் கட்டடத்திற்கு வந்ததன் நோக்கத்தை விவரித்தார்.

''சென்னை மாநகரைச் சுத்தமான, சுகாதாரமான மாநகராக மாற்ற வேண்டும். அதற்கென ஒரு திட்டம் வகுத்து ஒரு மாதத்திற்குள் கண்ணுக்குத் தெரிகிற முன்னேற்றத்தைக் காட்டியாக வேண்டும். இந்த வருகை ஒரு நாளோடு முடிவதன்று. மீண்டும் தொடரும். நான் மீண்டும் ஏப்ரல் மத்தியில் வருவேன். நடைபெற்றுள்ள பணிகளைப் பற்றி உங்களுடன் விவாதிப்பேன. தினசரி நடைபெறும் துப்புரவுப் பணிகள் பாதிக்கப்படாமல் நகரில் துப்புரவு இயக்கம் மேற்கொள்ளவேண்டும். நானே அடிக்கடி பல பகுதிகளுக்குச் சென்று திடீர் பரிசோதனைகள் செய்ய முடிவு செய்துள்ளேன். ஒரு குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தை நீங்கள் காட்டிட வேண்டும். உங்கள் பணி வெற்றியடைய பொது மக்களின் ஒத்துழைப்பையும் மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் பெற முயற்சி செய்ய வேண்டும்.''

இவ்வாறு மேதகு ஆளுநர் குறிப்பிட்டார்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019

பிரபவ - பங்குனி 3

மலர் : 18 இதழ் : 16, 17

16-3-1988

# சென்னை மாநகரில் தீவிரத் துப்புரவுப் பணி



ஆளுநர் ஆலோசனைப்படி சென்னை மாநகராட்சி 1.3.88 முதல் தீவிரத் துப்புரவுப் பணியை நடத்திவருகிறது.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு நாளும் முப்பது கோட்டங்களில் தீவிரத் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

சாதாரணமாக ஒவ்வொரு கோட்டத்திலும் 30 அல்லது 40 தொழிலாளர்கள் பணி புரிவர். இத்திட்டத்தின்படி 60 முதல் 80 தொழிலாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

குப்பை, இடித்துக் கொட்டப்பட்டுள்ள கட்டடப் பொருள்கள், களைச் செடிகள், நடைபாதை ஆக்கிரமிப்புகள் ஆகியவை அகற்றப்படுகின்றன.

நடைபாதைகளை ஒட்டியுள்ள வடிகால்கள், மழை நீர் வடிகால்கள் ஆகியவை சுத்தம் செய்யப்படுகின்றன. நடைபாதைச் சீரமைப்பும் நடைபெறுகிறது.

கொசுக்களை ஒழிக்க மருந்து அடித்தல், புகை போடுதல் இவையும் நடைபெறுகின்றன.

இந்த இயக்கத்தின் வெற்றிக்குப் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பை அளிக்கவேண்டும் என்றும், சென்னை நகரை மேலும் துப்புரவான - சுகாதாரம் நிறைந்த நகரமாக ஆக்கும் முயற்சியில் சென்னை மாநகராட்சியுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பொதுமக்களுக்கு வேண்டுகோள்

* குப்பையைத் தொட்டியில் போடுங்கள்.
* மாநகராட்சி கழிவறைகளைப் பயன்படுத்துங்கள்.
* குப்பையை அள்ளிச் சென்றபிறகு குப்பையை வழியில் கொட்டாதீர்.
* புகை மருந்து அடிக்கும்போது வீட்டு ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்திருங்கள்.
* மழை நீர் வடிகால்களில் குப்பையைக் கொட்டாதீர்.
* கட்டட இடிபாடுகளை நடைபாதைகளிலும், தெரு ஓரங்களிலும் குவிக்காதீர்.

# சென்னை நகரில் துப்பரவுப் பணிகளை

## ஆளுநரின் ஆலோசகர் பார்வையிட்டார்

ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி.ராமகிருஷ்ணா அவர்கள் 10-3-88 அன்று சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, கோபாலபுரம், ஆழ்வார்ப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம் ஆகிய இடங்களுக்குச் சென்று துப்புரவுப் பணிகள் நடைபெறுவதை நேரில் பார்வையிட்டார். பல பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள், தங்கள் பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்க ஒத்துழைப்புத் தருவதாக அவரிடம் உறுதி கூறினார்கள். சில இடங்களில் பொதுமக்கள் கொடுத்த மனுக்களை ஆலோசகர் பெற்றுக் கொண்டு, அவர்கள் குறைகளைக் கேட்டறிந்தார்.

திருவல்லிக்கேணி நல்லதம்பி தெருவிலும், இராயப்பேட்டை சீனிவாசப் பெருமாள் சன்னதித் தெருவிலும் சாக்கடைக் குழாயிலிருந்து துப்புரவுத் தொழிலாளர்கள் மாட்டுச் சாணத்தை அகற்றியதை நேரில் பார்த்த அவர் இது பற்றிக் கொடுக்கப்பட்ட புகார் மனுவைப் பெற்றுக் கொண்டார்.

11-3-88 அன்று காலையில் பெரம்பூர், அயனாவரம், செம்பியம், பெரியார் நகர் போன்ற இடங்களுக்குச் சென்று, துப்புரவுப் பணிகளைப் பார்வையிட்டார். சென்னை மாநகராட்சித் தலைமை அலுவலகமான ரிப்பன் கட்டடத்தில் மாநகராட்சி அலுவலர்களோடு ஆலோசனை நடத்தினார்.

## தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகராக 4-3-1988-இல் பொறுப்பேற்றுள்ள

# திரு ஜி. வி. ராமகிருஷ்ணா, இ.ஆ.ப.,

## வாழ்க்கைக் குறிப்பு

**பிறந்த நாள் :** 27-3-1930.

**கல்வி :**

எம்.எஸ்ஸி. (மைசூர்)

எம்.பி.ஏ. (ஹார்வேர்டு)

**பணி :**

1952-இல் இந்திய ஆட்சிப் பணியில் சேர்ந்தார்.

1957—59: மத்திய அரசு கனரகத் தொழில் அமைச்சகத்திலும், இரும்பு-எஃகு அமைச்சகத்திலும், அரசு சார்புச் செயலர்.

1960—61 : ஆந்திர மாநிலம், நெல்லூரில், ஆட்சியர் மற்றும் மாவட்ட மாஜிஸ்டிரேட்.

1961—66 : ஆந்திர மாநில சுரங்க நிறுவன நிர்வாக இயக்குநர், ஆந்திர மாநிலத் தொழில் வளர்ச்சி நிறுவன நிர்வாக இயக்குநர்.

1966—68: மத்திய அரசு, நிதி அமைச்சகம், பொருளாதார விவகாரத்துறை, அரசு துணைச் செயலர்.

1968—71: மத்திய அரசு, நிதி அமைச்சகம், பொருளாதார விவகாரத்துறை, இயக்குநர்.

1971—72: மத்திய அரசு, நிதி அமைச்சகம், பொருளாதார விவகாரத்துறை, அரசு இணைச் செயலர்.

1972—76: வாஷிங்டன் இந்தியத் தூதரகத்தில் பொருளாதார விவகார அமைச்சர்.

1976—77: ஆந்திர மாநிலம், வீட்டுவசதி, நகராட்சி நிர்வாகம், நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசுச் செயலர்.

1977—81: மத்திய அரசு தொழில் வளர்ச்சித் துறை அரசு கூடுதல் செயலர்;

1981—83: திட்டக்குழு ஆலோசகர்;

1983—84: மத்திய அரசு நிலக்கரித்துறை, அரசுச் செயலர்; எரிசக்தி ஆலோசனைக்குழு உறுப்பினர் - செயலர். ஆந்திர மாநில அரசு தலைமைச் செயலர்;

1984—85: நிதி ஆண்டுக் குழு உறுப்பினர் - செயலர்; மத்திய மாநில உறவுக் குழுச் செயலர்;


1985—88: மத்திய அரசு, பெட்ரோலியப்பொருட்கள் இயற்கைவாயு அமைச்சகம், அரசுச் செயலர்.

இந்திய நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான- குறிப்பாக தொழில் வளர்ச்சிக்கான எல்லா அம்சங்களிலும் பல ஆண்டுகளாக, பல்வேறு கட்டங்களில் இவர் தொடர்பு கொண்டிருந்தார். பரஸ்பர பொருளாதாரத் தொழில் நுட்ப உதவி பெறுதல், தேசியத் தொழிற் கொள்கை உருவாக்குதல், மாநில அளவில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்துதல், அந்நிய நாட்டுத் தொழில் நுட்ப உதவி மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவதில் அரும்பணி ஆற்றல், பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்தல், சிறுதொழில் வளர்ச்சி, சிறுதொழில்களுக்கு ஊக்கம் அளித்தல், அவற்றின் வளர்ச்சிக்கு உதவி போன்ற துறைகளில் முதிர்ந்த அனுபவம் பெற்றிருக்கிறார்.

1977—நவம்பரில் தொழில் உரிமங்கள் மற்றும் அந்நியக் கூட்டுறவுக் கொள்கைகள், விதிமுறைகள் குழு ஒன்றிற்குத் தலைவராக இந்திய அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தியத் தூதுக் குழு உறுப்பினராக, காமன்வெல்த் முதுநிலை அலுவலர் கூட்டங்கள், நிதி அமைச்சர்கள் கூட்டங்கள், உலக வங்கி போன்ற முக்கிய அனைத்து நாடுகள் கூட்டங்களுக்குச் சென்ற இந்தியத் தூதுக் குழுக்கள் பலவற்றில் இவர் அங்கம் வகித்திருக்கிறார். இந்தியாவின் பெரிய தொழில் நிதி உதவி நிறுவனமான இந்தியத் தொழிற் கடன் உதவி முதலீட்டுக் கழக இயக்குநர் குழுவிலும், பல்வேறு குழுக்களிலும் பணியாற்றியுள்ளார்.

தற்போது தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.



## தமிழ்நாட்டில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடனுதவி

தமிழ் நாட்டிலுள்ள கிராமப் புறங்கள் மற்றும் நகரங்களில் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்த்திட்டங்கள்தீட்டிசெயல்படுத்தி வருகின்றது. அத்தகைய திட்டங்களை நிறைவேற்ற ஆண்டு தோறும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடனுதவி செய்து வருகின்றது. இந்த ஆண்டும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற ரூபாய் 16 கோடியே 48 இலட்சம் கடனுதவி செய்துள்ளது. இந்தத் தொகை ஆயுள் காப்பீட்டுக் கழகம் இதுவரை வழங்கிய கடனுதவியைவிட அதிகமான தொகையாகும், இந்தத் தொகையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு நா. ஆதிமூலம், இ.ஆ.ப., அவர்கள் பம்பாயில் ஆயுள் காப்பீட்டுக் கழகத் தலைவர் திரு. நாராயணன் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

# தமிழக ஆளுநரின் ஆலோசகர்கள்



1. **டாக்டர் எஸ். எஸ். சித்து**
**ஆலோசகர் (எஸ்)**

இந்திய ஆட்சிப்பணி மற்றும் அகில இந்தியப் பணிகள்;
உயர்நீதி மன்ற நீதிபதிகள் மற்றும் மாவட்ட நீதிபதிகள்;
பொது;
காவல் துறை;
நீதிமன்றங்கள்;
சிறைச்சாலைகள்;
பாஸ்போர்ட்கள்;
தேர்தல்கள்;
இடவசதி கட்டுப்பாடு;
திரைப்படச் சட்டம்;
மோட்டார் வாகனச் சட்டம்;
மதுவிலக்கு, மதுபர்மிட் மற்றும் கலால்வரி;
மாவட்ட வருவாய் அலுவலர்கள்-வருவாய்;
துணை ஆட்சியர்கள்;
பொது நிருவாகம்;
சட்டம்;
லஞ்ச ஒழிப்பு;
சட்டமன்றம்;
செய்தி-மக்கள் தொடர்புத்துறை மற்றும் திரைப் படத்தொழில் நுட்பவியல்;
மொலாஸஸ்;
பத்திரிகைத் தாள் கட்டுப்பாடு;
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்;
போக்குவரத்து, தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து, போக்குவரத்துக் கழகங்கள்;
துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள்.



2. **திரு ஜி. வி. ராமகிருஷ்ணா, இ.ஆ.ப.**
**ஆலோசகர் (ஆர்)**

வேளாண்மை;
வேளாண்மைப்பொறியியல் பகுதி மற்றும் அக்ரோ பொறியியல்;
வேளாண்மை மறுநிதி;
வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள்;
கால்நடைப் பராமரிப்பு;
சின்கோனா;
வணிகவரி;
கூட்டுறவு;
பால் வளம்;
மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்;
நிதி;
மீன்வளம்;
வனப்பாதுகாப்பு;
உணவு மற்றும் விலைக்கட்டுப்பாடு;
நிதி நிறுவனத்துறை;
பெருந்தொழில்கள்;
பால்;
சுரங்கம் மற்றும் கனிமவளம்;
நகராட்சி நிருவாகம்;
திட்டம்;
ஜவுளி;
நகர அமைப்பு;

குடிநீர் வழங்கல் (பெருநகர குடிநீர் வழங்கல் கழிவுநீரகற்றுதல் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்).

# துறைகள் விவரம்



3. **திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப.**
**ஆலோசகர் (பி)**

ஆதிதிராவிடர் நலம்
பிற்பட்டோர் நலம்
இரவலர் இல்லம்
மின்சாரம்
பூதானம் மற்றும் கிராமதானம்
கொத்தடிமைத் தொழிலாளர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர்
பயனுள்ள நிர்வாகம்
மக்கள்தொகைக் கணக்கெடுப்பு;
கடன் நிவாரணம், கடன் கொடுத்தல், சீட்டு நிதிச் சட்டங்கள் உட்பட;
கல்வி, தொல்பொருள் ஆய்வுத்துறை;
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி;
சுற்றுபுறச் சூழல், மாசு கட்டுப்பாடு;
முன்னாள் படை வீரர்;
அரசினர் அச்சகம் மற்றும் எழுதுபொருள், அச்சிடுதல்;
கைத்தறி;
மக்கள் நல்வாழ்வு;
இந்து சமய அறநிலையம்;
வீட்டுவசதி மற்றும் குடிசைமாற்றுவாரியங்கள்;
வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள்;
இரும்பு மற்றும் உருக்கு கட்டுப்பாடு;
பாசனம், சிறிய பாசன வசதிகள் உட்பட;
கதர்;
தொழிலாளர்;
எடை மற்றும் அளவு தொடர்பான சட்டங்கள்;
சத்துணவு;
ஆட்சிமொழி;
அனாதைகள் இல்லம்;
ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்;
பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை தொடர்பான நிருவாகப் பணிகள்;
அகதிகள் மற்றும் நாடுகடத்தப்பட்டவர்கள்;
கம்பெனிகள் பதிவு;
பத்திரப்பதிவுச் சட்டம்;
ஊரக வளர்ச்சி மற்றும் ஊரக கடன் நிவாரணம்;
ஊரகத் தொல்கள், கிராம கைத்தொழில்கள், சிறுதொழில்கள் உட்பட;
சமூகநலம், மற்றும் மகளிர் குழந்தைகள் நலம்;
புள்ளியியல்;
தமிழ் வளர்ச்சி—பண்பாடு;
வக்ஃப்;
இளைஞர் சேவை.

## நலிவுற்ற சிறுதொழிற் பிரிவுகளுக்குப் புத்துயிர் அளிக்கப்படும்

இரண்டு மாதத்திற்குள் தமிழகத்திலுள்ள நலிவுற்ற சிறுதொழிற் பிரிவுகளுக்குப் புத்துயிர் அளிக்க ஒரு துரித செயல் திட்டம் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன் அவர்கள், தமிழகத் தொழில்துறை அலுவலர்கள், வணிக வங்கி, ரிசர்வ் வங்கி, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் புனரமைப்பு வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் போன்ற மாநில நிதி நிறுவனங்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கூட்டத்தை நடத்தினார். அதில், நலிவுற்ற சிறு தொழிற் பிரிவுகளுக்கான புனரமைப்பு நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதற்கான விதிமுறைகளைத் தேர்ந்தெடுப்பதிலும், ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற புனரமைப்பு நடவடிக்கைகளைத் தாமதமின்றிச் செயல்படுத்துவதிலும், அரசுடன் முழுமனதுடன் பங்கு கொள்ளுமாறு வங்கிகளின் பிரதிநிதிகளையும், நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் ஆளுநரின் ஆலோசகர் கேட்டுக்கொண்டார்.

வங்கிகளின் பிரதிநிதிகள் முழு ஒத்துழைப்பினையும் நல்குவதாக ஆலோசகரிடம் உறுதி கூறினர். அனைத்து வங்கிகளும் புனரமைப்புத் திட்டத்தினை மேற்கொள்வதற்காக ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நலிவுற்ற சிறுதொழிற் பிரிவுகளின் பட்டியலை எட்டு வாரங்களுக்குள் மாவட்ட வாரியாக அளிக்க அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

தமிழக அரசின் சார்பாக, நலிவுற்ற சிறுதொழிற் பிரிவுகளுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக முன் வரம்புத் தொகை உதவியளிப்பதற்கும், அரசிற்குச் சேரவேண்டிய நிலுவை தொடர்பாகப் பரிவுடன் நடந்து கொள்வதற்கும் ஆலோசகர் உறுதியளித்தார். அச்சமயம் அனைவரின் ஒத்துழைப்புடன் முதற்கட்டமாகக் குறைந்தது ஆயிரம் சிறுதொழிற் பிரிவுகளுக்குப் புத்துயிர் அளிக்க முடியும் என்று ஆலோசகர் நம்பிக்கை தெரிவித்தார். இத்தகைய புனரமைப்புத் திட்டத்தினை நடுத்தரத் தொழில் மற்றும் பெருந் தொழிற் பிரிவுகளுக்கும் செயலாக்குவதற்குத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் உதவியுடன் அரசு முயற்சி எடுக்கும்.


# படமும் செய்தியும்





11-3-'88 அன்று நடைபெற்ற அண்ணா பல்கலைக் கழகத்தின் எட்டாவது பட்டமளிப்பு விழாவில் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமை ஏற்று மாணவர்களுக்குப் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.




கனடா நாட்டு உயர்நிலைக் குழுவைச் சேர்ந்த திரு ஜே. லாரண்ட் டிபால்ட், திரு எமிலி காவ்ரே ஆகியோர், ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ். சித்து அவர்களை 1-3-'88 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து தமிழ்நாடு - கனடா ஆகியவற்றிற்கு இடையே கூட்டுத் தொழில்களில் தொழில்நுட்பப் பரிமாற்றங்களைச் செய்துகொள்வது தொடர்பாக உரையாடினர்.



ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. ராமகிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் 10-3-'88 அன்று சென்னை மாநகரின் பல பகுதிகளுக்குச் சென்று துப்புரவுப் பணிகளை மேற்பார்வையிட்டபோது, பொதுமக்கள் கொடுத்த மனுக்களைப் பெற்றுக் கொண்டு அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார்.



ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப., கோவை சென்றிருந்தபோது, 3-3-'88 அன்று, வேலை கேட்டு மனுச் செய்த விதவைப் பெண் சரளாவுக்கு உடனடியாக, சத்துணவு மைய அமைப்பாளர் பணிக்கான ஆணையைப் பிறப்பித்தார்.



தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் திரு எம்.எம்.இராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களை இங்கிலாந்து நாட்டுத் துணைத் தூதர் திரு டி.கே. ஸ்பிரேக், எம். வி. ஓ. 15.2.'88 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார்.

சென்னை கலைவாணர் அரங்கில் 12-3-1988 அன்று, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நடத்திய கைத்தறி அரசிப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுடன் மேதகு ஆளுநரின் துணைவியார் திருமதி அக்கம்மா மற்றும் கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர் அனகாபுத்தூர் இராமலிங்கம் ஆகியோர்..



# விவசாயிகளுக்குச் சில சலுகைகள்

## அரசு அறிவிப்பு

தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அவர்கள் வாங்கியிருந்த மின்சார உபயோகத்திற்கான கடனையும், வேறுபல கடன்களையும் செலுத்துவதில் சிரமப்பட்டு வருகிறார்கள்.

தமிழக ஆளுநர் அவர்கள், பல்வேறு விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று அவர்களின் சிரமத்தைக் குறைப்பதில் மிகவும் கவனம் செலுத்தி வருகிறார். அனைத்து வழிமுறைகளையும் கவனத்தில் கொண்டு அரசு கீழ்க்கண்ட சில சலுகைகளை மறு ஆணை பிறப்பிக்கப்படும் வரை விவசாயிகளுக்கு வழங்குகிறது.

**மின்சாரம்**

1988, பிப்ரவரி மாதம் விவசாயிகள் செலுத்த வேண்டிய மின் கட்டண பாக்கியைச் செலுத்த 1988 ஆகஸ்டு 30 வரை காலக் கெடுவினை நீட்டித்துள்ளது.

1988 பிப்ரவரி மாதத்துடன் முடிவுற்ற காலக் கெடுவில் விவசாயிகளால் மின்கட்டண பாக்கி செலுத்தப்படாமல் இருந்தாலும், அதற்காக மின் துண்டிப்பு ஏற்படுத்தப்பட மாட்டாது.

1988 பிப்ரவரி மாதத்துடன் முடிவுற்ற அரையாண்டு மின் இணைப்புத் தொகை பாக்கி செலுத்தப்படாமையின் காரணமாக, ஏற்கெனவே மின் துண்டிப்பு செய்யப்பட்டிருந்தால், அவற்றிற்கு மீண்டும் மின் இணைப்பு கொடுக்கப்படும்.

1988 பிப்ரவரி வரையிலான மின் கட்டண பாக்கித்தொகை செலுத்தப்படாமையினால் மின் துண்டிப்பு செய்யப்பட்டிருந்தாலும், மேற்கண்ட தேதி வரையிலான மின் கட்டணப் பாக்கித் தொகையில் 50% செலுத்தப்படும் பட்சத்தில் மீண்டும் அவற்றிற்கு மின் இணைப்பு தரப்படும்.

1988 பிப்ரவரி 29 வரையிலான மின் கட்டண பாக்கித்தொகை செலுத்தப்படாமல் மின்இணைப்பு துண்டிப்பு ஆகாமல் இருப்பினும், 50 சதவிகிதத் தொகை மார்ச் 31-க்குள் செலுத்தப்படுமேயானால், மின் இணைப்பு துண்டிக்கப்படாமல் அவ்வாறே இருக்கும். மீதமுள்ள 50 சதவீத பாக்கித் தொகையினை மே மாதம் 31-க்குள் செலுத்தலாம்.

மேற்சொன்ன அறிவிப்பானது விவசாய மின் இணைப்பு, தவறான முறையில் பயன்படுத்தப்பட்டோ அல்லது மின்சாரம் திருட்டுத்தனமாகப் பயன்படுத்தப்பட்டோ, மின் துண்டிப்பு செய்யப்பட்டிருப்பின் அவற்றிற்குப் பொருந்தாது.


அரசின் இந்த உடனடி ஆணையை ஏற்றுச் செயல்படுமாறு மின்சார வாரியம் கேட்கப்பட்டுள்ளது.

**நிலவருவாய்**

நில வருவாய் வசூல்செய்வதில், மறு ஆணை வரும் வரை சுமுகமான வழி வகைகள் மேற்கொள்ளப்படும். நில வருவாய், வரி பாக்கி, அபராத வட்டி, உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மீதான கூடுதல் வரி, நீர்ப்பாசனத் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, தனித்திட்ட தண்ணீர்த் தீர்வை போன்ற வரி பாக்கிகளை வசூல் செய்வதில் சுமுகமான வழி வகைகள் மேற்கொள்ளப்படும்.

**கூட்டுறவுக் கடன்கள்**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கூட்டுறவுக்கடன்களை வசூல் செய்வது குறித்து, ஏற்கெனவே கூட்டுறவுச்சங்கங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். கூட்டுறவுக் கடன்கள் வசூல் செய்வதில் சுமுகமான வழிமுறைகள் பின்பற்றப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# உப்பு சத்தியாக்கிரகப் போர்

இந்தியத் திருநாட்டில் அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து, அண்ணல் காந்தியடிகள் தலைமையில் அறவழியில் போராடி, நாட்டுமக்களுக்கு விடுதலை பெற்றுத் தர வேண்டும் என்ற குறிக்கோளோடு, தேசத் தலைவர்களும், தொண்டர்களும் தியாகம் புரிந்தவண்ணம் இருந்தனர். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒத்துழையாமை இயக்கத்தை அண்ணல் காந்தியடிகள் தொடங்கி நடத்தினார்.

### உப்பு வரியை எதிர்த்துப் போர்

சுதந்திரப் போராட்டத்தின்ஒரு திட்டமாக, 1930 பிப்ரவரி 14, 15, 16 ஆகிய தேதிகளில் சபர்மதியில் கூடிய காங்கிரஸ் செயற்குழுவில் உப்பு வரியை எதிர்த்துப் போர் தொடங்கலாமென்ற யோசனையை அண்ணல் காந்தியடிகள் தெரிவித்தார். ''உப்பு வரி அநீதியானது'' என்பதனையும், ''உப்பின் மீது விதிக்கப்பட்ட வரி இந்துக்கள், இசுலாமியர், பார்சிகள், கிறித்துவர், யூதர் ஆகிய எல்லாரையுமே ஒரு சேரப் பாதிக்கிறது. ஏழைகளையோ அது இன்னும் அதிகமாகப் பாதிக்கிறது'' என்பதையும், ''அதனை எதிர்த்துப் போராடுவது பாரத மக்களின் தார்மீகக் கடமை'' என்பதையும் காந்தியடிகள் விளக்கினார். உப்பு வரி எதிர்ப்புப் போருக்கு நாடே தயாரானது.

உப்பை உபயோகிக்காதவர்களே இல்லையாதலால், வாய் படைத்தவர்களெல்லாம் உப்பு வரி பற்றியே பேசலாயினர். இயற்கை தரும் உப்புக்குமா அந்நியன் வரி போடுவது என்று, ஒவ்வொரு இந்தியரும் வினா எழுப்பினர். ஏழை எளிய மக்கள் உப்பு வரி எதிர்ப்புப் போராட்டத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்து எழுச்சி அடைந்தனர். தாம் தொடங்க இருக்கும் போராட்டம் குறித்து 1930 மார்ச் 2-அன்று காந்தியடிகள் வைசிராய் லார்டு இர்வினுக்குக் கடிதம் எழுதினார். உப்புச் சட்டம் எடுபடுகிற வரை, உப்புச் சட்டம் மீறப்படும் என்பதைத் தெரிவித்தார். வைசிராயிடமிருந்து, ''தாங்கள் மேற்கொண்டுள்ள செயல் நிச்சயம் சட்டத்திற்கு விரோதமானது, பொது மக்களின் அமைதியைக் கெடுப்பது என்பதைத் தங்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மட்டுமே பதில் வந்தது. இர்வின் கடிதத்தைப் படித்துவிட்டு ''ரொட்டி வேண்டுமென்று, மண்டியிட்டுக் கெஞ்சினேன். ஆனால் எனக்குக் கல்தான் கிடைத்தது'' என்று கூறினார் காந்தியடிகள்.

### தண்டியாத்திரை

உப்புச் சட்டத்தை மீறுவதைத் தவிர, வேறு வழி இல்லை என்ற நிலையில், காந்தியடிகள், அறப் போருக்குத் தயாரானார். 1930 மார்ச் 11- அன்று சபர்மதிக் கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் சட்டமறுப்பில் கலந்து கொள்ளுமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

''பிரிட்டிஷ் ஆட்சி இந்திய மக்களின் சுதந்திரத்தைப்பறித்ததுடன் பொருளாதாரம், அரசியல், கலாச்சாரம், ஆன்மீகம் யாவற்றையும் பாழாக்கி விட்டது'' என்று தமது உரையில் தெரிவித்தார். 12-3-1930 அன்று காலை 6.30 மணிக்கு அண்ணல் காந்தியடிகள் கையில் தடியூன்றி 78 தொண்டர்களுடன் சபர்மதியிலிருந்து ''உப்பு சட்டத்தை ரத்து செய்வதில் நான் வெற்றி பெறும் வரையில் ஆசிரமத்துக்குத் திரும்புவதில்லை'' என்ற உறுதியுடன் புறப்பட்டார். காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருந்த பண்டித ஜவகர்லால் நேருவும், அவர் தந்தை மோதிலால் நேருவும் காந்தியுடன் சிறிது தூரம் நடந்து வழியனுப்பினர். காந்தியடிகள் தண்டியை அடைந்து உப்புச் சட்டத்தை மீறி தேசத்திற்குக் கட்டளையிடும் வரை எங்கும் போரைத் தொடங்கக் கூடாதென்றும், காந்தியடிகள் கைது செய்யப்பட்டால் வேறு இடங்களில் தாராளமாக தேசத்தினர் போரில் ஈடுபடலாம் என்றும் காங்கிரஸ் கமிட்டி அறிவித்தது. காந்தியடிகள் சபர்மதியிலிருந்து 240 மைல் தொலைவிலுள்ள 'தண்டி' என்னும் உப்பளப் பகுதிக்குத் தொண்டர்களுடன் கால்நடையாக யாத்திரை செய்து, ஏப்ரல் 5 அன்று தண்டியை அடைந்தார். ஏப்ரல் 6 காலை 8.30 மணிக்கு உப்பை எடுத்து, சட்டத்தை மீறினார். அதன் தொடர்பாக மே மாதம் 4-ஆம் நாளன்று கைது செய்யப் பெற்று, எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார்.

### தமிழ்நாட்டில் உப்பு சத்தியாக்கிரகம்

நாடே கொந்தளித்தது. சத்தியாக்கிரக இயக்கம் நாடு முழுவதும் பரவியது. மாநிலம் ஒவ்வொன்றுக்கும் தளபதிகள் நியமிக்கப்பட்ட

னர். தமிழ்நாட்டில் சத்தியாக்கிரக இயக்கத்திற்கு மூதறிஞர்இராஜாஜி தளபதியாக நியமிக்கப்பட்டார். அவர் தமிழ்நாடு முழுவதும் சுற்றி, சட்டமறுப்பு இயக்கம் நடத்த வேதாரணியத்தையே தேர்ந்தெடுத்தார். போராட்டத்திற்கான நிதி உதவி கோரி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் நம்பிக்கை வைத்து, தமிழ்நாட்டில், காங்கிரஸ் ஊழியர்களும் பொதுமக்களும் உப்பு சத்தியாக்கிரகத்துக்குப் பெரும் அளவில் ஆதரவு தந்தனர்.

**வேதாரணிய யாத்திரை**

காந்தியடிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க தண்டியாத்திரை தொடங்கிய ஒரு திங்களுக்குப்பின், பஞ்சாப் படுகொலை நிகழ்ந்த நாளான ஏப்ரல் 13-அன்று திருச்சியிலிருந்து 98 தொண்டர்களுடன் இராஜாஜி வேதாரணிய யாத்திரையைத் தொடங்கினார். காந்தியவாதியான வேதரத்தினம் வேதாரணியத்தில் சத்தியாக்கிரகப் பணிகளுக்குப் பொறுப்பேற்றிருந்தார். உப்பு சத்தியாக்கிரகப் படைக்கு நாமக்கல் கவிஞர்.

''கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்''

—என்ற பாடலைப் புனைந்து கொடுத்தார்.

இராஜாஜியும் தொண்டர்களும் அந்தப் பாடலைப் பாடிக்கொண்டே நடைபோட்டார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் ஆங்கிலக் கலெக்டர் தார்வே என்பவர் தடை உத்தரவு பிறப்பித்தார். 'சத்தியாக்கிரகப் படையினரை வரவேற்கவோ, வேறு வகையில் உதவி அளிக்கவோ கூடாது'' என்று ஆணை பிறப்பித்தார். அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டார். ஆனால் மக்கள் அஞ்சாமல் சத்தியாக்கிரகப் படையினரை வரவேற்றனர். சத்தியாக்கிரகப் படையினர் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம், மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தனர். அந்நியத் துணிகளை மலையெனக் குவித்துத் தீவைத்துக் கொளுத்தினர். சரியாக 16நாட்கள் 150 மைல் யாத்திரை செய்த பின்னர், ஏப்ரல் 28 அன்று மூதறிஞர் இராஜாஜியும் தொண்டர்களும் வேதாரணியத்தை அடைந்தனர். ஏப்ரல் 29 அன்று முழுநாள் உண்ணாநோன்பைக் கடைப்பிடித்தனர். ஏப்ரல் 30-ஆம் தேதியன்று 16 சத்தியாக்கிரகிகளுடன் இராஜாஜி அகஸ்தியம் பள்ளியிலுள்ள இடத்தேவர் உப்பளத்தை





அடைந்து, சட்டத்தை மீறி உப்பை அள்ளினார். சத்தியாக்கிரகிகளும் உப்பை அள்ளிச் சட்டத்தை மீறினர். இராஜாஜி மட்டும் கைது செய்யப்பட்டு, 6 மாதம் சிறைத்தண்டனை பெற்றார்.

வேதாரணியத்தில் தொடர்ந்து ஒரு மாத காலம் நாள்தோறும் அரசாங்க உப்பளத்தில் பிரவேசித்து உப்பை அள்ளும் சட்டமறுப்பில் சத்தியாக்கிரகிகள் ஈடுபட்டனர். இராஜாஜிக்குப்பின் அடுத்தடுத்து பிரமுகர் பலர் தளபதிப் பொறுப்பை ஏற்று சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு, ஒருவர்பின் ஒருவராகக் கைதாகிச் சிறைத்தண்டனை பெற்றனர்.

விருதுநகரில் பெருந்தலைவர் காமராஜ் உப்பு காய்ச்சியதற்காக இரண்டாண்டு சிறைத்தண்டனை பெற்றார். தமிழ் நாடெங்கிலும் பல தியாகிகள் சத்தியாக்கிரகம் நடத்திக் கைதானார்கள்.

வேதாரணியம் உப்பு சத்தியாக்கிரகத்தில் ஆற்றிய அரும்பணியைப் பாராட்டும் வகையில் வேதாரணியம் வேதரத்தினத்திற்கு, திருநெல்வேலி நகரில் நடைபெற்ற தமிழ் மாகாண விவசாயிகள் மாநாட்டில் 'சர்தார்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

உப்பு வரியை எதிர்த்து நடந்த சத்தியாக்கிரகப் போரில் வேதாரணியத்தின் புகழ் இந்தியா முழுவதும் பரவியது.

**வ. இராசமனோகரன்**

# தமிழ்நாட்டில் கதர் கிராமக்கைத் தொழில்



கிராமப் புறங்களில் வேலைவாய்ப்பின்றி, வாழ்க்கையில் எந்த வசதியுமின்றி, அல்லல்படும் ஏழை மக்களுக்கு, கதர் மற்றும் பல்வேறு கிராமத்தொழில்களின் மூலம் சுயவேலைவாய்ப்பளித்து, அந்த வருவாயின்மூலம் அவர்கள் வாழ்வை வளம் பெறச் செய்வது ஒன்றே கதர் கிராமத் தொழில் திட்டங்களின் தலையாய குறிக்கோளாகும்.

### கதர்-கிராமத் தொழில் திட்டங்கள்

இந்தியா விடுதலை பெற்று 50 ஆண்டுகளாக, கிராமத் தொழில்களின் வளர்ச்சியில் கதர் கிராமத் தொழில் திட்டங்கள் பெரும் பங்காற்றியுள்ளன. தமிழ்நாட்டில் கதர் கிராமத்தொழில் வாரியம் 1.4.60 முதல் செயல்பட்டு வருகிறது. அதற்கு முன்பு அரசாங்கத்தில் கதர்த் துறையாக இயங்கி வந்தது.

இன்று, இந்தியாவிலேயே கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டங்களின் வளர்ச்சிப் பணியிலும், வாரியத்தின் கூட்டமைப்பிலும், நிர்வாகத்திலும் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம்தான் முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது என்பது பெருமைக்கு உரியது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கீழ்க்காணும் கதர் மற்றும் கிராமத் தொழில்களை எடுத்துக் கொண்டு செயல்படுத்தி வருகிறது:

1. கதர்.
2. பனைத் தொழில்.
3. செக்கு எண்ணெய்
4. கைக்குத்தலரிசி மற்றும் தானியங்களையும், பருப்பு வகைகளையும் பதப்படுத்துதல்.
5. தோல் தொழில்.
6. மட்பாண்டம் (செங்கல் மற்றும் ஓடுகள்)
7. சுண்ணாம்புக் கல், மற்றும் சுண்ணாம்புச் சூளை (காளவாய்)
8. தேனீ வளர்த்தல்.
9. தச்சு மற்றும் கருமார்த்தொழில்.
10. பழப் பக்குவப்படுத்துதல்-பாதுகாத்தல்.
11. கைமுறைக் காகிதம்.
12. வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை
13. உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு
14. நார்த் தொழில், பாய் முடைதல்
15. பிரம்பு மற்றும் மூங்கில்
16. பாலி வஸ்திரா
17. ஊதுபத்தி
18. வனத்துறைப் பொருட்கள் சேகரித்தல்.

### கிராமத் தொழில்

அண்மையில் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணையம் கிராமத் தொழில்களைப் பற்றிய புதிய கொள்கையை அறிவித்துள்ளது. அக்கொள்கையின்படி ஊரகப்பகுதிகளில் ரூ. 15,000க்கு மிகைப்படாமல், முதலீடு செய்யப்படும் எந்தத் தொழிலும், பணியும், அதற்கு மின்சாரம் உபயோகப்படுத்தப்பட்டாலும், உபயோகப்படுத்தப்படாவிட்டாலும், கிராமத்தொழில் என்ற அமைப்புக்குள் எடுத்துக்கொள்ளப்படும்.

இப்புதிய கொள்கையின்படி ஊரகப்பகுதி என்பது 10,000க்கு மிகைப்படாமல் மக்கள் தொகை உள்ள கிராமங்களில், நகர்ப்புறங்களுடன் இணைந்துள்ள பகுதிகள் அனைத்தும் ஊரகப்பகுதிகள் என்று எடுத்துக் கொள்ளப்படும்.

இப்புதிய கொள்கையின்படி கிராமப்புறங்களிலும், புறநகரப் பகுதிகளிலும், ரூ. 15,000 வரை முதலீடு செய்து ஒருவர் அவருக்கு இசைவான எந்தத் தொழிலையும் ஆரம்பிக்கலாம். அத்தகைய தொழில் நடத்துவதற்குத் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் உதவிகள் கிட்டும். இந்தப் புதிய கொள்கை 24.7.87 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

### கதர்த் திட்டங்களின் முன்னேற்றம்

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் 612 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு

**திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,**
**தலைமைச் செயல் அலுவலர்,**
**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**



வருகின்றன. அநேகமாக இந்த நூற்பு நிலையங்கள் அனைத்தும் கிராமங்களிலேயே செயல்படுகின்றன. இவற்றில் நூற்பவர்கள் அனைவரும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றின் மூலம் 18,360 கிராமப்புற மகளிர் நிரந்தர வேலை வாய்ப்புப்பெற்று வருகிறார்கள். இவர்களுக்கு நாள் ஒன்றுக்குச் சராசரி ரூ.8 முதல் ரூ. 12 வரை ஊதியம் கிடைக்கிறது.

**கதர் நெசவு**

தமிழகத்தில் கதர் நெசவுக்கென 81 அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 4,800 நெசவாளர்கள் ஈடுபட்டு, நிரந்தர வேலை வாய்ப்பைப் பெற்று வருகிறார்கள். பரம்பரையாக நெசவு செய்து வருபவர்கள் மட்டுமின்றி, இதரத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும், குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் இந்த நெசவுத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவற்றிற்கென புதிதாகநேபாளித்தறிகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அவற்றில் பலருக்குப் போதிய பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நெசவாளர்களுக்குச்சராசரி ரூ. 17 முதல் ரூ.20 வரை ஊதியம் கிடைக்கிறது.

**கதர் உற்பத்தி மற்றும் விற்பனை**

1986-87ஆம் ஆண்டில் ரூ.849.09 இலட்சத்திற்குக் கதர் இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1987-88-இல் ரூ.1,000 இலட்சத்திற்கு கதர் இரகங்கள் உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. 1986-87இல் மொத்த கதர் விற்பனை ரூ. 1,566 லட்சத்திற்கு நடைபெற்றுள்ளது. 1987-88ஆம் ஆண்டு கதர் விற்பனை இலக்கு ரூ. 2,100 இலட்சத்திற்கு நிர்ணயிக்கப்பட்டது. விற்பனைக்கு ஊக்கம் அளித்திட 2.10.87 முதல் 21.10.87 வரை கதர், பட்டு மற்றும் பாலியஸ்டர் இரகங்களுக்குக கீழ்க்கண்டபடி சிறப்புத் தள்ளுபடி அளிக்கப்பட்டது.

| | |
|---|---|
| கதர் | 40% |
| கதர் பாலியஸ்டர் | 35% |
| பட்டு மற்றும் கம்பளி | 25% |

**பட்டு உற்பத்தி**

இவ்வாரியத்தின்கீழ் 17 கதர் பட்டு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1,440 பட்டு நெசவாளர்கள் ஈடுபட்டு வேலைவாய்ப்புப் பெற்று வருகிறார்கள். அவர்கள் சராசரி மாத ஊதியம் ரூ. 700 வரை பெற்று வருகிறார்கள். 1986-87-ஆம்



ஆண்டில் ரூ. 438 இலட்சம் மதிப்புள்ள கதர் பட்டு ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ஒரு கதர் நிறுவனம் தனிப்பட்ட முறையில் இவ்வளவு பெரிய அளவிற்கு பட்டு ரகங்கள் உற்பத்தி செய்வது இந்தியாவிலேயே தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

**கதர் பாலியஸ்டர் உற்பத்தி**

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் வளர்ச்சியில் கதர் பாலியஸ்டர் உற்பத்தி ஒரு மைல் கல் என்றால் அது மிகையாகாது. மிக மெல்லிய நவீன ரகங்களில் பாலியஸ்டர் புடவைகள், பேண்ட் ரகங்கள், சட்டைத்துணி ரகங்கள், பாலியஸ்டர் வேட்டி ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 1986-87-ஆம் ஆண்டில் கதர் பாலியஸ்டர் உற்பத்தி ரூ. 147 இலட்சம். பாலியஸ்டர் விற்பனை ரூ. 110.10 இலட்சம். 1987-88-ஆம் ஆண்டிற்கு கதர் பாலியஸ்டர் உற்பத்தி இலக்கு ரூ. 300 இலட்சத்திற்கு நிர்ணயிக்கப்பட்டது.

**கிராமத் தொழில்கள்**

வாரியம் நிறைவேற்றி வரும் 17 கிராமத்தொழில்களில் பனைத்தொழில், தோல் தொழில், சோப்பு, கைமுறைக்காகிதம், எண்ணெய்த் தொழில், தச்சு, கொல்லுத்தொழில், சுண்ணாம்புத்தொழில், தேனீ வளர்த்தல் போன்றவை முக்கியமானவையாகும். கிராமத்தொழில் திட்டங்கள் வாரிய அலகுகள் மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், கைவினைஞர்களுக்குத் தனி நபர் உதவி மூலமும், செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் விவரம்:

| | | |
|---|---|---|
| 1. | வாரிய அலகுகள் | 260 |
| 2. | தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் | 1,340 |
| 3. | தனிப்பட்ட கைவினைஞர்களுக்குத் தொழில் செய்ய நிதியுதவி | 40,256 |


**பனைத் தொழில்**

பனைத்தொழில் அகில இந்திய அளவில் தமிழ்நாட்டில்தான் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்தொழில் முழுமையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே செயல்படுகின்றன. சென்னையில் ஒரு மாநிலக் கூட்டுறவு இணையமும், மாவட்டங்களில் 8 மாவட்ட இணையங்களும், 1608 பனைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்படுகின்றன. இவற்றில் 3.39 இலட்சம் நபர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்.

இந்தியாவில் உள்ள 8 கோடி பனைமரங்களில் தமிழ்நாட்டில் சுமார் 5 கோடி பனைமரங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 1.01 கோடி பனைமரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 1986-'87ஆம் ஆண்டில் ரூ.4,474.24லட்சத்திற்குப் பனைப்பொருட்கள் உற்பத்தியும், ரூ.5299.95லட்சத்திற்கு விற்பனையும் நடைபெற்றன. சுமார் 75 லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பனைப்பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பனைத்தொழிலில் சுமார் 5.43 இலட்சம் மக்கள் சுயவேலைவாய்ப்பைப் பெற்று வருகின்றார்கள். இவர்களில் 49 முதல் 45 சதம் வரை பெண்களாவர். பனை ஓலை, ஓலைப் பொருட்கள், பனை நார்ப் பொருட்கள், தும்பு, பதநீர், பனம் சர்க்கரை, பனங்கற்கண்டு, பனைவெல்லம், பனம் சாக்லெட், பனம் சர்க்கரையில் பல்வேறு பழ ஜாம் வகைகள் தயாரிக்கப்படுகின்றன. பனஞ்சீனியில் தயாரிக்கப்படும், பாம்கோலா, பாம்டா பானங்கள் இன்று தமிழகத்தில் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

பனைத்தொழில் சம்பந்தப்பட்ட அறிவியல் பூர்வமான பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. குட்டைப் பனை மரங்கள் உருவாக்கிட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தீவிர முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இம்முயற்சி வெற்றி பெறும் தறுவாயில் உள்ளது. பனை மரம் ஏறுவதில் உள்ள சிரமத்தைப்போக்கி பனைச் செல்வத்தை மேலும் அதிக அளவிற்கு மக்கள் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சூழ்நிலை விரைவில் உருவாகும்.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பணி செய்கையில் விபத்துக்குள்ளாகி இறக்க நேரிடும் போது அவர்களது குடும்பங்களுக்கு ரூ. 5,000 விபத்து நிதியாக வழங்கப்படுகிறது. பனைத்தொழில் வளர்ச்சிக்கென தமிழக அரசு புதுக்கோட்டையில் 10 ஏக்கரும், வடார்க்காடு மாவட்டம், மாப்படையூரில் 5.6 ஏக்கரும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 13.46 ஏக்கரும், தருமபுரி மாவட்டத்தில் 25.00 ஏக்கரும் தமிழக அரசு பனைத்தொழில் வளர்ச்சிக்காக இலவசமாக வழங்கியுள்ளது.



**கள் இறக்கி வந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம்**

மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டதால் வேலை இழந்த பனைத் தொழிலாளர்களுக்கு 30,000 நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மதிப்பிற்கு கருவிகள் மானியமாகவும், ரூ. 1,000 கடனாகவும் தமிழக அரசு வழங்கியுள்ளது. இந்த வகையில் 6.00 கோடி ரூபாய் பனைத் தொழிலாளர்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**தோல் தொழில்**

தமிழ் நாட்டில் 28 தோல் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை மூலம் ரூ. 187.00 இலட்சத்திற்குக் காலணிகள், தோல் பைகள், பெல்ட்டுகள், இதர ஆடம்பரத் தோல் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**ஆதிதிராவிடர்களுக்கென ஒரு குரோம் தோல் பதனிடும் அலகு**

அரசின் சிறப்புக் கூட்டுத் திட்டத்தின்கீழ் ஈரோட்டில் கொம்கம்பாளையத்தில் முழு மானியத்தில்

ரூ.20.60இலட்சம்செலவில்200 தோல் பதனிடுவோர் பயனடையும் வகையில் ஒரு குரோம் தோல் பதனிடும் அலகு ஆரம்பிக்க அனைத்து நடவடிக்கைகளும் முடியும் தறுவாயில் உள்ளன.

### காலணித் தொழிலாளர்களுக்கு இனாமாகப் பணிக்கூடம் வழங்குதல்

காலணி தயாரிக்கும் தொழிலாளர்கள் சாலை ஓரங்களில் கடும் வெயிலிலும், மழையிலும் துன்பப்படுகிறார்கள். அவர்களது துயர்துடைக்க ரூ. 8,500 மதிப்பில் இரும்பினால் ஆன பெட்டிக்கடைகள் வடிவிலான பணிக்கூடங்கள், தையல் மிஷின்கள் மற்றும் தேவையான இதர உபகரணங்கள் நடைமுறை மூலதனம் ஆகியவைகள் இனாமாக வழங்கப்படுகின்றன. 1982-83-இல் 500 பெட்டிக்கடைகளும், 1983-84-இல் 500 பெட்டிக்கடைகளும், 1986-87இல் 750 பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் நிலையிலிருந்த ஏழைக் காலணித் தொழிலாளர்கள் மாதம் ரூ. 600 முதல் ரூ. 700 வரை ஊதியம் பெறுகின்றனர்.

இலவசக் காலணி வழங்கும் திட்டத்தின்கீழ் முதல் வகுப்பு, எட்டாம் வகுப்பு வரையில் படிக்கும் பள்ளிச் சிறுவர்கள், சிறுமியர்களுக்கு 18.79 இலட்சம் இணை காலணிகள் தயாரித்து வழங்கிட தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்திற்கு, தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது. வாரியத்தின் கீழ் செயல்படும் பல்வேறு காலணி அலகுகள் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் அதிக அளவில் காலணித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து இக்காலணிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாடு முதலிடம்

அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் தேவையான அனைத்து மரச்சாமான்கள், எழுது பொருட்களை தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்திலிருந்து வாங்கவேண்டுமென்று தமிழக அரசு நிரந்தர ஆணை வழங்கியுள்ளது. இதனால் வாரியத்தின் உற்பத்தி, விற்பனைபன்மடங்கு அதிகரித்துள்ளன. 1986-87-ஆம் ஆண்டில் வாரியம் நிறைவேற்றி வரும் 17 கிராமத்தொழில்கள் மூலம் மொத்த உற்பத்தி ரூ. 13,128 இலட்சத்திற்கு நடைபெற்றுள்ளது. இந்தியாவிலேயே கிராமத்தொழிற் பொருட்கள் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.



கதர் கிராமத் தொழில் துறையின் மூலம் மொத்தம் வேலை வாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை விவரம்:

| | |
|---|---|
| 1. ஆதிதிராவிடர் | 1,53,725 |
| 2. மலைவாழ் மக்கள் | 10,563 |
| | 2,34,865 |
| 3. பெண்கள் | 3,95,110 |
| 4. மற்றவர்கள் | |
| மொத்தம் | 7,94,263 |

மேலும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 50,000 புதிய நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### அரசின் சிறப்புத் திட்டங்கள் மூலம் பணி நிறைவேற்றப்படும் திட்டங்கள்

தமிழ்நாடு அரசின் சிறப்புத்திட்டங்களான, ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், சிறப்புக்கூட்டுத் திட்டம், கிராமத் தொகுதி வளர்ச்சித் திட்டம், பழங்குடி மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கதர் கிராமத் தொழில்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றிற்காகத் தமிழ்நாடு அரசு ரூ. 1909.00 இலட்சம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அளித்தது. 48,298 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றனர்.

இராமநாதபுரம், தர்மபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் வறட்சி நிலையைச் சமாளிப்பதற்காக வாரியம் சில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, பனைத் தொழில் வளர்ச்சித் திட்டங்கள் இப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன.

வாரியம் இதுவரை 42,494 தனி நபர் கைவினைஞர்களுக்கு நேரடியாகக்கடன் உதவி செய்து அவர்கள் தொழில் செய்ய ஊக்கமளித்து வருகின்றது. இந்தக் கடன் தொகைக்கு 4./· மிகக் குறைந்த வட்டி மட்டுமே வசூலிக்கப்படுகின்றது. இந்த அளவிற்குக் குறைந்த வட்டி விகிதத்தில் எந்த நிறுவனமும் கடன் வழங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### பொம்மைக் கண்காட்சி விற்பனை

மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள கைவினைஞர்கள் களிமண், பேப்பர், மரம், நெட்டி முதலானவற்றில் செய்கின்ற பல்வேறு கலை நுட்பம் வாய்ந்த பொம்மைகளை இவ்வாரியம் வாங்கி, நவராத்திரிப் பண்டிகைக் காலத்தில் பொம்மைக்கொலுக்கண்காட்சியை சென்னையில் குறளகம், காதி கிராப்டில் அமைத்து ஒவ்வொரு ஆண்டும் விற்பனை செய்துவருகிறது. தரமான பொம்மைகள் நியாயமான விலைக்கு விற்கப்படுவதால், ஒவ்வொரு ஆண்டும் விற்பனை பெருகி வருகிறது. இவ்வாண்டு 26.8.87 முதல் 2.10.87 முடிய ரூ. 7.10 லட்சம் மதிப்புள்ள பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் செயற்கை வைரம் தயாரிக்கும் தொழில் ஒரு முக்கிய மான கைத்தொழிலாக - சிறு தொழிலாகக் கடந்த 50, 60 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. பொதுவாக அதிக விலை கொடுத்து வைரத்தை வாங்கி அணிந்து ஆனந்தம் அடைய முடியாத ஏழை எளியவர்களின் வாட்டத்தைப் போக்கும்வகையில் செயற்கை வைரம் தயாரிக்கப்படுகின்றது. பணக்காரர்கள்கூட செயற்கை வைரத்தை விரும்பி வாங்கி அணிகிறார்கள்.

இத்தொழிலில் திருச்சி மாவட்டத்தில் கிட்டத் தட்ட 50 ஆயிரம் மக்களும், புதுக்கோட்டை மாவட் டத்தில் சுமார் 10 ஆயிரம் மக்களும் ஈடுபட்டுள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர், மலைக்குடிப் பட்டி, விராலிமலை, பரம்பூர், திருவப்பூர் ஆகிய பகுதி களில் பரவலாக இத்தொழில் நடைபெற்று வருகின்றது. இத்தொழிலில் பெருவாரியாக தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

**மூலப்பொருள் மற்றும் உற்பத்தி**

செயற்கை வைரத்தினை கெமிக்கல் டைமண்ட், சிந்தடிக் டைமண்ட், ரங்கூன் கமலம் என்று பலவிதமாக அழைக்கின்றனர். செயற்கை வைரத்தின் மூலப் பொருள் ஒருவிதமான இராசாயனப் பொருளாகும். அதனைத் 'தளம்' என்று அழைக்கின்றனர். இந்தியா அளவில் செயற்கை வைரத்தின் மூலப் பொருளான தளத்தினை மேட்டுப்பாளையத்தில் உள்ள "இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் டைமண்ட் கம்பெனி'' ஒன்று மட்டுமே தயாரிக்கின்றது. மேற்படி, தளம் அதிக கெட்டியாகவும், இயற்கை வைரத்திற்குச் சற்றே குறைந்த அளவு கடினமாகவும் இருக்கும்.

செயற்கை வைர உற்பத்தியில் நான்கு விதமான நிலை கள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன:-

1. தளத்தினைத் தேவையான அளவுக்கு வெட்டுதல்
2. கடசரப்பு
3. உருட்டு / வண்டிகை
4. மெருகு போடுதல்

**1. வெட்டுதல் (Cutting)**

தளம் என்பது வெள்ளை மற்றும் சிவப்பு நிறங் களில் சிலிண்டர் மற்றும் அரை சிலிண்டர் வடிவத்தில் $1\frac{1}{2}$" நீளமும், $\frac{3}{4}$" அகலமும் உடையதாக உள்ளது. மேற்படி தளத்தினை இறுதியில் பட்டை தீட்டுவதற்குத் தேவையான மெருகு கற்களின் அளவுகளை அனுசரித்துத் தேவையான அளவுகளில் வெட்டுவார்கள். இதற்கு $\frac{1}{4}$ குதிரைச்சக்தி மோட்டார் வைத்து இயக்கக்கூடிய வெட்டும் இயந்திரம் உள்ளது. தளத்தினை வெட்டுவ தற்குத் ''தொழில் வைரத்தூள்'' (Industrial Diamond), நாமக்கட்டி, தேங்காய் எண்ணெய் கலந்த பசையினைத் தகர பிளேடுகளில் தடவி வெட்டுவார்கள். மேற்படி முதல் நிலை வெட்டும் தொழில் 95% திருச்சியில் மட் டும் நடக்கின்றது. வெட்டப்பட்ட தளங்களை வெளியி டங்களில் உள்ளவர்கள் வந்து வாங்கிச் செல்வார்கள். முதலாளிகள் இத்தொழில் நடைபெறுகின்ற பகுதிகளில் கொண்டு சென்று விநியோகிப்பார்கள். தளம் வெட்டும் தொழிலில் ஒருவர் நாள் ஒன்றுக்குச் சராசரியாக ரூ.25 முதல் ரூ.50 - வரை ஈட்ட முடியும்.

**2. கடசரப்பு Coning**

செயற்கை வைரம் தயாரிப்பில் இரண்டாவது நிலை கடசரப்பு ஆகும். கடசரப்பு வேலையை இத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தத்தமது இல்லத்திலேயே குடிசைத் தொழிலாகச் செய்து வருகின்றனர். கார் போராண்டம் பவுடர் மற்றும் அரக்கு இரண்டையும் கலந்து செய்யப்பட்ட உறை சக்கரத்தினை ( Country Grinding Wheel ) கையால் உருட்டி வெட்டப்

# புதுக்கோட்டை மாவட்டத்தில் செயற்கை வைரத் தொழில்



பட்ட தளத்தினை சிறிய குச்சிகளின் முனையில் அரக்கில் ஒட்ட வைத்து, உரசி, வெட்டப்பட்ட தளத்திற்கு உருவம் கொடுப்பார்கள். பெரும்பாலும் இதில் ஆண், பெண் இருபாலரும் ஈடுபட்டுள்ளனர். இதில ஈடுபட்டுள்ளவர்கள் சராசரி ரூ.10 முதல் ரூ.25 வரை தகுதிக்குத் தகுந்தாற்போல் ஊதியம் பெற வாய்ப்புண்டு. கடசரப்பு இயந்திரத்தின் விலை உத்தேசமாக ரூ.150 - ஆகும்.

### 3. உருட்டு / வண்டிகை (Faceting)

கடசரப்பு நிலை முடிந்தவுடன் திட்டமான உருவமும், வழவழப்பும் கொடுப்பதற்காக காரீய சக்கரத்தில் வைத்துத் தேய்த்து எடுக்கும் வேலை உருட்டுநிலை ஆகும். மெருகு கற்கள் சிறப்பாக அமைய மேற்படி மூன்றாம் நிலையில் உருட்டு/வண்டிகை வேலைகள் நன்றாகச் செய்யப்படவேண்டும். கடசரப்பினைப் போலவே இத்தொழிலையும் குடிசைத் தொழிலாக இருபாலரும் தத்தமது இல்லத்திலேயே செய்து வருகினறனர். இதிலும் சராசரியாக ரூ.10 முதல் ரூ.20 - வரை ஊதியம ஈட்ட வாய்ப்புண்டு. உருட்டு இயந்திரத்தின் விலை ரூ.150 - ஆகும்.

### 4. மெருகேற்றுதல் (Polishing)

மேற்கண்ட மூன்று நிலைகளையும் கடந்த பின்னர் 4-வது நிலையே மெருகு வேலை ஆகும். இத்தில் அமோக வரவேற்பு உண்டு. திருச்சியிலிருந்து மெருகுக் கற்களுடன் வெளி மாநிலங்களுக்கு வியாபாரிகள் சென்று விற்று வருவது நடைமுறையில் உள்ளது.

மெருகுக் கற்கள் அளவில் சிறியவை, 100, 50, எண்ணிக்கையிலும், சற்று அளவிலே பெரியவை, காரட் எடை அளவிலேயும் விற்கப்படுகின்றன. சிறிய கற்கள் 20 வகையான அளவுகளில் குறிப்பிட்ட அளவு சல்லடைகள் மூலம் அளவிடப்படுகின்றன. ஒரு கிலோ தளத்திற்கு மெருகேற்றிய கற்கள் 1500 முதல் 1700 வரை தான் செய்யமுடியும். சுமார் 2/3 பாகம் சேதாரமாகின்றது.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை இலுப்பூர், விராலிமலை, பரம்பூர், திருவப்பூர், மலைக்குடிப்பட்டி ஆகிய பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இத்தொழிலில் அதிகம் ஈடுபட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 227 செயற்கை வைரத் தொழில்கள் சிறு தொழிலாக நிரந்தரப் பதிவு செய்யப்பட்டுள்ளன. பகுதி வாரியாக நிரந்தரப் பதிவு பெற்ற தொழில்களின் எண்ணிக்கை. அவற்றின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றவர்களின் எண்ணிக்கை; அத் தொழிலில் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் முதலீடு செய்துள்ள தொகை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| பகுதி | எண்ணிக்கை | வேலைவாய்ப்பு | முதலீடு ரூ. |
|---|---|---|---|
| புதுக்கோட்டை, திருவப்பூர் | 33 | 118 | 1.21 இலட்சம் |
| பரம்பூர் | 11 | 72 | 69,000 |
| இலுப்பூர் | 150 | 1065 | 5.93 இலட்சம் |
| மலைக்குடிப்பட்டி | 20 | 96 | 1.24 இலட்சம் |
| ஒடுக்கூர் | 13 | 13 | 2,000 |
| மொத்தம் | 227 | 1364 | 9.09 இலட்சம் |

தொழில் சிறிதளவே இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. காலால் மிதித்து இயக்கக்கூடிய கால் சாணை மற்றும் ½ குதிரைச் சக்தி மோட்டார் பொருத்தப்பட்ட இயந்திர சாணையும் உபயோகத்தில் உள்ளன. மெருகு ஏற்றும் வேலையில் திறமைக்குத் தகுந்தவாறு ரூ.20 -முதல் ரூ.75 - வரை ஒரு நாளுக்கு ஊதியம் ஈட்ட வாய்ப்புண்டு. கிராமப்புறங்களில் பெண்களும் பெருவாரியாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கால் சாணை இயந்திரத்தின் உத்தேச விலை ரூ.750 ஆகும். இயந்திரச் சாணையின் விலை ரூ.2000 -.

கிராமப்புறங்களில் உற்பத்தியாகின்ற மெருகு கற்கள் அனைத்தும் திருச்சியிலேயே வழங்கப்படுகின்றன. தரகர் மற்றும் கமிஷன் ஏஜண்ட் மூலமாக திருச்சியில் இருக்கின்ற சுமார் 100 முதல் 150 முதலாளிகள் கடைகளில் இவை விற்கப்படுகின்றன. பின்னர் மெருகுக் கற்கள் தரம் பிரிக்கப்பட்டு, 25, 50, 100 கற்கள் கொண்ட சீலிட்ட பாக்கெட்டுகளாகவோ அல்லது மொத்த லாட்களாகவோ விற்கப்படுகின்றன. இந்தியாவில் தயாரிக்கப்படும் 60% முதல் 70% கற்கள், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டத்திலும், மீதம் 30% ஜெய்ப்பூரிலும் உற்பத்தியாகின்றன. இத்தொழிலின் ஒரு வருட விற்பனை சுமார் 2 கோடி ரூபாயாகும். மெருகுக் கற்களின் அடக்க விலையில் 50% முதல்60%வரை உழைப்புக்கு ஊதியமே ஆகும். ஆகவே இதனைச் சிறந்த உழைப்பின்பாற்பட்ட தொழில் எனலாம். இடைத்தரகர்களாலும், தனிப்பட்ட முதலாளிகளாலும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகள் போதுமான பலனை அடைய முடியவில்லை. கர்நாடகம், ஆந்திரம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் இக்கற்களுக்கு மக்கள் மத்தி

பம்பாய் இந்துஸ்தான் டைமண்ட் கம்பெனியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் 14.12.87 அன்று இலுப்பூருக்கு வருகை புரிந்தார். அங்குள்ள செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலகங்களை ஆராய்ந்து, இத்தொழில் வளர்ச்சிக்காக இலுப்பூரிலிருந்து 20 படித்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து குஜராத்தில் உள்ள சூரத்திற்கு அவர்களை அனுப்பி, அவர்களுக்கு இத்தொழிலின் முன்னேற்றமான தொழில் நுட்ப அறிவினைப் புகட்ட இருப்பதாகக் கூறியுள்ளார். மேலும் சூரத்தில் உள்ளதுபோல் ஒரு பயிற்சி நிலையம் திருச்சிக்கு அருகில் ரூ.60 இலட்சம் முதலீட்டில் நிறுவப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர் அருகில் எண்ணெய்க்கிராமத்தில்100 ஏக்கர் நிலப்பரப்பு மாவட்ட ஆட்சித் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் மேற்கூறிய பயிற்சி நிறுவனத்தை ஆரம்பிக்கலாம் என்று அரசுக்குக்கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதற்குத் தமிழக அரசின் ஒப்புதல் கிடைத்தபின் 20 நபர்கள் இலுப்பூரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சூரத்திற்குப் பயிற்சிக்கு அனுப்பப்படுவர். மேலும் பயிற்சி நிலையமும் ஆரம்பிக்கப்பட்டால் பயிற்சி பெற்ற இளைஞர்களின் கைவண்ணத்தில் இந்தச் செயற்கை வைரத் தொழில் மேலும் ஒளிபெற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை.

**ஆ. கோபாலன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்)**
**புதுக்கோட்டை**



# நேதாஜியின் வாழ்விலே...

"ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை உருவாக்கி இந்திய தேசிய இராணுவம் என்ற அமைப்பைத் தந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்-இந்திய விடுதலைக்குப் போரிட்ட தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர். வங்கம் தந்த அந்தச் சிங்கத்தின் வரலாற்றுக் காவியம் வீரம் செறிந்தது; வேகம் நிறைந்தது! விவேகம் மிகுந்தது. அவரது வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகள்...

• • •

**கி.பி. 1919ஆம் ஆண்டு!**

ரௌலட் மசோதா இந்தியாவில் நிறைவேறியது; மக்கள் அதை எதிர்த்துப் போராட்டம் செய்தனர். அந்தச் சமயத்திலே தமது மகன் போஸ் இந்தியாவில் இருந்தால், அரசியல் துறையில் இறங்கி விடுவார் என்று எண்ணி, ஐ.சி.எஸ். படிப்புக்காக -சுபாஷ் சந்திரரை இலண்டனுக்கு அனுப்பி வைத்தார். அவரது தந்தை ஜானகிநாதபோஸ்.

சுபாஷ் இலண்டனில் இருந்தாலும் அவரது உள்ளம் இந்தியாவிலேயே இருந்தது; இலண்டனில் வாழும் ஆங்கிலேயர் உரிமை வாழ்வு வாழ்வதையும், இந்திய மக்கள் அடிமைகளாக நடத்தப்படுவதையும் கண்டபோது அவரது உள்ளம் துடித்தது. என்றாலும் கல்வியை விட்டுவிடவில்லை; ஐ.சி.எஸ்.தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

**1921-ஆம் ஆண்டு!**

அப்போது இங்கிலாந்தில் இந்திய அமைச்சராக இருந்தவர் மாண்டேகு.

ஒரு நாள் அவரைக் காண்பதற்கு சுபாஷ் சந்திரர் சென்றார். சுபாஷை வரவேற்று, இருக்கையில் அமரச் சொன்னார் அவர். வந்த காரணத்தையும் வினவினார்.

''நான் ஐ. சி. எஸ். தேர்வில் நாலாவதாகத் தேறியவன்....'' சுபாஷ் சொல்லி முடிக்கவில்லை.

''அதற்கென்ன! உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்?'' ஆங்கில அமைச்சர் கேட்டார்.



சுபாஷ் சந்திரபோஸ்.

''இப்போது அந்தப் பட்டத்தையும் அதனால் கிடைக்கும் பதவியையும் துறந்து விட விரும்புகிறேன்!'' சுபாஷ் தெளிவாகக் கூறினார்.

அமைச்சர் வியப்பில் ஆழ்ந்தார். ''சுபாஷ் சந்திரருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ?'' என்ற சந்தேகம் கூட அவருக்கு ஏற்பட்டது. சுபாஷிடம் நீண்ட நேரம் உரையாடினார். இராஜினாமாச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

ஆனால் தன் நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தும் அந்நியனிடம் கைகட்டிச் சேவை செய்ய சுபாஷ் சந்திரரின் மனம் இடம் கொடுக்கவில்லை. ஆங்கில அமைச்சரின் வேண்டுகோளைப் புறக்கணித்தார். இராஜினாமா கடிதத்தை அவரிடமே கொடுத்து, அதை ஏற்றுக் கொள்ளுமாறு செய்துவிட்டார்.

* * *

சுபாஷ் சந்திர போஸின் ஆற்றலை அறிந்த தேசபந்து தாஸ்-வங்கத்திலே ஒரு தேசியக் கல்லூரியை உருவாக்கி-போஸை அதன் முதல்வராக்கினார். அப்போது அவருக்கு வயது 25.

''இந்த இளைஞரால் கல்லூரித் தலைவரின் பொறுப்பை ஏற்க முடியுமா?'' -சிலர் கேட்டனர்.

''கல்லூரி நடத்தும் பயிற்சி இல்லாத ஒருவரிடமா கல்லூரி முதல்வர் பொறுப்பை ஒப்படைப்பது?''-இப்படிச் சிலர் கேட்டனர்.

அவர்களின் கேள்விகளும் சந்தேக உணர்வும் தேவையற்றவை என்பதை, போஸ், தமது திறமையான பணியின் மூலம் மெய்ப்பித்துக் காட்டினார்.

* * *

**1935 ஆம் ஆண்டு!**

சுபாஷ் சந்திரரின் உடல் நிலை சீர்கெட்டது; சிகிச்சைக்காக வியன்னாவுக்குச் சென்றார். அங்கிருந்து ஜினீவா சென்று, நோபெல் பரிசு பெற்ற 'ரோமன் ரோலந்து' என்னும் புகழ் பெற்ற எழுத்தாளரைச் சந்தித்தார். ஜினீவாவிலே தங்கியிருந்த காலத்தில் 'இந்தியப் போராட்டம்' என்னும் நூலை அவர் எழுதினார். அந்நூலைக் கண்டு ஆங்கில அரசாங்கம் அஞ்சி நடுங்கியது. ''அந்த நூல் இந்தியாவிற்குள் புகக்கூடாது''என்று தடை விதித்து விட்டது.

* * *

ஜப்பானியர்வசம் போர்க் கைதிகளாக சிக்கியிருந்த இந்தியக் கைதிகளை வைத்துக்கொண்டு இந்திய தேசிய ராணுவத்தை அமைத்து, அதற்குத் தாமே தலைவனும் ஆனார் சுபாஷ் சந்திரபோஸ். அது முதல் அவருடைய படை வீரர்கள் அவரை 'நேதாஜி' என அழைக்க ஆரம்பித்தனர். அப்பொழுதுதான் அவர் 'ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை ராணுவத்துக்காக உண்டாக்கினார்.

1942-இல், ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்டி விட்டால், இந்தியாவுக்குச் சுதந்திரம் கிட்டுவதில், ஜப்பானியர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கையை ஜப்பானின் சார்பில் ஒரு புறம் இந்திய மக்களுக்கு வானொலி மூலம் ஊட்டி வந்தார் நேதாஜி. இன்னொரு புறம் உள்நாட்டில் காந்தியடிகள் 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தைத் துவக்கினார்.

* * *

இந்தியா விடுதலை பெறுவதற்கு, அண்ணல் காந்தியடிகள் கடைப்பிடித்து வரும் அன்பு நெறிமட்டும் போதாது என்னும் கருத்து சுபாஷ் சந்திரருக்கு உண்டு. தமது தீவிரக் கருத்தை ஒளிவு மறைவு இன்றி அவர், காந்தியடிகளிடமே தெரிவித்தார். என்றாலும் இந்திய விடுதலைப் போருக்குக் காந்தியடிகளின் தலைமைதான் வேண்டும் என்பதிலே அவருக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

இந்தியாவை அந்நியரின் பிடியிலிருந்து மீட்பதற்காக-வெளி நாடுகளுக்குச் சென்று, பிற நாட்டினரின் உதவியை நாடினார்.

''நமது நாட்டின் விடுதலையை நாமே போர் புரிந்து கைப்பற்றியாக வேண்டும்; ஆகவே தான் நாட்டை விட்டு வெளியேறி, பிற நாட்டினரின் உதவியுடன் இந்திய விடுதலைப் போரில் இறங்கியிருக்கிறேன். இதற்கு உங்கள் ஆசி வேண்டும்'' என்று, சிங்கப்பூர் வானொலி உரையின் மூலம், 1944 ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் நாள் அன்று, காந்தியடிகளுக்குச் செய்தி விடுத்தார் சுபாஷ்.

# எல்லைப்புற காந்தி

இந்திய நாட்டின் பழம் பண்புக்கும் நாகரிகத்திற்கும் வழிகோலிய பகுதிகளில் வடமேற்கு எல்லைப் புற மாகாணம் ஒன்றாகும்.

பஞ்ச பாண்டவர்களின் தாய் காந்தாரி பிறந்த நாடு இதுதான் என்றும் அதனால் அக்காலத்தில் இப்பகுதி காந்தாரம் என்று அழைக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. இந்தப் பகுதியில்தான் காந்தாரக் கலை தோன்றிச் செழிப்புற்றிருந்தது.

இத்தகைய சிறப்புகள் பெற்ற வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் உள்ள உத்தமன் சாய் என்ற சிற்றூரில் எல்லைப்புற காந்தி என்றும் பாத்ஷாகான் என்றும் வழங்கப் பெற்ற கான் அப்துல் கபார்கான் 1890-ஆம் ஆண்டில் பிறந்தார்.

அவரது தந்தையார் கான் பஹ்ராம் கான் நாட்டாண்மையாக இருந்தவர். என்றாலும் அவரிடம் அதிகாரவெறி இருந்ததில்லை. எளிமையும் இனிய சுபாவமும் அவரிடம் குடிகொண்டிருந்தன. கபார்கானின் அன்னையும் ஏழைகளுக்கு இரங்கும் இயல்பு படைத்தவர்.. அன்புள்ளம் நிறைந்தவர். அதனால் இயல்பாகவே கபார்கானிடத்திலும் நற்குணங்கள் நிறைந்திருந்தன.

கபார்கான் பெஷாவரில் ஓர் உயர்நிலைப்பள்ளியில் பயின்று தமது 16வது வயதில் மெட்ரிகுலேசன் படிப்பை முடித்தார். உயர் கல்விக்காக லண்டன் போவதற்குத் திட்டமிட்டார். ஆனால் தனது அன்னையின் ஒப்புதல் கிடைக்காததால் அந்தத் திட்டத்தைக் கை விட்டுவிட்டார்.

அந்நாட்களில் பட்டாணியர்கள் வாழ்ந்த பகுதியில் பள்ளிக்கூடங்கள் இல்லை. ஆங்கிலேய அரசு நடத்தி வந்த சில தொடக்கப் பள்ளிகளில் ஆங்கில மொழியிலேயே கல்வி பயிற்றுவிக்கப்பட்டது. பட்டாணிய மக்கள், கல்வி அறிவில்லாதவர்களாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குக் கல்வி அறிவு ஊட்டுவதே தமது தலையாய கடமை எனக் கருதி தேசியப் பள்ளிகளைத் தொடங்கினார் கபார்கான். மாணவர்கள் பெருமளவில் அப்பள்ளியில் சேர்வதற்கு முன்வந்தனர்.

பட்டாணியரிடையே தேசியக் கல்வி பரவுவதைக் கண்ட ஆங்கிலேய அரசு அலுவலர்கள் வெகுண்டார்கள். பட்டாணிய மக்கள், கல்வியின் வாயிலாக அரசியல் விழிப்புப் பெற்றுவிடுவார்களோ என்ற அச்சத்துடன், தேசியக் கல்விக்கு, இஸ்லாமிய முல்லாக்களைக் கொண்டே இடையூறு கொடுக்க முனைந்தார்கள். கல்விப் பணியுடன் மக்களின் கோழைத்தனம், அச்சம் ஆகியவற்றை நீக்கும் பணியையும் மேற்கொண்டார் கபார்கான்.


கபார்கானுக்கு 22 வயதாகும் போது திருமணம் நடைபெற்றது. கனிகான், வாலிகான் என்னும் இரண்டு ஆண் மக்கள் பிறந்தனர். இரண்டாவது பையன் பிறந்த ஓராண்டில் கபார்கானின் மனைவி விஷக்காய்ச்சலுக்கு ஆளாகி உயிர் துறந்தார்.

மனைவியின் பிரிவு அவரை மிகவும் உலுக்கியது. மறுமணத்தில் நாட்டமின்றி இருந்தார். ஆனால் பெற்றோர்களின் வலியுறுத்தலின் காரணமாக 1916இல் மறுமணம் செய்து கொண்டார். இரண்டாவது மனைவியின் மூலம் ஓர் ஆண் குழந்

எல்லைப்புற காந்தி
காந்தி அடிகளுடன்...



நேருவுடன்...



இந்திராகாந்தியுடன்...



தையும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர்.

ரௌலட் சட்டத்தை எதிர்த்து 1919இல் காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கி இருந்தார். அதன் தொடர்பாக பெஷாவரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்குப் பார்வையாளராகச் சென்றிருந்த கபார்கான் கைது செய்யப்பெற்றார். ஆறுமாத காலக் கடுங்காவல் அவருக்கு அளிக்கப் பட்டது.

சிறையனுபவம் தேச விடுதலைப் போராட்டத்தில் அவரைத் தீவிரமாக ஈடுபடச் செய்தது. காந்தியடிகள் தொடங்கிய கிலாபத் இயக்கத்தின் பெஷாவர் கிளையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இந்த இயக்கம் வெகு விரைவில் எல்லைப்புற மாகாணம் முழுதும் பரவத்தொடங்கியது. அதைச் சகித்துக் கொள்ள முடியாத ஆங்கிலேய அரசு, அவரை மீண்டும் கைது செய்தது. ஜாமீனில் செல்ல அனுமதித்தது. ஆனால் அவர் மறுத்துவிட்டார். 3 ஆண்டுக் கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார். சிறைவாசத்தின்போது அவரது அன்னையார் நோயில் விழுந்தார். மகனின் நினைவாகவே இருந்த அன்னையாரின் உடல்நிலை மோசமுற்றது. மகனின் பெயரை உச்சரித்தவாறே ஒருநாள் மரணம் எய்தினார்.

அன்னை இறந்த செய்தியைப் பத்திரிகைகளின் வாயிலாகத்தான் அவர் தெரிந்து கொண்டார். அவரது கண்கள், கண்ணீரை அருவியெனக் கொட்டின.

சிறிது காலத்தில் விடுதலை பெற்ற கபார்கான் மற்றொரு அதிர்ச்சியைச் சந்திக்க நேர்ந்தது. தமது 2வது மனைவியுடன் 1925இல் மெக்காவுக்குப் பயணம் செய்தபோது ஜெருசலத்தில் ஒரு மசூதியின் வாசற்படியில் அவரது மனைவி தவறி விழுந்து மரணம் எய்தினார். கபார்கான் மறுபடியும் சோக வெள்ளத்தில் மூழ்கினார்.

1928இல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குப் பார்வையாளராகச் சென்ற கபார்கான் காந்தி அடிகளின் சொற்பொழிவினால் கவரப்புட்டார். அவரது அணுகுமுறை கபார்கானுக்குப் பிடித்துப் போனது.

1929இல் லாகூர்காங்கிரஸ்மாநாட்டில் அவரும் அவரது தொண்டர்கள் பலரும் பிரதிநிதிகளாகப் பங்கு பெற்றனர். இந்த மாநாட்டு நிகழ்ச்சிதான் காங்கிரஸ் இயக்கத்தில் அவர் கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சியாகும். இந்தியா முழுவதற்கும் சுதந்திரம் கிடைத்தால்தான் பட்டாணி இன மக்களுக்கும் விடுதலை கிடைக்கும் என்பதை இந்த மாநாட்டின் மூலம் உணர்ந்த கபார்கான் இந்திய சுதந்திரப் போரில் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதற்கு முன்வந்தார். காங்கிரஸ் செயற்குழுவில் உறுப்பினரானார்.

அண்ணல் காந்தியுடனும் காங்கிரஸ் இயக்கத்துடனும் தொடர்பு கொண்ட நாள் முதல், அகிம்சையின் பேராற்றலை உணரத்தொடங்கினார். காந்தியடிகளைத் தனது குருநாதராக ஏற்றுக் கொண்டார்.

செஞ்சட்டைப் படையினர் என்ற குதாய்கித்மத்கார் தொண்டர் படையை உருவாக்கினார். அதன்மூலம் தனது இன மக்களுக்கு அகிம்சை நெறியைப் போதித்தார். அதைக் கண்டு ஆங்கிலேயர்கள் அச்சமடைந்தனர். எல்லைப்புற மக்களிடையே அற்புதமான எழுச்சியையும் புதிய மாறுதலையும் செய்துவந்த இந்தப் படையை நசுக்கும் முயற்சியில் ஆங்கில அரசு ஈடுபட்டது.

தனது தாய்மொழியான புஷ்டு மொழியில் 'பக்தூன்' என்ற பத்திரிகையை நடத்தி வந்தார். காந்தியடிகள் தாய் மொழியின் அவசியத்தை வலியுறுத்தியது போலவே கபார்கானும் தாய்மொழியை வலியுறுத்தி வந்தார். அண்ணல் நடத்திய ஹரிஜன் பத்திரிகை போலவே பக்தூன் பத்திரிகையும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றது.

கராச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கபார்கானும் அவரது இயக்கத் தொண்டர்களும் கலந்து கொண்டனர். காந்தியடிகளுடன் நெருங்கிப் பழகும்வாய்ப்பு கபார்கானுக்கு ஏற்பட்டது.

1931ஆம் ஆண்டு வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றார் காந்தியடிகள். அந்தச் சமயத்தில் பொய்க் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்ட கபார்கான் குஜராத் சிறையில் வைக்கப்பட்டார். எல்லைப்புற மாகாணத்திற்குத் திரும்பிச் செல்லக் கூடாது என்ற நிபந்தனையுடன் 1934இல் விடுதலை செய்யப்பட்டார். அந்த ஆண்டு பம்பாயில் கூடிய காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைவராக கபார்கான் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, ''நான் தொண்டனே தவிர, தலைவனல்லன்'' என்று சொல்லி, தலைமைப் பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டார்.

எல்லைப்புறத்திற்குத் திரும்பிச் செல்லக்கூடாது என்று விதிக்கப்பட்டிருந்த நிபந்தனை அவருக்கு ஒரு வகையில் அனுகூலமாகியது. அண்ணல் காந்தியுடன் வார்தாவில் தங்கி, அவருடன் நெருங்கிப் பழகி, சத்தியம், அகிம்சை ஆகிய நெறிகளில் மிகுந்த ஈடுபாடு கொள்வதற்கு வாய்ப்பை அது ஏற்படுத்தியது. அண்ணல் மேற்கொண்ட அறப் போர்களில் எல்லாம் கபார்கான் முழு நம்பிக்கையுடன் ஈடுபட்டார். காந்தியடிகளுடன் ஒருபோதும் அவர் கருத்து வேற்றுமை கொண்டதே இல்லை; இணைந்தே பணி புரிந்தார். காந்தியடிகளின் சக ஊழியராக விளங்கியதாலும் அவரைப் போலவே அன்பு நெறியில் ஆர்வத்துடன் திகழ்ந்ததாலும் மக்கள் கபார்கானை எல்லைப் புற காந்தி என்று ஆர்வத்துடன் அழைத்து வரலாயினர்.


பிரதமர் ராஜீவ்காந்தியுடன்...

1946ஆம் ஆண்டில் இந்தியாவில் பொதுத் தேர்தல் வந்தது. எல்லைப் புறத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்தார் கபார்கான். பாகிஸ்தான் பிரிவினையைச் சில முஸ்லீம்கள் விரும்பினர்; வலியுறுத்தினர். அநன்னை

எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார் கபார்கான்.

இந்தியாவில் பண்டித ஜவகர்லால் நேருவின் தலைமையில் இடைக்கால அமைச்சரவை ஏற்பட்டது. முஸ்லிம் சமுதாயத்தினர் சிலர் பாகிஸ்தான் பிரிவினை வேண்டும் என்று வலியுறுத்தி, பலாத்காரத்தில் ஈடுபட்டனர். கல்கத்தா, வங்காளம் ஆகிய மாநிலங்களில் இந்து முஸ்லிம் கலவரங்கள் தோன்றின. நவகாளியில் படுகொலைகள் நடந்தன. கலவரம் நடந்த பகுதிகளில் அமைதியை நிலைநாட்டுவதற்காகக் காந்தியடிகள் பாத யாத்திரை மேற்கொண்டார்.

மதக் கலவரம் பீகாருக்கும் பரவியது தொடர்ந்து பஞ்சாபிலும், எல்லைப் புறத்திலும் சில தீயவர்களால் மதக்கலவரம் தூண்டிவிடப்பட்டது; நேருவும் ஏனைய அமைச்சர்களும் அந்தச்சூழ்நிலைகண்டு கவலைப்பட்டனர். பாகிஸ்தான் பிரிவினையை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். அதன் விளைவாக, 1947 ஜூன் 3ஆம் நாளன்று வைசிராய் மவுண்ட்பேட்டன் பிரபு, பாகிஸ்தான் பிரிவினைக் கொள்கை குறித்து அறிவித்தார்.

இந்தப் பிரிவினையைக் காந்தி அடிகள் எதிர்த்தது போலவே கபார்கானும் கடுமையாக எதிர்த்தார்; வன்மையாகக் கண்டித்தார். என்றாலும் பயன் இல்லை. பாகிஸ்தான் பிரிவினை உறுதி என்ற நிலை ஏற்பட்டது.

அடுத்தொரு பிரச்சினை உருவாயிற்று. எல்லைப்புற மாகாணம் இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ்தானுடன் சேர்வதா என்பதுதான் அது. இந்தப் பிரச்சினைக்காகப் பொதுமக்களிடம் வாக்கெடுப்பு நடைபெற்றது. 50 சதவீத மக்கள் தான் ஆதரவு தந்தனர். மீதி 50 சதவீத மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனாலும் எல்லைப்புறத்தைத் தன்னுடன் பலவந்தமாக இணைத்துக்கொண்டது பாகிஸ்தான்.

1947 ஆகஸ்ட் 15ஆம் நாளன்று இந்தியநாடு சுதந்திரம் பெற்றது. ஆனால் இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இந்தியா அமைந்தது.

தொடக்கத்திலிருந்தே பாகிஸ்தான் பிரிவினையை எதிர்த்துவந்த கபார்கான்-பாகிஸ்தான் அரசினால் கைது செய்யப் பெற்றார். சுதந்திரம் பெற்ற பின்னர் மொத்தம் 15 ஆண்டுகள் அவர் பாகிஸ்தான் அரசினால் சிறைவைக்கப் பெற்றிருந்தார்.

பட்டாணியர்களுக்கெனத் தனி நாடு (பக்தூனிஸ்தான்) வேண்டும் என்று கோரிக்கை விடுத்த கபார்கான் அதற்காகப் போராடி வந்தார்.


அபுல்கலாம் ஆசாத்துடன்...

பாகிஸ்தான் அரசு அவரையும் ஆயிரக்கணக்கான அவரது தொண்டர்களையும் துன்புறுத்தியது.

1964ஆம் ஆண்டு அவரது உடல்நிலை மோசமாகியதை முன்னிட்டு அவர் விடுதலை செய்யப் பெற்றார். மருத்துவ சிகிச்சைக்காக லண்டனுக்குச் சென்றார். சிகிச்சை முடிந்து திரும்பிய அவர், பாகிஸ்தானுக்குச் செல்லாமல் ஆப்கானிஸ்தானத்தின் தலைநகரான காபூலுக்குச் சென்று அங்கே தங்கிவிட்டார். அங்கிருந்தபடியே பக்தூனிஸ்தான் இயக்கத்துக்காக அமைதியான வழியில் பாடுபட்டு வந்தார்.

1969இல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவை இந்தியத் திருநாடு கொண்டாடிய சமயத்தில் கபார்கான் இந்தியாவுக்கு வந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அப்போது அவருக்கு நேரு சமாதான விருது வழங்கப் பெற்றது.

அதே ஆண்டில் தமிழ்நாடு அரசு தொடங்கிய குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கிறார்.

1977 ஜூலைத் திங்களில் பாகிஸ்தானின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜியா உல் ஹக், கபார்கானை தேசிய வாதியாக ஏற்றுக் கொண்டார். என்றாலும் அவர் சுதந்திரமாக நடைபோட ஜியாவின் ராணுவ ஆட்சி அனுமதிக்கவில்லை. அதனால் கபார்கான் மீண்டும் ஆப்கானிஸ்தானத்தில் குடியேறினார்.

1985ல் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதற்காகத் தனி விமானத்தில் அவரை அனுப்பி வைத்தார் ஜியா.

1987ஆம் ஆண்டு திடீரென்று அவர் உடல்நலக் குறைவுக்கு ஆளானபோது தனி விமானம் அனுப்பி அவரை இந்தியாவுக்கு வரவழைத்து அவருக்குச் சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்தார் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி. கபார்கான் பம்பாய் மருத்துவ மனையில் மே 15இல் சேர்க்கப்பெற்றார். 40 நாட்கள் சிகிச்சைக்குப்பின் ஆப்கானிஸ்தானத்துக்குப் புறப்பட்ட அவர் டெல்லி சென்றார். அப்போது அவரது உடல் நிலை மிகவும் மோசமாகியது. நினைவை இழந்தார். அந்தச் சமயத்தில் அவருக்கு ‘பாரத ரத்னா’ விருது வழங்கிச் சிறப்பித்தது இந்திய அரசு. விருதினை அவரது மகன் பெற்றுக் கொண்டார்.

நினைவிழந்த நிலையிலேயே கபார்கான் தனி விமானத்தின்மூலம் ஆகஸ்ட் 16இல் பெஷாவருக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு ஒரு மருத்துவ மனையில் சேர்க்கப்பெற்றார். ஜனவரி 9ஆம்நாளன்று (1988) நெஞ்சுவலி ஏற்பட்டு, அவரது உடல்நிலை மிகவும் மோசம் எய்தியது. ஜனவரி 20ஆம் நாள் தமது 98வது வயதில் அவரது உயிர் பிரிந்தது.

செய்தி அறிந்தவுடன் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, பெஷாவருக்குச் சென்று கபார்கானின் உடல் மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கபார்கானின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் 5 நாள் துக்கம் அனுசரிப்பதாக இந்திய அரசு அறிவித்தது. நல்லடக்கம் செய்யப் பெற்ற ஜனவரி 22ஆம் தேதி அரசு விடுமுறை என மைய அரசும், தமிழக அரசும் அறிவித்தன.

கபார்கானின் விருப்பப்படி அவரது உடல் ஆப்கானிஸ்தானத்தில் உள்ள ஜலாலாபாத்தில் -அவரது வீட்டுத் தோட்டத்தில் 22.1.88 அன்று நல்லடக்கம் செய்யப்பெற்றது.

காந்தியடிகளின் நெஞ்சம் கவர்ந்த தொண்டர்—அகிம்சை நெறியிலே பற்று வைத்திருந்த அன்பர்—மனிதாபிமானத்தின் காவலர்—தியாக வாழ்வை உலகுக்கு உணர்த்திய தீரர் கான் அப்துல் கபார்கான் என்பதை வரலாறு நமக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

# பண்டித ஜவகர்லால் நேருவின் பொன்மொழிகள்



உங்களுடைய செயல்களை எல்லாம் மதிப்பிடுவதற்கான உரைகல் இதுவே. மக்களை ஒன்று சேர்க்கின்ற காரியங்கள் எல்லாம் நல்லவை. மக்களைப் பிரித்து வைக்கும் காரியங்கள் எல்லாம் கெட்டவை.

இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவை அமைப்பவர்கள் என்பதை எப்பொழுதும் நான் உணர்கிறேன்; குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பொறுத்தே, ஒரு நாட்டின் எதிர்காலம் அமையும்.

நாம எல்லாரும் பெரும்பாலும் தன்னலம் படைத்தவர்களாகவே இருக்கிறோம். ஆனால், நம் குழந்தைகள் கூடியவரையில் தன்னலமற்றவர்களாக வளரும்படியான பயிற்சியை நாம் அளிக்கவேண்டும்.

ஒரு நாட்டில் இருக்கக்கூடிய இரும்பு, நிலக்கரி போன்ற இயற்கை வளங்கள் சிறந்தவை என்றாலும், ஒரு நாட்டிற்குச் சிறப்பு அந்த நாட்டு மக்களின் பண்பைப் பொறுத்தே ஏற்படுகிறது.

ஒருவன் எதை அளிக்கிறானோ, அதையே பெறுகிறான் என்பதை நான் உணர்கிறேன். ஒருவன் அன்பை அளித்தால், அந்த அன்பு பல மடங்காகத் திரும்பி வருகிறது. பகைமைக்குப் பதில் பகைமையே திரும்பி வருகிறது.

பிறர் நம்மைப்பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பதை விட, இறுதியில் நாம் எந்த நிலையில் இருப்போம் என்பதே முக்கியம்.

மக்களில் யாராவது என்னை நினைவில் வைத்துக் கொள்ள விரும்பினால், ''அவர் இந்தியாவையும், இந்திய மக்களையும், எண்ணத்தாலும், இதயத்தாலும் நேசித்தார்; மக்களும் அவரிடம் அளவிட முடியாத பேரன்பைச் சொரிந்தார்கள்'' என்று அவர்கள் சொல்வதையே நான் விரும்புகிறேன்.

நாம் சுதந்திரம் பெற்றதோடு ஒரு யாத்திரை முடிந்து விட்டது. ஆனால் இன்னொரு யாத்திரை தொடங்கி விட்டது; வறுமையை ஒழிப்பதற்காகவும், நல்வாழ்வுக்கு உகந்த சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும் துவங்கியுள்ள யாத்திரையே அது.

இல்லாமை, வறுமை, ஏற்றத்தாழ்வு ஆகியவற்றுக்கிடையே ஜனநாயகம் அதிக காலம் நிலைத்திருக்க முடியாது. பொருளாதார மேம்பாடும், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமே, நம் உடனடித் தேவைகள் ஆகும்.

சமூகத்தில் உள்ள குறைபாடுகளுக்குப் பொருளாதாரம் காரணமாக இருப்பதால், பொருளாதார ரீதியிலேயே அவற்றைப் போக்கியாக வேண்டும்.


நம்மிடையே தீண்டாமையும், ஜாதியமும் உலவும்வரை, சமதர்மமோ, ஜனநாயகமோ தழைக்க முடியாது. நாடு முன்னேற இக்கொடுமைகள் ஒழிக்கப்படவேண்டும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே நமது நோக்கம் என்பது தெளிவாகி விட்டால், கருத்து வேறுபாடுகளிலும், தத்துவ ரீதியான விவாதங்களிலும் சிக்க வேண்டிய அவசியம் இராது.

பகைமை உணர்ச்சியும், பலாத்காரப் போக்கும் தான் நம்மைப் பலவீனப்படுத்துகின்றன; பலாத்காரப் பாதையைப் பின்பற்றுகிறவர்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை கிடையாது.

சமாதானமும், சகிப்புத்தன்மையுமே நமது இலட்சியங்கள்: நம்மோடு ஒத்துப்போக முடியாதவர்களையும் அனுசரித்துக் கொண்டு போக நாம் விரும்புகிறோம். அதுதான் நம்முடைய மகத்தான போதனை. இது நமக்கு மட்டுமல்ல; உலகிலுள்ள மற்றவர்களுக்கும் தான்.

தொகுப்பு : வ. இராசமனோகரன்



# பாரத மாலை

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

வண்ண வண்ண மலர்கள் கொண்ட
மாலையைப் பாரீர் - அது
கண்ணைக்கவரும் இனிய நல்ல
காட்சியைக் காணீர்.

வெள்ளை சிவப்பு மஞ்சளாய்
வேறு வேறு நிறங்களில்
உள்ள இந்த மாலையோ
உள்ளம் கவர்ந் திழுக்குதே ;


நிறத்தில், குணத்தில், மணத்திலே,
நிறைய வேறு பாடுகள்
இருந்த போதும் நமக்கது
இன்ப மூட்டு கின்றதே !

தன்மை மாற வில்லையே!
தகுதி இழக்க வில்லையே!
எண்ணிப் பார்த்தால் பாரதம்
இந்த மாலை போன்றதே!

வேறு வேறு மாநிலம்
வேறு வேறு மொழிகளாம்
வேறு வேறு மதங்களாம்
வேறு வேறு நிறங்களாம்.

தமிழே எனது தாய்மொழி
தாய்மை நாடு பாரதம்
அமைதி யாக வாழவே
அரிய மருந்து உள்ளதே!

வேற்று மையில் ஒற்றுமை
விரும்பி மலர்கள் போலவே
கூட்டுச் சேர்வோம் மாலையாய்,
நாட்டு நலங்கள் பெருகவே!



**மணவழகர்**
**வடக்காலத்தூர்**
**கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு**

தமிழகத்துக்குத் தனிப் பெருமையைத் தேடித் தரும் பலவகைக் கலைச் சிறப்புக்களுள்ளே செப்புத் திருமேனிக்கலை உலகப் புகழை ஈட்டித்தரும் உன்னதக் கலையாகும். இதைப் 'படிமக்கலை' என்றும் பகர்வர் கலை வல்லார்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இக்கலை உருவான நோக்கம், கடவுளர் உருவங்களை வீதியுலா எடுத்துச் செல்வதற்கும், சிறு அளவில் செய்து வீட்டில் வழிபடுவதற்கும் ஏற்பட்டவை என்று கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் கோயில்கள் பெருகப் பெருக இக்கலையும் பெரும் அளவில் வளர்ந்தது.

செப்புப் படிமத்தில் இருவகை காணப்படுகிறது. 1. கனமாக இருப்பவை (Solid) 2. மற்றொன்று பொள்ளலாக ( Hallow ) இருப்பவை. வழிபடும் தெய்வங்களின் திருமேனிகள் அனைத்தும் பெரும்பாலும் கனமாகச் செய்யப்படும். தெய்வங்களின் வாகனங்கள் பொள்ளலாகச் செய்யப்பட்டிருக்கும். இவைகளைக் கனமாகச் செய்தால் வீதியுலாவில் தூக்கிச் செல்லுதலும் கடினம். அத்தோடு அவை செய்வதற்கு அதிக அளவில் உலோகக் கலவை தேவைப்படும்.

கனமாக இருக்கக்கூடிய செப்புத் திருமேனிகளைச் செய்கின்ற முறைக்கு மெழுகு இழப்பு முறை என்று கூறுவர். மெழுகினால் படிமத்தைச் செய்து அதனை மணிப் பூச்சுகளால் கவசமாக மூடி அது நன்றாகக் காய்ந்தபின் அதைச் சுட்டு மெழுகை உருக்கி, வெளியேற்றி, உள்ளீடற்ற மண், அதாவது கரு தயாரிக்கப்படுகிறது. உரிய உலோகங்களைக் கலந்து உருக்கி அக்கருவுக்குள் ஊற்றி அவ்வுலோகம் ஆறியபின் மண் கருவை நீக்கி உலோகப் படிமம் வெளிக்கொணரப்படுகிறது. இதற்கு மெழுகு இழப்பு முறை என்று பெயர். இம்முறையை ஐந்து நிலையாகப் பிரிப்பர். 1. மெழுகு பிடித்தல், 2. கருக் கட்டுதல், 3. வார்த்தல், 4. வெட்டி ராவிச் சீவுதல், 5. தீர்மானம் செய்தல் ஆகியவையாகும்.

படிமத்தை மண்ணால் செய்து அதன் மீது தகடு போல் மெழுகை எங்கணும் ஒட்டி அதன் மீது பூச்சு மண், படிமண் ஆகியவற்றை முன்போல் கட்டியமைத்து இடையிலுள்ள மெழுகை உருக்கி வெளியேற்றி உள்ளீடற்ற மண் கரு தயாரிக்கப்படுகிறது. இங்ஙனம் கிடைத்த கருவின் உட்கூட்டில் உலோகத் திரவத்தை ஊற்றி முன்போல்கூட்டை உடைத்துப் படிமம் வெளியே கொண்டுவரப்படுகிறது. இதற்குக் களிமண் கட்டு உடைப்புமுறை என்று பெயர்.

செப்புப் படிமக்கலை, கல் உருவக் கலையைவிடப் பழமையானது என்று கூறலாம். கல்லால் உருவம் செய்யும் கலை பல்லவர் காலத்தில் தோன்றியிருக்கலாம். கல்லில் உருவம் அமைப்பதற்கு முன்பாக சுதையாலும், மரத்தாலும் உருவங்கள் செய்யப்பட்டன. அந்தச் சமயத்தில் நிலைத்த பொருளான செம்பினால் உருவம் செய்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் கி.மு. 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த செப்புச் சிலைகளை நாம் ஆதிச்சநல்லூரிலிருந்து கண்டெடுக்க முடிந்திருக்கிறது. மொஹஞ்சோதரோவில் கிடைத்துள்ள நாட்டிய மகளின் உருவமும் இதற்குச் சான்றாக நிற்கிறது.

தொடக்க காலத்தில் செய்யப்பெற்ற செப்புஉருவங்கள் வெறும் வழிபாட்டுக்கு மட்டும் செய்யப்பெற்றவையாக இருக்கும். நாளாக ஆக வழிபாட்டு முறையில் பல சடங்குகள் ஏற்பட்டவுடன், செப்புப் படிமங்கள் வீதியுலாவிற்கு எடுத்துச் செல்வதற்காகவும் அமைக்கப்பட்டன.

பிற்காலங்களில் ஆலயங்களில் நித்ய விழாக்களும் பருவ விழாக்களும், ஆண்டு விழாக்களும் அதிகரித்தன. அத்தகைய விழாக்களில் என்னென்ன திருவுருவங்கள் வீதியுலா எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும் என்றெல்லாம் வரன்முறைப் படுத்தப்பட்டுள்ளன. நித்ய உத்சவங்களில் விநாயகர், சிவன், தேவி (அம்மன்) பாசுபத மூர்த்தி, அஸ்திரதேவர், கோலகலிங்கம், ஸ்கந்தர் விருஷராஜர் மற்றும் சண்டேசர்ஆகிய திருவுருவங்களை வீதியுலா எடுத்துச் செல்லுதல் வேண்டும் என்று ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. வைணவ ஆகமங்கள் அர்சா மூர்த்தி என்று செப்புப் படிமங்களைக் குறிப்பிடுகின்றன. அர்சா மூர்த்தி படிமங்கள் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை 1. கர்ம படிமங்கள், 2. உற்சவப் படிமங்கள், 3. பலி படிமங்கள்; 4. ஸ்நாந படிமங்கள், 5. சயன படிமங்கள். கர்மப் படிமங்கள் நித்ய வழிபாட்டுக்கும், உற்சவ படிமங்கள் விழாக்களுக்கும், பலி படிமங்கள், பலி வழங்குதலுக்கும், ஸ்நாந படிமங்கள் நீராட்டலுக்கும், சயனப்படிமங்கள் பள்ளி அறைக்குமாகப் பயன்படுத்தப்படும். வைணவ ஆலயங்களில் மூல விக்ரகத்தோடு சில செப்புத் திருமேனிகளும், உண்ணாழியில் வைக்கப் பெற்றிருக்கும். இவ்விக்ரகங்களுக்கு, நித்ய வழிபாடு நடைபெறும் ஆண்டு உத்சவங்களின்போது இவைகள் வீதியுலாவுக்கும் எடுத்துச் செல்லப்படும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஏறக்குறைய 2700 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செப்புப் படிமம் செய்யும் பழக்கம் நிலவி வந்துள்ளது. தமிழ்நாட்டின் மிகப் பழைய செப்புப் படிமம், திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில், கிடைக்கப்பெற்றது தான். இப்படிமம் தாய்த் தெய்வமாக இருக்கலாம் என்று வல்லுநர்கள் கருதுகிறார்கள். இது தற்பொழுது அரசு அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

# செப்புத் திருமேனிகள்

நடன காசிநாதன்,
துணை இயக்குநர்,
தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை,



குகாம்பிகை
பல்லவனீச்சுவரம்
கி.பி. 9-10— ஆம் நூற்றாண்டு
மேலப் பெரும்பள்ளம்-
பூம்புகார்

சங்க காலத்திலும் செப்புத் திருமேனி வழக்கில் இருந்திருக்கும் என்பதற்குப் பல சான்றுகளை நம் இலக்கியங்கள் தருகின்றன. மதுரை அங்காடியில் செம்பை நிறுத்து வாங்குவோரைப் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. மதுரை அங்காடிகளில் செம்பு வெண்கலம் ஆகியவற்றால் செய்யப்பெற்ற பொருட்கள் மிகுதியாகக் கிடைத்தன என்று சிலம்பு கூறும். செம்பு, வெண்கலம் ஆகியவற்றில் வேலை செய்தவர்கள் பூம்புகாரிலும் வஞ்சிமாநகரிலும் வாழ்ந்திருந்தார்கள் என்று காண முடிகிறது. பொன்னால் செய்யப்பட்ட பாவையைப் பற்றி மதுரைக் காஞ்சியும் (410), அகநானூறும் (127:8, 212:1) குறிப்பிடுகின்றன.

நாயன்மார் ஆழ்வார் காலங்களிலும் சிவன், திருமால் உருவங்கள் பல வடிவில் பாடப்பட்டிருக்கின்றன. இவர்கள் காலங்களில் கோயில்கள் அதிக அளவில் உண்டாகிவிட்டன.

''எரிஎழுகின்ற செம்பினாலியன்றபாவை'' எனப் பெரிய திருமொழி கூறும். சிவலிங்கம் செய்யப்பட்ட பொருட்களில் செம்பும் ஒன்றாகும் என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

செப்புத் திருமேனிகளின் ''பொற்காலம்'' என்று சோழர் காலத்தைக் குறிப்பர். சோழர் காலச் செப்புத் திருமேனிகள் பெருமளவில் கிடைத்து அனைத்துலகக் கவனத்தையும் தமிழகத்தின்பால் திருப்பியுள்ளன. இன்று உலக அரங்கிலே தமிழ்நாட்டுக்குத் தனிச்சிறப்பு அளிக்கப்படுகிறதென்றால், அதற்குள்ள தலையாய காரணம் சோழர் காலச் செப்புத் திருமேனிகளேயாகும்.



**அன்னைத் தெய்வம்**
**ஆதிச்சநல்லூர்**
**கி.மு. ஏழாம் நூற்றாண்டு**

நடராசரின் திருவுருவம் அகில உலகத்தையும் தமிழகத்தின்பால் ஈர்க்கும் அற்புதத் திருவுருவமாகும்.

சோழர் காலச் செப்புத் திருமேனிகளை மூன்று வகையாகப் பிரிப்பர் கலைவல்லார். விஜயர்லயன் காலம் முதல், பராந்தகன் காலம் வரை முதற்பிரிவு என்றும்; செம்பியன் மாதேவி காலச் செப்புத் திருமேனிகள் இரண்டாம் வகையைச் சார்ந்தவைஎன்றும், முதலாம் இராசராசன் காலம் தொடங்கி அடுத்து வருபவை மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவை என்றும் கூறுவர். சோழர் காலத்தில் செப்புத்திருமேனிக்கலைக்கு உயிரோட்டமாகவும் உற்சாகப்படுத்துபவராகவும் விளங்கியவர் சோழர் மன்னன் கண்டராதித்தனின் பட்டத்தரசி செம்பியன் மாதேவியாரே யாவர். இவர் காலத்தில் தமிழகத்தில் இருந்த பல ஆலயங்களுக்குச் செப்புத் திருமேனிகள் செய்திருக்கிறார். தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோனேரிராஜபுரம், நல்லூர் ஆகிய ஊர்களில் காணப்பெறும் செப்புத் திருமேனிகள் இவர் காலச் செப்புத் திருமேனிகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். திருவெண்காட்டில் கிடைத்த கல்யாண சுந்தரர் செப்புத் திருமேனி இராசராசன் காவத்தினைச் சேர்ந்தது. பருத்தியூர் திருமாலின் செப்புத் திருமேனி ஆதித்தன் காலக் கலைப் பாணியைச் சேர்ந்தது.

சோழர் காலச் செப்புத் திருமேனிகள் எவ்வாறு செய்யப்பெற்றன என்று அறிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களே போதுமான சான்றாகும். திருமேனிகளில் உள்ள உலோக அளவுகள், அங்க அளவுகள், அவைகளின் வழிபாட்டுக்கு அளிக்கப் பெற்ற கொடைகள் ஆகியவைகளை விரிவாக அக்கல் வெட்டுக்களில் காணலாம்.

பிற்காலப் பாண்டியர்கள் சோழர் கலைப் பாணியைப் பின்பற்றியே செப்புத் திருமேனிகளைப் படைத்திருக்கின்றனர். விஜயநகர, நாயக்க மன்னர்கள் காலத்திலும் இக்கலை சிறப்புப் பெற்றிருந்தது என்றாலும் கலையழகு சிறுகச் சிறுகத் தேயத் தொடங்கிவிட்டது. நாயக்கர் காலத்தில் செம்பால் செய்யப்பட்ட திருமேனிகள் அல்லாமல், பொன்னாலும் சில திருமேனிகள் செய்யப் பெற்றிருப்பதை அறியும்போது, பொன்னால் பாவை செய்யும் பழக்கம் கொண்டிருந்த சங்க கால மரபு தொடர்ந்து இருந்துவந்தது என்பதை உறுதிப்படுத்துகிறது.

கி.மு.7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அன்னைத் தெய்வந்தான் தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள செப்புச் சிலைகளுள் பழமையானது. இதன் அளவு மிகச் சிறியது. ஆனாலும் உருவ அமைப்பு எழில் வாய்ந்து காணப்படுகிறது.

இச்சிலையை வீட்டில் வைத்து வழிபாடு செய்து வந்திருத்தல் வேண்டும். ஆதலால், இறந்த உடலோடு இதையும் தாழியில் இட்டுப்புதைக்கின்றனர், பண்டைத் தமிழ் மக்கள். இச்சிலையோடு வேல், கத்திகள், விளக்குகள் என்று வேறுபல பொருட்களும் கிடைத்துள்ளன. அனைத்தும் வீட்டுப் பொருள்களாகவே காட்சி தருகின்றன. அளவின் 7 செ.மீ. தன்மையைப் பார்க்கையிலும் இது வீதியுலாவுக்காகச் செய்யப்பெற்றதாகத் தெரியவில்லை. ஆதலால் செப்புத் திருமேனிகள் முதல் முதலில்



**பரவைநாச்சியார்**
**சிதம்பரம்**
**கி.பி. பத்தாம் நூற்றாண்டு**

வீட்டில் வைத்து வழிபடுவதற்காகத் தோன்றியவை களாக இருக்கலாம்.

சங்க காலத்தில் விழாக்கள் பற்றியும், கடவுளர் திருவுருவங்கள் வீதியுலா வந்ததாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் வீதியுலாவந்ததிருவுருவங்கள் பொன்னாலும் செம்பாலும் செய்யப்பெற்றவைகளா என்பது சந்தேகமே. ஏனெனில் அவ்வாறு இருந்திருந் தால் ஒன்றிரண்டாவது இதுவரையில் கிடைத்திருக்கக் கூடும். சங்க காலத்தில் வீதியுலா வந்தவைகள் மரத்தால் செய்யப்பெற்றவைகளாக இருந்திருக்கலாம். ஆதலால் அவை அழிந்துவிட்டன. வீட்டில் வைத்து வழிபடுவதற் குச் சிறிய அளவில் பொன்னாலும், செம்பாலும் திரு வுருவங்கள் செய்யப்பெற்றிருக்கலாம். அவைகள் கூட இன்னமும் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. காவிரிப் பூம்பட்டின அகழி வாயினில் கிடைத்துள்ள புத்தர் திருமேனி போன்று சிறிய அளவில்தான் உருவங்கள் எதிர்கால அகழ்வாய்வுகளில் கிடைக்கக்கூடும்.

அடுத்து வரும் முற்காலப் பல்லவர் காலத்தில்கூட' சுமார் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு வரையில் சிறு சிறு உருவங்களே செம்பால் செய்யப்பட்டிருக்கின்றன. சிறு சிறு உருவங்களே ஆயினும் கலையழகு நிரம்பியதாய் மிளிர்கின்றன. இவைகளைக் கண்ணுறும்போது இவை வீதியுலாவுக்கு எடுத்துச் செல்பவைகளாகத் தோன்ற வில்லை. வீட்டில் வைத்து வழிபடும் தெய்வங்களாகவே காணப்படுகின்றன. கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை மரச்சிற்பங்களே வீதி உலா வந்திருக்க வேண்டும் என்று நம்பலாம்.

**செவ்வேள்**
**கங்கைகொண்ட சோழபுரம்**
**கி.பி. பதினோராம் நூற்றாண்டு**





**ஏறு ஊரும் பெருமான்**
**திருவெண்காடு**
**கி.பி. பதினோராம் நூற்றாண்டு**

அதற்குப் பிறகு கட்டடக்கோயில்கள் கட்டத் தொடங்கிய பிறகு பெரும் சிற்பங்கள் ( Figure in Round ) மற்றும் செப்புத் திருமேனிகள் உருவாக்கப்பட் டிருக்கலாம். இந்தச் செப்புத் திருமேனிகள் வீதியுலா வுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கும். ஆதலால்தான் மிகுந்த அளவில் கோயில்கள் தோன்றத் தோன்ற செப்புத் திருமேனிகளும் உருவாயின.

பல்லவர் காலச் செப்புத் திருமேனிகளே இல்லை யென்று சில ஆண்டுகளுக்கு முன்புவரை கூறிவந்தனர். தற்பொழுது பல்லவர் காலச் சிற்பங்களுக்கும் சில செப் புத் திருமேனிகளுக்கும் உள்ள கலைத்தன்மையின் ஒற்று மையைக் கருத்தில் கொண்டு பல்லவர் காலத் திருமேனிகள் கிடைத்துள்ளதை ஒப்புக் கொள்கின்றனர். தஞ்சை மாவட்டம் திருவாலங்காட்டு சோமாஸ்கந்தர் விஷபாஹரணர், கூரம் நடராஜர், காவிரிப்பூம்பட்டி னத்து மைத்ரேயர், வேளச்சேரி விஷ்ணு, சிங்காநல்லூர் திரிவிக்கிரமர், திருநெய்ப்பேர் திரிபுராந்தகர், வடக்கா லத்தூர் கல்யாணசுந்தரர் ஆகியவை பல்லவர் காலச் செப்புத் திருமேனிகள் என்று உறுதியாகக் கூறுகின் றனர்.

இச்செப்புச் சிலைகளின் அகலமானமார்பும், தடித்த கீழ் ஆடையும், ஆடையின் மீது கீழே தொங்கும் தடித்த துணியும் பல்லவர் காலக் கலையைப் பறைசாற் றுவதாக உள்ளன. காஞ்சிபுரம் மாமல்லபுரம் சிற்பங்கள் எவ்வாறு உள்ளனவோ அவை போன்று காணப்படுகின் றன. பல்லவர் காலச் செப்புச் சிலைகளைக் கூர்ந்து கவனிக்கையில் மெழுகு வடிவத்தில் திருவுருவத்தை

அமைக் கையிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தி நேர்த்தியாகச் செய்திருக்கின்றனர் என்றும், அச்சாக வார்த்தெடுத்த பின்பு அதிகக் கவனம் செலுத்தி இறுதி வடிவம் கொடுக்கத் தேவையில்லாமல் செய்திருக்கின்றனர் என்றும் அறிய முடிகிறது.

காவிரிப்பூம்பட்டினத்து போதி சத்வமைத்ரேயர் உருவம் பல்லவர் காலக் கலைப் பாணிக்குச் சிறந்த உதாரணமாகும். விரிந்த மார்பு பட்டையான கழுத்தணியும், வலது முழங்கை மீது ஏறிச்செல்லும் புரி நூலும் தடித்த கீழாடையும், ஆடையின் ஒரு பகுதியாகத் தொங்கும் அணியும், பல்லவவீர காலக் கைத்திறனைப் புலப்படுத்தும் புறச்சான்றுகளாகும். மைத்ரேயரின் முகம் இளமைப்பொலிவு ததும்பும் வண்ணம் காணப்படுகிறது. சென்னை அருங்காட்சியகத்தில் அண்மைக் காலம்வரை இருந்த இந்திருமேனி தற்பொழுது அங்கு இல்லை.

பல்லவர் காலச் சிற்பிகள் விஷ்ணு, துர்க்கை ஆகிய உருவங்களைதான் அதிக அளவில் கல்லிலும் செம்பிலும் செய்திருக்கிறார்கள். அவர்கள் காலத்திய விஷ்ணு திருவுருவங்கள் சிறிய அளவிலும், பெரிய அளவிலும் மிக நேர்த்தியாகக் காணப்படுகின்றன.

விஷ்ணுவாக நின்ற கோலத்திலும் சரி, ஓங்கி உலகளந்த உத்தமராகக்காலைவிண்ணுக்கு உயர்த்தி நிற்கும் கோலத்திலும் சரி, மிக அற்புதமாக வடித்திருக்கின்றனர் பல்லவர் காலச் சிற்பிகள். கொடுமுடி, மற்றும் வேளச்சேரி விஷ்ணு, சிங்காநல்லூர் திரிவிக்கிரமர் ஆகிய திருமேனிகள் ஒப்பில்லா உயர் திருமேனிகளாகும்.

வடக்காலத்தூரில் அம்மையும் அப்பனும் திருமணக் கோலத்தில் செய்யப்பட்டிருக்கும் பாங்கு தமிழ்நாட்டுக்கே பெருமை தேடித் தரும் திருக்கோலமாகும். மலையரையன் பொற்பாவை, வான்நுதலாள் பெண் திருவை இறைவன் உலகறிய தீ வேட்டதைக் காட்டா நிற்கும். சிவன் யௌனப் புருஷராகவும், உமை நாணம் மீதுற தலைதாழ்ந்து நிற்கும் மணப்பெண்ணாகவும் வார்க்கப்பெற்றிருக்கும் திருமேனிகள் உலகத்திலுள்ள கலா இரசிகர் அனைவரையும் பார்த்துப் பார்த்துப் பரவசப் படவைக்கும் ஒப்பற்ற படிமங்களாகும். சிவன், பார்வதி திருமேனிகள் கல்யாணசுந்தரர் வடிவில் காணப்படுபவற்றுள் இவையே பழமையானவை.

அதேபோன்று திருநெய்ப்போரில் உள்ள விஷ்ணு மற்றும் திரிபுராந்தகர் திருமேனிகள் பல்லவர் காலத்தில் படிமக்கலை நல்ல பக்குவ நிலையை அடைந்துவிட்டது என்பதைப் பகர்வதாய் உள்ளன.

திருநாமநல்லூர் திருத்தொண்டீசுவரர் கோயிலில் உள்ள சோழன் பராந்தகனின் முப்பத்தெட்டாவது ஆண்டுக் கல்வெட்டு ''திருநாவலூர்வியாபாரி முருகன் வீச்சியன் அட்டுவித்த கூத்தப் பெருமாளுக்கு வைத்த விளக்கைக்" குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப் பெறும் கூத்தபிரான் நடராசர் திருமேனியே என்று கொள்ளலாம். நடராசர் வடிவம் பற்றிக் குறிப்பிடும் காலத்தால் முந்தைய செய்தி இதுவேயாகும்.

இராசராசன் கால கலைப் பாணியில் பல அரிய செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றன. இக்கலைப் பாணிக்குச்சிறந்த உதாரணங்களாகத் திருவெண்காட்டுச் செப்புத் திருமேனிகளான ஏறூரும் பெருமான், தேவி, உமையொருபாகன், கல்யாணசுந்தரர், பிச்சாடனர், கண்ணப்பர் ஆகிய படிமங்களைக் கூறலாம். திருவெண்காட்டில் இராஜராஜனது 26ஆம் ஆட்சி ஆண்டு (கி.பி.1011) கல்வெட்டில் ரிஷபவாகன தேவருக்கு அணிகலன்களுக்காகவும் பூசைக்காகவும் கொடை அளித்தது பற்றிய செய்தி காணப்படுகிறது. இக்கல்வெட்டு குறிப்பிடும் ரிஷபவாகன தேவர்தான் இன்று உலக மகா புகழ் பெற்றுவிளங்கும் தஞ்சைக் கலைக்கூடத்து ரிஷபவாகன தேவர். இத்திருமேனி பாரிஸ் மாநகர் வரை சென்று வந்துவிட்ட ஒன்றாகும்.



பார்வதி
நல்லூர்
கி.பி. பத்தாம் நூற்றாண்டு

இறுதியாக கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள சுப்ரமண்யர் திருமேனியைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

சமபங்கத்தில் இரு கால்களையும் நேராக பத்மாசனத்தில் நிறுத்தி நான்கு கரங்களுடன் வலது மேற்கையில் வேலாயுதமும் இடது மேற்கரத்தில் சேவலையும் ஏந்தி நிற்கும் முருகனின் அழகே அழகு. முருகு என்றால் இளமை. அழகு என்று பொருள். அப்பொருளுக்கு இலக்கண மாக இப்படிமத்தை ஆக்கியுள்ளான் சோழர் காலச் சிற்பியானவன்.


முருகனுக்குச் சேனாபதி என்ற பெயரும் உண்டு. அதற்கு அடையாளமாக இடது கீழ்க்கரத்தில் கேடயம் காணப்படுகிறது.

சங்க காலம் தொட்டே முருகன் சேவற்கொடியோன் என்று பாராட்டப்படுகிறான். மதுரையம்பதியில் முருகனுக்கு எடுப்பிக்கப்பெற்றிருந்த கோயில்,
''உவணச் சேவல் உயர்த்தோன் நியமம்'' என்றும்,
''கோழிச் சேவல் கொடியோன் கோட்டமும்'' என்றும் குறிக்கப்படுகிறது.

கோழிச் சேவல் கொடியோனுக்கு வடிவம் தந்து வணங்கப்பட்டிருப்பதைக் கங்கை கொண்ட சோழபுரத் திருமேனி காட்டி நிற்கிறது.


இவ்வாறு செப்புப் படிமக்கலை, தமிழகத்தில் ஒரு தொடர்கலையாக என்றும் நிலைத்து நிற்கக்கூடிய கலையாக இன்றும் உயிரோட்டமாக சுவாமிமலை, மாமல்லபுரம் போன்ற இடங்களில் வழக்கில் இருக்கக்கூடிய கலையாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டுக்குப் பெருமையும் புகழும் தேடித்தரும் இக்கலையை நாம் மேலும் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும்.

# அந்நியச் செலாவணி ஈட்டித்தரும் கைவினைப் பொருட்கள்



கலை நுணுக்கம் செறிந்தஇந்திய கைவினைப் பொருட்கள், ஏற்றுமதித் துறையில் தனியாட்சி செலுத்துகின்றன. இந்தியஅரசுக்கு கணிசமாக அந்நியச் செலாவணி ஈட்டித்தரும் பெருமையுடைய கைவினைப் பொருட்கள் 1986-87-ஆம் ஆண்டில் ஆபரணங்கள் நீங்கலாக ரூ. 415-5 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அதற்கு முந்தைய 1985-86-ஆம் ஆண்டில் இவற்றின் ஏற்றுமதி ரூ. 392.34 கோடி.

நம்முடைய கைவினைஞர்களில் பெரும்பாலோர் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் போன்ற சமூகத்தின் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்தவர்களே. மகளிர் வினைஞர்களும்



கணிசமாக உள்ளனர். தோராயமாக 27.50 இலட்சம் மக்கள் இத்துறையில் ஈடுபட்டுள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாய் இந்த நுணுக்கம் நிறைந்த கலையைப் பாரம்பரியமாகச் சுவீகரித்து நம் மக்களின் வாழ்க்கையை மேலும் ஒளிநிறைந்ததாகவும் மகிழ்ச்சியானதாக்வும் ஆக்குகின்றனர் இக்கலைஞர்கள்.

கைவினைப் பொருட்கள்வளர்ச்சி ஆணையர் அலுவலகம் நாடு முழுவதும் 47 விற்பனை மையங்களையும், விரிவாக்க சேவை மையங்களையும் ஏற்படுத்தியுள்ளது. நாகாலாந்தின் 'கொகிமா'விலிருந்து குஜராத்தின் 'புஜ்' வரையிலும், காஷ்மீரத்தின் 'அனடாங்'கிலிருந்து தமிழகத்தின் 'நாகர்கோவில்' வரையிலும். இந்த மையங்கள் விரிந்து பரந்துள்ளன. இந்த விற்பனை மையங்கள் அவற்றின் பகுதிகளில் உற்பத்தியாகும் கைவினைப் பொருட்கள், பிற மாநிலங்களில் தயாரிக்கப்படும் பொருட்கள்பற்றிய சிறப்பு வளர்ச்சித் திட்டங்களையும் அறிமுகப்படுத்துகின்றன. கைவினைப் பொருட்கள் வளர்ச்சித் திட்டம் என்றழைக்கப்படும் இவற்றின்மூலம் கைவினைஞர்களுக்கும் ஏற்றுமதியாளர், வாடிக்கையாளர்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்படுகிறது. இந்த நேரடித் தொடர்பால் நுகர்வோரின் தேவை மற்றும் விருப்பம் குறித்து கைவினைஞர்கள் அறிவதுடன், உடனடிப் பயனும் அவர்களுக்குக் கிட்டுகிறது. ஒருமுறை ஏற்பட்ட தொடர்பு தொடர்ந்து வலுப்பெற்றுக் கைவினைஞர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே இடைத்தரகரின் இடர்ப்பாடு இன்றி நன்மை கிட்டுகிறது.

கைவினைப் பொருட்களின் வளர்ச்சி ஆணையர், தமிழ்நாடு கைவினைப் பொருள் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் 'கைவினை விழா'ஒன்றைச்சமீபத்தில்சென்னையில் ஏற்பாடு செய்திருந்தார். கலைப் பொருட்களின் மேன்மையை உணர்ந்த ரசிகர்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் கைவினைஞர்களின் நேரடித் தொடர்பு ஏற்பட இது உதவியது.

மிருதுவான குளிர்ச்சியூட்டும் சிட்டல்பட்டி பாய்கள், குஜராத்தின் கண்ணைப் பறிக்கும் கல்விழைத்த ஆபரணங்க்ள், ஒப்புயர்வற்ற வாதுமைவிதைச் சிற்பங்கள், காஷ்மீரத்துக் கம்பளங்கள், ஆந்திரத்துக் கலம்காரி ஓவியங்கள்,ஒரிசாவின் வண்ணக்கலவைப்படைப்புகள் மெருகெண்ணெய் பூசிய வலுவான மரச்சாமான்கள், மணம்வீசும் சந்தன மரப்படைப்புகள் என்று எத்தனையோ வகைக் கலைப் படைப்புகள் இதில் இடம் பெற்றன.

கைவினைப் பொருட்களின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் பல முயற்சிகளில் இந்தக் கைவினை விழாவும் ஒன்றாகும். சந்தைக்கூட்டங்கள், கண்காட்சிகள், தொழில்நுட்பக் கருத்தரங்குகள் போன்ற பிற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகையநிகழ்ச்சிகளில் பங்கு பெற கைவினைஞர்களுக்கு நிதியுதவி செய்து, இடைத்தரகர்கள் இல்லாமலேயே, அவர்களின் பொருட்களை விற்பனை செய்ய உதவி செய்யப்படுகிறது.

சமீபத்திய கைவினை விழாவில் கைவினைப் பொருட்களின் தயாரிப்பில் உள்ள நுணுக்கமான பணிகள் பற்றி விளக்கும் நிகழ்ச்சியும் சேர்க்கப்பட்டது. அக்கறையுடன் கலை நுணுக்கத்துடன் அவர்கள் அப்பணியில் ஈடுபட்டிருப்பதைக் காண்பதே ஓர் இனிமைமிகு அனுபவம். இக்கலைஞர்கள் பாரம்பரியமாய் தாங்கள் செய்து வந்த இந்தக்கலையின் நுணுக்கத்தை பலருக்கும் பயிற்றுவித்துள்ளனர்.

-பத்திரிகை தகவல் அலுவலகம்

# பொதிகை மலை காணிப் பழங்குடிகள்



தமிழ்நாட்டின் தென்கோடியில் அமைந்துள்ள குமரி மாவட்டத்திலும், அதை நெருங்கியுள்ள நெல்லை மாவட்டத்திலும், மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளில் எளிய விவசாயத்தை ஏற்றுள்ள ''காணி'' எனப்படும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். கணியன், கணிக்காரன், கணிக்கர், வேலன் மாரன், மலைஅரசன் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்ற இவர்கள், நிலம் வைத்திருப்பவர், நிலச் சொந்தக்காரரர், தலைமுறை தலைமுறையாக நில உரிமையாளர் என்ற காரண கருத்தை ஒட்டி, இவர்களுக்கு, 'காணி' என்ற பெயர் வந்துள்ளதாக்கூறப்படுகிறது.

## காணிகளின் குடியிருப்பு

மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்புறச் சரிவுப் பகுதியைக் கொண்டதே பொதிகை மலையாகும். உலகிலேயே வரலாற்றுப் பெருமை மிக்க தமிழ்மொழியை வளர்த்து, வானளாவிய புகழ் பெற்ற அகத்திய முனிவர் வாழ்ந்த இடமும் பொதிகை மலையேயாகும்.

இப்பொதிகைமலையே காணிப் பழங்குடிகளுக்கும் இருப்பிடமாக நாளடைவில் அமைந்தது. மேலும் காணி என்ற தங்களின் பெயரும் அகத்திய முனிவர், தங்களுக்கு இட்ட பெயர் என்றும் அவர்கள் கருதுகின்றனர். மேல் பாபநாசத்தில் தங்கள் குடியிருப்பின் பகுதியை அகத்தியபுரம் என்று இவர்கள் பெயரிட்டுள்ளார்கள். இப்பொதிகைச் சரிவில் தாழ்வான காட்டுப்பகுதிகளில் சுமார் ஆயிரம் அடி உயரத்தில் உயர்ந்த மரங்களின் நடுவிலும், அடர்ந்த மூங்கில் புதர்களின் இடுக்கிலும், இம்மக்களின் குடியிருப்புகள் காணப்படுகின்றன. இவர்கள் குடியிருப்பின் மேற்குப்பகுதி குமரி மாவட்டத்திலும், கிழக்குப் பகுதி நெல்லை மாவட்டத்திலும் பரவியுள்ளது. இப்பகுதிகளை வளப்படுத்த முப்பெரும் ஆறுகள் எழிலுடன் பாய்கின்றன. கோதையாறும், மாசிப்பட்டி ஆறும், மேற்குப் பகுதியான குமரியில் தொடங்கி அரபிக்கடலை வந்தடைகின்றன. அவ்வாறே கிழக்குப் பகுதியின் நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணியாறு தோன்றி வங்காள விரிகுடாக்கடலை கடைசியில் அடைகிறது. இந்த மூன்று நதிகளும் மலைக்காட்டுப் பகுதிகளிலிருந்து சம நிலப்பகுதிகளுக்குப் பாய்ந்தோடும் ஆற்றங்கரை ஓரப் பகுதிகளில் தான் காணிகளின் குடியிருப்பு அமைந்துள்ளது.

## பயிர்த் தொழில்

1981- ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, குமரிமாவட்டத்தில்47குடியிருப்புப் பகுதிகளில் 656 குடும்பங்களாக, சுமார் 2576 காணிகள் வாழ்ந்து வருகின்றனர். இதைப்போன்றே நெல்லை மாவட்டத்தில் 4 குடியிருப்புப் பகுதிகளில் 75 குடும்பங்களாக சுமார் 285 காணிகள் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்களின் குடியிருப்புகள் தனித்தன்மையானவை. சாதாரணமாக காட்டுப் பகுதியில் வாழும் மக்கள் தாங்கள் பயிரிடும் நிலங்களுக்குச் சற்று அப்பால், தங்களது குடியிருப்பை அமைப்பது வழக்கம். இதற்குமாறாக, காணிகள் தங்கள் நிலங்களின் நடுவிலேயே குடியிருப்பை அமைத்து வாழ்கின்றனர். உதாரணமாக மேல் பாபநாசம் பகுதியில் அகத்தியர் காணிக் காலனியில் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஒன்றரை ஏக்கர் நிலத்தின் நடுவில் அவரவர் குடும்பங்களின் வீடுகளை அமைத்துள்ளனர்.

சுற்றிலும் மரவள்ளிக்கிழங்கும், மிளகும் பயிரிடுகின்றனர். மேலும் பலா, தென்னை, வாழை, கொய்யா மரங்களும் நிலத்தில் வளர்க்கப்படுகின்றன. இம்மர நிழல்கள் கிழங்கு வகைகளைப் பயிரிட பெரிதும் உதவுகின்றன. இம்முறையே காடு


**டாக்டர் நே. தேவசகாயம்,**
**காப்பாட்சியர், மானிடவியல்**
**அரசு அருங்காட்சியகம்,**
**சென்னை.**


களின் சரிவுகளில் பயிரிடும்போது அனுசரிக்கப்படுகின்றது. இந்த முறைப்படி ஒரு குறிப்பிட்ட காட்டுப்பகுதியில் காட்டைச் சேதப்படுத்தாமல், பெரிய கனிதரும் மரங்களையும் வெட்டாமல், சிறு கொடிகள், சிறு செடிகள்ளமட்டுமே எரித்து களைக்கொத்து மூலமாக நிலத்தின் சிற்சில பகுதிகளைத் தோண்டி, மரங்களின் இடைவெளியில் தேவையான தானியங்களையும், கிழங்கு வகைகளையும், நிழலின் பார்வையிலே பயிரிடுதல், இவர்களின் இடம் விட்டு இடம் பெயர்ந்து காட்டில் பயிரிடுதலின் ஒரு சிறிய அம்சமாகும்.

பயிரிடுதல் தவிர, காட்டில் உணவுப் பொருள்களைச் சேகரிப்பதிலும் இவர்கள் வல்லவர்கள். முக்கியமாக, காட்டுத்தேனைச்சேகரிக்க மரத்தின் தண்டில் மரஆணிகளைப் படிப்படியாக இவர்கள் இறக்காமல் மரக்கொம்புகளைத் தொடர்ச்சியாக மரத்தண்டில் கட்டி, அதில் காலை வைத்து மேலே செல்வர்.

**வேட்டையாடுதல்**

வேட்டையாடுதலிலும், சாதாரண வில் அம்புகளை இவர்கள் உபயோகித்தாலும், .பறவைகளை வேட்டையாட உண்டை வில்களில் கூழாங் கற்களை வைத்து உபயோகிப்பது இம்மக்களின் தனித்தன்மையாகும். இவர்கள் மலைக்காட்டுப் பகுதியில் மலைப்பாம்பை வேட்டையாடுவது மிகவும் சிறப்பானது. காணப்படும் மலைப்பாம்புகளை ''V'' வடிவம் கொண்ட தலை பாகத்தை உடைய கழியின் உதவியால் பாம்பின் கழுத்தையும் வாலையும் அழுத்திப்பிடித்துக் கொள்வர். பிறகு வயிற்றைக் கத்தியால் கீறி உள்ளே அடங்கியுள்ள கொழுப்பை வெளியே எடுத்துவிடுவர். கிழித்த பாகத்தை மீண்டும் ஒன்று சேர்த்துக் காட்டுப் பனைநாரின் உதவியால் நன்றாகத் தைத்து விடுவர். மலைப்பாம்பை மீண்டும் காட்டில் உயிருடன் விட்டுவிடுவர். மலைப்பாம்பின் கொழுப்பு, எலும்பு முறிவிற்கும், சுளுக்கு போன்ற வைத்தியங்களுக்கும் மிகவும் தேவையாக உள்ளன.

காணிகளிடம் காணப்படும் மற்றொரு சிறப்பு அம்சம் என்னவென்றால், 1940 ஆம் ஆண்டுவரை இவர்கள் சிக்கிமுக்கிக் கற்களின் உதவி





காணிப் பழங்குடியினர்

யால் நெருப்பை உண்டாக்கியதாகக் கூறப்படுகிறது. இன்றளவும் சில காணிக்குடும்பங்களில் அவர்கள் முற்காலத்தில் உபயோகித்த 'தீ' உண்டாக்கும் கற்களையும், அதை வைக்கும் சிறு மூங்கில் பெட்டியையும் காணலாம். திறந்த மூங்கில் பெட்டியின் விளிம்பில், பிலின்ட் ( FLINT ) சிறு கல்லை வைத்து, அதை ஒரு தட்டையான சிறிய இரும்புத் துண்டினால் தட்டுவர்; உராசுவர். இதனால் தீப்பொறிகள் தோன்றி, அவை மூங்கில் பெட்டியில் வைத்துள்ள காய்ந்த மற்றும் சாம்பலாக்கப்பட்ட கருகிய பஞ்சில் பட்டு நெருப்பு உற்பத்தியாகிறது. தற்காலத்தில் இவர்கள் தீப்பெட்டியை உபயோகின்றனர்.

**மந்திர சக்தியில் நம்பிக்கை**

காணிப் பழங்குடிகளிடம் காணப்படும் மற்றொரு அம்சம் அவர்களிடம் மந்திர சக்தி உறுதி யாக நிலைத்திருப்பதே. வாழ்க்கையின் பல கோணங்களில் மந்திர சக்தியின் துணையை, உறுதியை, உதவியை இவர்கள் நாடவேண்டியவர்களாக உள்ளனர். தங்களது பூர்வீக வரலாறே மந்திர சக்தியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்று கருதுகின்றனர். பூர்விகக் காலக்கதையில், ஒரு நாள் சிவபெருமானுக்குத்திராத நோய் கண்டதாகவும், அதனால் தனது உடம்பின் மார்பக பாகம் விஷத்தை ஏற்றிய கருநிறமாக இருந்ததாகவும். இந்நோயைத் தீர்க்க தேவர்களின் யோசனைப்படி பூமியிலுள்ள வேலன்மார்களுக்கு (காணிகளின் முன்னோர்) அழைப்பு விட்டதாகவும், அந்த அழைப்பை ஏற்காமல்



**காணிப் பழங்குடிகளின் வெட்டுக்கத்தி, கொக்ரா இசைக்கருவி, நெருப்பை உண்டாக்கும் மூங்கில் பெட்டி**

தங்களுக்குள் சண்டையிட்டதாகவும், கடைசியில் கோபம் தாளாமல் சிவபெருமான் தனது வலது கையில் நாலாவது விரலில் போட்டிருந்த மோதிரத்தைக் கழற்றி, பூமியை நோக்கி மந்திரத்துடன் விட்டெறிந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும், மோதிரம்பட்ட வேலன்மார்கள் யாவரும் மாண்டதாகவும், அடுத்த நாள் காலையில் கூடங்களைப் பெருக்கிய வேலன்மார்களின் மனைவிகள்|தரையில்கிடந்த மோதிரத்தை எடுத்து தங்களின் கைவிரல்களில் ஒவ்வொருவரும் மாட்ட, இவர்கள் பிறகு இச்சம்பவத்தினால் ஆண்மக்களைப் பெற்றனர் என்றும், இவ்விதமாக ஏழு ஆண்மக்கள் விரைவில் வளர்ந்து, 16-ஆம் வயதில் மொழியைக் கற்று, மந்திரத்தில் தேர்ச்சியடைந்து சிவனிடம் சென்று, ''பெப்பு'' எனப்படும் மந்திரத்தை ஏழுநாட்கள் தொடர்ச்சியாக ஓதி, சிவனின் உடல்நலத்தைக் காத்தனர் என்றும் கூறப்படுகிறது. சுகமடைந்த சிவன் மிகவும் சந்தோஷப்பட்டு, வெகுமதிகளையும், சன்மானங்களையும் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை மீண்டும் பூலோகத்திற்கு அனுப்பினார் என்றும் கூறப்படுகிறது. இவர்கள் தான் காணிகளின் மூதாதையர் என்றும் அவர்கள் வசித்த பகுதியில்தான் காணிகள் இன்றும் வாழ்ந்துவருவதாகவும் அவர்கள் நினைக்கின்றனர்.


## அறியாமைஅகன்றது

பெரியம்மை வியாதி 1901, 1958, 1962-ஆம் ஆண்டுகளில் இவர்களை மிகவும் துன்பத்திற்குள்ளாக்கியது. இவர்கள் தடுப்பு ஊசியின் மேல் நம்பிக்கை வைக்காமல், மந்திரத்தில் அதிக நம்பிக்கை வைத்ததால், பலர் உயிர் இழந்தனர். இவ்வியாதி இவர்களை அணுகும்போது அதை நீக்க, பிணியாளியைக் குணப்படுத்த தங்களது மந்திரவாதிகளை அழைப்பர். அவர்கள் 'கொக்ரா' எனப்படும் இசைக்கருவியை (ஒரு சிறிய இரும்புக்குழாயை மற்றொரு இரும்புக் கம்பியினால் மேலும் கீழுமாக) ஆட்டி ஓசையையும் இசையையும் உண்டாக்கி மந்திரத்தையும் ஓதுவர். இரவு முழுவதும் இது நடைபெறும். மந்திர வார்த்தைகள் இசையுடன் சேர்ந்து வியாதியைக் குணப்படுத்தும் என்று இவர்கள் நம்புகின்றனர். மேலும் தங்கள் மேல் கோபம் கொண்டுள்ள தெய்வங்களுக்கு இந்த இசை ஒரு பூசையாக அமையட்டும் என்றும் கருதுகின்றனர். உடல்நலம் பெற்றால் மந்திரத்தில்நம்பிக்கை கொள்வர். இல்லையென்றால் தெய்வத்தின் கோபம் தணியவில்லை என்பர். தற்காலத்தில் கொடுக்கப்படும் கல்வியினால் அம்மை ஊசி போட்டால் இவ்வியாதிவராது அல்லது தடுக்கலாம் என்ற நிலைமைக்கு அவர்கள் மாறி வந்துள்ளனர்.

இவர்களின் படிப்பறிவு 7.7 சதவிதமாக உள்ளது. குழந்தைகள் தங்கிப் படிப்பதற்கு மேல்பாபநாசம் பகுதியிலும், பேச்சிப்பாறைப் பகுதியிலும் பழங்குடிகளின் பள்ளிகள் செயல்படுகின்றன. நெல்லைப்பகுதியில் தமிழ் மொழியும், குமரிப் பகுதியில் மலையாளம், தமிழ் கலந்த மொழியும் பேசப்படுகின்றன.

கொக்ரா இசைக்கருவியை வாசித்தல்





அகத்தியாபுரம் நெல்லை மாவட்டம்

திருமணங்களில் பெண்ணை அடையப்பரிசம்பெறும் முறை இவர்களிடம் காணப்படவில்லை. பெண்ணின் கற்பை உயர்வாக இவர்கள் மதிக்கின்றனர். மேலும் தாய் வழியே வரும், மருமக்கட்தாயம் எனப்படும்வழியுரிமைப்படியேஇவர்களின் உடமைப்பொருள்கள் தலைமுறை தலைமுறையாகச் செல்லும். பழங்குடிகளின் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இவர்களிடம் நன்கு பணிபுரிகிறது.



# நாதமழை பொழியும் நாதசுரம்

நாமகிரிப்பேட்டை கே. கிருஷ்ணன்

ஒரு பிரபலமான வித்துவான், வாய்ப்பாட்டில் வல்லவர். அவர் மேடைக்கச்சேரி அமர்க்களமாயிருக்கும். அதைவிட அட்டகாசமாக இருக்கும் அவர் தொடைமேல் போடுகிற தாளம். இவரைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது இன்னொரு பாகவதர் சொன்னார் ''எல்லோருக்கும் சங்கீதம் தொண்டையில் இருக்கும். இவருக்குச் சங்கீதம் தொடையிலல்லவா இருக்கு'' என்று.

இது முற்றிலும் உண்மை. சங்கீதம் தொண்டையை - தொனியை நம்பி இருக்கிறது. வாய்ப்பாட்டானாலும், நாதசுரம், புல்லாங்குழல் போன்ற வாத்திய இசை யானாலும் தொனி முக்கியம். மூலமும் அதுதான். இசையைப் பொறுத்த மட்டில் பாடம் பயிற்சி இவை இரண்டிற்கும் அப்பால் மனோதர்மம் என்று ஒன்று உள்ளது. பாட பேதமில்லாமல் பாடுவது ஒன்றே லட்சியமாகிவிட்டால் இசை மெக்கானிக்கலாக இருக்கும். மெலடி மறைந்துபோகும். பயிற்சி நிறைய இருப்பின் சங்கீதத்தைச் சற்றே ஜனரஞ்சகமாகச் செய்துவிடலாம். இவை இரண்டையும் தாண்டி இசை ஒரு இனிமையான அனுபவமாக, செவி நுகர் கனியாக அமைய வேண்டுமானால், அதற்கு அவசியம் வேண்டியது மனோதர்மந்தான்.

இதை எப்படிப் பெறுவது? பள்ளிக் கூடங்களும் பயிற்சிகளும் இந்த மனோதர்மத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமானால் உதவலாமே தவிர, அதனை உருவாக்க உதவாது. அதைப் பெறத் தேவை இயல்பான - இயற்கையான இசை ஞானம், அதை முறைப்படுத்த முதிர்ந்த வழிகாட்டல்கள்.

அந்தக் காலங்களில் பெருமளவு இசைப்பயிற்சி என்பது பழைய குருகுல வாசத்தைப் போன்றே இருந்தது. இன்றையசங்கீத 'ட்யூஷன்'கள் போன்றதல்ல அன்றைய குருகுலமுறை. சங்கீத மேதைகளை அணுகி அவர்களுக்குப் பணிவிடை செய்து, அவர்களுடனேயே ஆண்டுக் கணக்கில் இருந்து, அவர்களாக இஷ்டப்பட்டுச் சொல்லிக் கொடுக்கிறபோது, சொல்லிக்கொடுப்பதைக் கற்றுப் பெரிய மேதைகள் ஆனவர்கள்தான் இன்று பிரபலமாக விளங்கிவரும் பல இசை மேதைகள், சங்கீத விற்பன்னர்கள்.

இன்றைய தலைமுறைக்கு இது புதியதாக இருக்கலாம். பொருத்தமற்றது என்றுகூடப் பலர் நினைக்கலாம். ஆனால் இதில் உள்ள பயன், பெறுகிற ஞானம் அனுபவித்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

எனவே, இந்த இசைத்துறையைப் பொறுத்த மட்டிலுமாவது இந்தக் குருகுலப் பயிற்சி முறை தேவை என்று நான் நினைக்கிறேன்.

என்னுடைய அனுபவத்தில் நான் கண்டது, உலகநாடுகள் பலவற்றில் நான் சுற்றுப் பயணம் போனபோது நேரில் தெரிந்து கொண்டது, உலகம் வெறும் பாட்டையும், ராகத்தையும் மட்டும் கேட்க விரும்புவதில்லை. அதை அவர்கள் 'கேஸட்டு'களிலேயே வீட்டிலிருந்தே போட்டுக் கேட்டுக் கொள்வார்கள். அவர்கள் கச்சேரிக்கு வருவதன் நோக்கமே அந்த இசைவாணரின் தனித்தன்மையை - திறமையை, ராக லய வித்யாசத்தில் அவரது மனோ தர்ம சஞ்சாரம் எவ்வளவு தூரத்தை - உயரத்தை, எட்டிப் பிடிக்கிறது என்பதைக் கண்டறியத்தான்.

எனவே, இசைக்காகவும், தமிழுக்காகவும் பாடுபடுவதை லட்சியமாகக் கொண்டிருக்கும் நமது தமிழக அரசு இளம் வித்வான்களுக்கிடையே இந்தத் திறமையை வளர்க்க ஒரு நல்ல இசைக் குருகுலத்தைத் தொடங்க வேண்டியது அவசியம் ஆகும். அதிலும் மங்கல வாத்தியம் என மதிக்கப்படும் நாதசுர இசைப் பயிற்சிக்கென்று ஒரு இசை குருகுலம் உடனே தொடங்கப்பட வேண்டியது மிகமிக அவசியமாகும்.

வாத்திய இசையில் நாயகன் நாதசுரம், மூச்சை அடக்கி வாசிக்கும் இதில் முன்னேற்றம் என்பது, ஆழ்கடலில் மூழ்கி ஆணிப் பொன் முத்தை வெளிக் கொணர்வதைப் போல. இதில் பரிமளிக்க நல்ல உடல் வளம், மனபலம் தேவை. வளரும் தலைமுறையினரிடையே இந்தக் கலையில் பரிமளிக்கக்கூடியவர்கள் என்ற பட்டியல் விரல் விட்டு எண்ணக்கூடிய விதத்திலேயே இருப்பது, இந்த இசையின் எதிர்காலத்தை அச்சுறுத்துவதாகவே உள்ளது.

ஆலயங்களிலும், அரண்மனைகளிலும், திருமடங்களிலுமே கோலோச்சிவந்த இந்த தெய்வீக இசையைப் பொதுமக்கள் இசையாக மாற்றிய பெருமை நாதசுரச் சக்ரவர்த்தி அமரர் டி.என்.ஆர். அவர்களையே சாரும். அவருக்கு நூற்றாண்டு விழா எடுத்து அவர் துணைவியாருக்கு நிதி உதவியும் செய்து பெருமைப்படுத்தியது அண்மையில் நமது தமிழக அரசு! அது இந்தக் கலைக்கு மகத்தான எதிர்காலம் இருக்கிறது என்பதற்கு ஒரு முன்னோட்டம் போல அமைந்தது.

வாய்ப்பாட்டு, பிடில், வீணை, நாட்டியம் என்று எத்தனையோ துறைகளில் இளங்கலைஞர்கள் ஆர்வத்துடன் பயின்று முன்னேறி வருகிறார்கள். ஆனால் இவற்றிற்கெல்லாம் மேலாக நாதசுர இசையில் இன்று இப்படி ஆர்வமுடன் ஈடுபடுபவர்கள் எத்தனை பேர் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது மனவருத்தமே உண்டாகிறது.

நாதசுரம் என்பது வெறும் இசைக்கருவி மட்டுமல்ல! நாதமழை பொழியும் நல்ல வாத்தியம். இதன் வருங்காலம் வளமானதாக இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம் - விண்ணப்பம்.



# சென்னையில் அரசு இசைக்கல்லூரி

—பானுமதி ராமகிருஷ்ணா

இசை என்பது பாரதத் தாயின் மணி மகுடத்தில் பொறிக்கப்பட்டுள்ள மிக்க ஒளியுள்ள வைரமாகும். உலக அரங்கில் இந்தியப் பண்பாட்டின் புகழுக்கும் பெருமைக்கும், பாட்டும் பரதமும் முதலிடம் வகிக்கின்றன. இந்தியாவின் மிக உன்னத மற்றும் உயர்ந்த பண்பாடு பல கோணங்களால் மிளிரச் செய்யப்படுகின்றது.

மதமும் பண்பாடும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இந்திய இசை கடவுள் நம்பிக்கை என்ற அடிப்படையில் அசைக்க முடியாத தத்துவத்தில் கட்டப்பட்டுள்ளது. நுண்கலைகள் இந்தியப் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன. இராமாயணம், மகாபாரதம் போன்ற பெரிய காவியங்கள் தரும சாத்திரத்தைப் பற்றிய அணுகும் முறை மட்டுமல்லாது இந்தியப் பண்பாட்டின் இசை பற்றியும் கூறுகின்றன.

நுண்கலைகளுள் மிகவும் முக்கியமானது இசை; மறைகளைப்போன்ற பழமையானது. ரிக் வேதத்தின் மந்திரம் சொல்லும்போது ஏற்படும் மூன்று ஸ்தாயிகள் மத்ய ஸ்தாயி ரிஷபம்-மந்த்ர ஸ்தாயி நிஷாதம்-மத்ய மத்யஸ்தாயி சட்ஜம் முதலியனவாகும். பிற்காலத்தில் வேதம் ஓதும்போது மற்ற நான்கு ஸ்தாயிகளும் கேட்கப்பட்டன. வேதத்தின் உச்சரிப்பே இசையின் ஏழு ஸ்வரங்களுக்கு ஆதாரம். உண்மையிலேயே இசையின் ஆதாரம் பக்தியே. இந்திய இசையில் முக்கிய பங்கு பக்தியேயாகும்.

இந்தியக் கலாச்சாரம் மேன்மை அடைவதன் காரணம் தரும சாத்திரமேயாகும். தருமசாத்திரத்தில் சொல்லப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றியே இருடிகளும், முனிவர்களும், பக்தர்களும் நமது பண்பாட்டை ஒருமைப்படுத்தினர்.

முற்காலத்தில் அப்பர் - சுந்தரர் - சம்பந்தர் - மாணிக்கவாசகர்-ஆழ்வார்கள் - பிறகு ஜெயதேவர், புரந்தரதாஸர்,சூர்தாஸ்-கபீர்தாஸ்; மீராபாய், அண்மைக்காலத்தில் அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதியார், தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் முதலானோர் இசையினால் இந்தியாவின் கலாச்சாரத்தைப் பரிமளிக்கச் செய்தனர்

எம்முறையில் பார்த்தாலும் ஏழு சுரங்கள் இசைக்கு ஆதாரம். இதைக்கொண்டே இசையின் மற்ற அம்சங்கள் விரிவாக்கப்பட்டன. ஏழு ஸ்வரங்களுக்குத் தமிழில் இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை எனக் கூறுவர்.

பழைய காலத்திலிருந்தே இசையின் ராகங்கள் கருநாடக இசையின் ராகங்களை ஒத்துள்ளன வேதத்தை எங்ஙனம் முனிவர்கள் பாதுகாத்தனரோ அங்ஙனமே தேவார இசையினையும் பாதுகாத்து வைத்துள்ளனர். தேவார திருவாசகப்பாடல்கள் உள்ளத்தைத் தொடுகின்றன. இப்பாடல்களில் பக்தி மணம் கமழ்கின்றது.

தமிழ்நாட்டில் இருக்கின்ற இசைக் கல்லூரிகளுள் சென்னை அரசு இசைக் கல்லூரி மிகவும் பழமை வாய்ந்த கல்லூரியாகும். இக் கல்லூரி 1949 முதல் செயல்பட்டு வருகின்றது. இக் கல்லூரியில் முன்பு முந்நூறு மாணவர்கள் பயின்றனர். தற்போது எண்ணூறுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இசை பயின்று வருகின்றனர். மிகக் குறைந்த பிரிவுகளுடன் துவக்கப் பெற்ற இக்கல்லூரியில் தற்பொழுது குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, மோர்சிங், நாதஸ்வரம், தவில், பரத நாட்டியம், நட்டுவாங்கம் மற்றும் இசை போதனாப் பயிற்சி ஆகிய பல்வேறு பிரிவுகளைக் கொண்டு கருநாடக இசைப்பயிற்சி பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. இதனைத்தவிர மாலை நேர இசைக் கல்லூரிகள் நான்கு செயல்பட்டு வருகின்றன. இசை வாழ்க! தமிழ் வாழ்க!!

# உள்ளத்து ஒலிகள்

## -லட்சுமிராஜரத்னம்

அந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று நினைத்தே பார்க்க முடியவில்லை வித்யாவுக்கு. மைசூர், பெங்களூர், பிருந்தாவன் என்று இரவில் சுற்றி விட்டுத் திரும்பியபொழுதுதான் எதிரில் வந்த பஸ்ஸில் மோதி.... என்ன நடந்தது என்று புரியாமல் மருத்துவ மனையில்தான் கண்விழித்தாள்.

காலைத் தூக்கி வைத்துக் கட்டி இருந்தார்கள். காலே, போய்விடும் என்று பயந்து அழுது முகமெல்லாம் வீங்கி, கண் இமைகள் தடித்து.....

''இப்ப என்ன ஆயிடுச்சுனு இப்படி நீங்க அழறீங்க மேடம்? இப்பத்தான் கண் விழிச்சிருக்கீங்க....டெம்பரேச்சர் இல்லாம இருக்குனு நான் நினைச்சுக் கிட்டிருக்கேன்!''

என்ன இனிமையான குரல்! தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கேவியவள் முகத்தைத் திருப்பினாள். எதிரில் ஓர் இளைஞன்..எத்தனை அழகு ...ஆணழகன் போட்டிக்கு இவன் போனால் இவனுக்குத்தான்முதல் பரிசு கிடைக்கும். வலியை மறந்து அவனையே பார்த்தாள்.

''என்ன மேடம் அப்படிப் பார்க்கிறீங்க?''

கண்களை அசைத்ததில்.... ஓ.. இவன் ஒரு டாக்டர். கழுத்தில் உள்ள ஸ்டெதஸ் அடையாளம் காட்டுகிறது.

''வலி எப்படி இருக்கிறது?''

''பரவாயில்லை டாக்டர். நான் ஒரு டான்ஸர். என் காலுக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா..அதான் அழுகை வரது'' அவனைப் பார்ப்பதே ஒரு சுகமாக இருந்தது.

இப்படி ஓர் அழகன் ஒரு பெண்ணுக்குக் கிடைத்துவிட்டால் வேறு என்ன சொர்க்கம் அவளுக்கு வேண்டும்? அவள் நினைப்பைப் பற்றி அறியாதவனாகக் காலைப் பரிசோதனை பண்ணினான். அப்பொழுது தான் அவள் அப்பா உள்ளே நுழைந்தார்.

''குட்மார்னிங் டாக்டர்''

''குட்மார்னிங் மிஸ்டர் தயாநிதி''

''விது ரொம்ப அழகு டாக்டர்'

அவன் அவளைப் பார்த்துப் புன்னகை பூக்கிறான். 'பெரிய ஆக்ஸிடெண்ட்...நீங்க பிழைச்சதே பெரிய காரியம்.''

அப்படி என்றால்? அவள் பார்வை அப்பாவின் பக்கம் நகர்கிறது. அப்பா அவள் பார்வையைத் தவிர்க்கிறார்.

'' அப்பா''

''என்னம்மா?''

''நான், வனஜா, தாரிணி, கமல், சுந்தரினு அஞ்சு பேர் போனோம். என்னோட வலியில அவங்களை எல்லாம் மறந்துட்டேன். என்னப்பா ஆச்சு? அவங்களுக்கும் நல்ல அடியா?''

டாக்டர் நிலைமையைச் சமாளிக்க முயலுகிறார்.

''மேடம், இங்கே வலி இருக்கா?''

''ப்ளீஸ், என்னாச்சுனு சொல்லுங்க டாக்டர்''

அப்பா அவள் முகத்தை மெல்லத் தடவினார்.

''வனஜா தானே காரை ஓட்டி வந்தாள்! பிழைச்சது நீயும் சுந்தரியும் தானம்மா'' என்று கூறி விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

துயரம் தாங்க முடியாமல் வெளியே போய் நின்று கொள்கிறார் தயாநிதி. டாக்டர், விதுவின் அருகில் போய் நிற்கிறார்.

''மேடம்''

நனைந்த கண்ணிமைகளை விரித்து அவனைப் பார்த்தாள் வித்யா.

''ப்ளீஸ், ரிலாக்ஸ் யுவர் செல்ஃப் மேடம். இப்ப உங்க ஹெல்த்தான் ரொம்ப முக்கியம். அதிர்ச்சிக்கு இடம் கொடுக்காதீங்க''

அவள் தலையணையை எடுத்து முகத்தை மூடி விம்மலை அடக்குகிறாள். சற்றுமுன் மனத்தில் துரத்திய இன்ப அலைகள் கரைந்து போகின்றன. வாழ்க்கை என்பது இதுதானா? டாக்டர் சுரேஷ் சற்று நேரம் பரிதாபமாக அவளையே பார்க்கிறான். வாழ்வும், சாவும் டாக்டர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்ற கண்டிப்பிற்குள் வளைய வந்தாலும் இவளின் துயரம் அவனை அசைக்கிறது.

வெளியே வந்தவன் ''மிஸ்டர் தயாநிதி, தயவு செய்து உங்க



மகளின் கவனத்தைத் திருப்பப் பாருங்க. இப்படி அவ முன்னாடி நீங்க கலங்கலாமா?'' என்று கூறி விட்டுப் போனான்.

தன்னைச் சமாளித்துக் கொள்வதற்கு முயன்றாள் விது. அதற்கும் இரண்டு தினங்கள் பிடித்தன. அவள் கவனம் சிதறாமல் பார்த்துக் கொள்வதில் எச்சரிக்கையாக இருந்தார் தயாநிதி. படிப்பதற்குப் புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுத்தார். மகளிடம் ஏதாவது பேசி 'விட்' அடித்தார்.

விதுவின் நினைவுகள் ஒன்று கூடுவதற்கு சுரேஷ்தான் முக்கிய நினைவாக இருந்தான்.

இவனுக்கு என்ன வயசிருக்கும்? இவன் கல்யாணம் ஆனவனா? இவன் மனைவி எப்படி இருப்பாள்? நிச்சயம் இவன் ஒரு பேரழகியைத்தான் தேர்ந்தெடுத்திருப்பான். அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஒரு மூலையில் கிளர்ந்து எழுந்தது.

சுரேஷ் அவளுடைய அறைக்கு அடிக்கடி வந்தான். பரத நாட்டியத்தைப் பற்றி எல்லாம் கேட்டான். குறைந்தபட்சம் இன்னும் ஏழெட்டு மாசத்துக்கு ஆடக்கூடாது என்று சட்டம் போட்டான். உரிமையாக அவள் படித்துக் கொண்டிருக்கும் புத்தகங்களைப் புரட்டினான்.

''மேடம், எனக்கு உங்களைப் போலவே ஜேசுதாஸ் பிடிக்கும். கேஸட் போட்டுக் கேட்கிறீங்களா! ரேர் கலெக்ஷென்ஸ் வச்சிருக்கேன்; கொடுத்தனுப்பட்டுமா?'' என்று கேட்டான்.

மறுநாள் மறக்காமல் தானே கொண்டு வந்து கொடுத்தான். 'மனவியாளகிம்'மை நளின காந்தியில் தன்னையறியாமல் அவன் முணுமுணுத்ததும் அசந்து போனாள்.

இவனுக்கு இத்தனை இனிமையான குரலா? இவன் பாடி நான் ஆடினால்? மனத்திற்குள் இன்பத் தென்றல் ஒன்று ஊசலாடியது.

''கால் குணமானதும் ஃபஸ்ட் நான்தான் உங்க டான்ஸ் புரொக்ராம் வைக்கப்போறேன்'' என்று சுரேஷ் சொன்னதும், அவள் கண்கள் விரியப் பார்த்தாள்.

அந்த வியப்பிலேயே அவளைத் தவிக்க விட்டவனாக அறையை விட்டுப் போனான் சுரேஷ். கண்களை மூடியபடி அவன் முன்னால் ஆடுவதாகத் தன் கற்பனைச் சிறகுகளைப் பறக்க விட்டபொழுது...

'தத்தத்த தனுத தத்த தித்தத்த ஜொனுத தத்த' என்ற சொற்கட்டுக்கள் வாயிலிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தன.

''விது, விது, எப்படிம்மா இந்த விபத்து ஏற்பட்டது? இந்த மட்டுமாவது பிழைச்சியே! உனக்கு இந்த விபத்து ஏற்பட்டப்ப நான் எங்கே இருந்தேன் தெரியுமா? காஞ்சிபுரத்துல மகா பெரியவர் சந்நிதியில் நின்னேன். ஆனா ஏன்னு தெரியல்லே விதும்மா. கண்ணுலேயிருந்து ஜலமா கொட்டித்து. திடீர்னு பெரியவா என் பக்கம் கையைத் தூக்கி ஆசீர்வாதம் பண்ணினா. நேத்திக்கு மாமா லெட்டரைப் பார்த்தப்பதான் எனக்கு இதோட காரணமே புரிஞ்சுதும்மா'' என்று படபடத்த வாசுவையே பார்த்தாள் விது.

கற்பனை நடனம் நின்று கோபம் பீரிட்டது.

கருப்பாக, ஒட்டிய கன்னங்களுடன், பல் ஒன்றுதான் வெளுப்பு என்று சொல்லும்படி கச்சலாக நின்ற வாசுவை ஒரு மாதிரியாகப் பார்த்தாள் விது. அவனோ அவனுடைய அன்போ எப்பொழுதும் கண்களில் பட்டதில்லை.

''என்ன விதும்மா, பேச மாட்டேங்கறே? உனக்குப் பிடிக்கும்னு பால்கோவா வாங்கிண்டு வந்திருக்கேன். இந்தா வாயிலே கொஞ்சம் போடட்டுமா?

''அது ஒண்ணுதான் குறைச்சல்'' என்று அவன் கையைத் தட்டினாள்.

வாசுவின் முகம் சின்னதாகி விட்டது.

''வாடா, மாப்பிள்ளை'' என்றபடி தயாநிதி உள்ளே நுழைந்தார்.

வாசு காஞ்சிபுரத்துக்குத் திடீர் என்று போனதையும், மகாப் பெரியவர் முன்னாடி கண்ணீர் சொட்டச் சொட்ட நின்ற கதையையும் மறுபடியும் சொல்ல ஆரம்பித்தான். வாசு இருக்கும் இடத்தில் சுரேஷ் தன் வாயில் பால்கோவாவைப் போட்டால் எப்படி இருக்கும் என்றுகற்பனை செய்தபடி கண்களை மூடிக் கொண்டாள் விது.



அந்த மருத்துவ மனைக்கு வந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்டது. விது மெள்ள நடக்கத்தொடங்கி இருந்தாள். இன்னும் ஒரு வாரத்தில் அவள் வீட்டிற்குப் போகலாம் என்று சொல்லி இருந்தான் சுரேஷ். அதுவே கனத்த வேதனையாக அவள் நெஞ்சில் இறங்கி இருந்தது.

டாக்டர் சுரேஷிற்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்று நர்ஸ் சுகந்தி மூலம் தெரிந்து கொண்டிருந்தாள். இதை தன் அப்பாவிடம் சொல்லலாமா? சொன்னால் ஒப்புக் கொள்வாரா? இவளுக்கு வாசுதான் என்றுஇவள் பிறந்தது முதல் பட்டயம் பண்ணி வைத்தவராயிற்றே!

மெல்ல நடக்கச் சொன்னான் சுரேஷ். சற்று தூரத்தில்தான் அவனுடைய பங்களா. தோட்டத்தின் வாசலை அவள் அடையும் பொழுதுசுரேஷ் தன் பங்களாவின் வாசலில் காரை விட்டு இறங்கினான். கையைத் தூக்கி அசைத்து விட்டு அவன் உள்ளே போய் விட்டான்.

அவனைத் தனியாகச் சந்திக்க இதைவிடச் சிறந்த தருணம் ஏது? மெல்ல ஒவ்வொருஅடியாக எடுத்து வைத்து நடந்தபொழுது வீணையின் இசை தவழ்ந்து வந்தது. இவ்வளவு அருமையாக இசைப்பது யார்? மெல்ல பங்களா வாசலில் நின்று பார்த்தாள்.

ஹாலில் நடு நாயகமாக சுரேஷ்தான் வீணை வாசித்துக் கொண்டிருந்தான். பாரதியின் 'சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா''— காபியில் கொஞ்சியது. அடுத்தது தனஸ்ரீ தில்லானா.....விதுவால் நிற்க முடியவில்லை. அதனால் மெல்லத் திரும்பி நடந்தாள்.

சுரேஷ் இத்தனை நன்றாக வீணை வாசிக்கிறாரா? எத்தனையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார்! தன் இதய வீணையை மீட்டுவாரா?

வீடு திரும்பியதும் அவளால் சுயநிலைக்கு வர முடியவில்லை. நினைவெல்லாம் சுரேஷ்தான். தயாநிதியோ வீட்டுக்கு வந்ததும் சிநேகிதிகளின் நினைவு வந்து விட்டதாக எண்ணிக் கொண்டார்.

''ஒரு மாறுதலுக்காகக் கொடைக்கானல் போய் விட்டு வரலாமா விது?''.

''போகலாம்பா'' அவளுக்கும் மாறுதல் தேவைப்பட்டது.

தயாநிதியின் நண்பர் பங்களா இருந்தது. அதனால் சுகமாக ஒரு மாத காலம் அங்கே தங்க முடிந்தது. ஓய்வாக இருந்ததால் நிறையப் படிக்க முடிந்தது. நிறையச் சிந்திக்க முடிந்தது. தன்னால் சுரேஷை மறக்க முடியாது என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. சென்னை திரும்பியதும் சுரேஷிடம்போய், தானாகவே பேசிவிட வேண்டியதுதான்.

சென்னை திரும்ப ஒரு வாரம் இருக்கும் பொழுது தயாநிதி அந்தச் செய்தியைச் சொன்னார்.

'விதும்மா, எங்கே கிளம்பிட்டே''

'குறிஞ்சி ஆண்டவர் கோயிலுக்கு''

''வாசுவை வரச் சொல்லி இருக்கேன். நீ திரும்பி வரப்ப வாசு இங்கே இருப்பான்''

''எதுக்குப்பா வரச் சொல்லி இருக்கீங்க?''

''ஒரு நல்ல நாளைப் பார்க்கறதுக்குத்தான்''

அவள் முகம் சிவந்தது. வாசு வரட்டும். அவனையும் வச்சே எல்லாத்தையும் பேசி முடிவு பண்ணிடலாம் என்ற தீர்மானத்துடன் மௌனமானாள்.

''நான் கோவிலுக்குப்போயிட்டு வரேம்ப்பா'' என்றவள், மனத்துக்குள் கோபத்துடன் போய் விட்டாள்.

மெல்ல மெல்ல ஏற்றத்தில் ஏறியவள், எதிரே வருபவர்களுக்கு வழிவிட ஒதுங்க...

''ஹல்லோ விது''

அவள் டாக்டர் சுரேஷை எதிர் பார்க்கவில்லை. திகைப்பு மீளாமல் உதடுகள் ஒரு ''ஹல்லோ'' வை உதிர்க்க, சுரேஷின் பின்னால் தாவியது. அவன் பின்னால் நின்றாள் ஒரு நங்கை. இவள்....இவள் நந்தினி இல்லை! தன் க்ளாஸ்மேட். கல்லூரி வரை படிக்க வராமல் கல்யாணத்தைப் பண்ணிக்கொண்டு போனவள். ஆனால் கையில் சின்னக்குழந்தையுடன் கணவனை இழந்து...

''நீ....நந்தினி இல்லை?''

''நீ...விது...வித்யா இல்லே?'' நந்தினி ஓடி வந்து கட்டிக்கொண்டாள்.



நந்தினி கருப்பாக கோயில் சிலை மாதிரி இருப்பாள். மூக்கில் போட்ட வைர பேசரியால் கன்யாகுமரி போல் ஜொலிப்பாள். சுரேஷைப் பார்த்ததுமே விதுவுக்குப் பறப்பது போல இருந்தது. ஆனால் இந்த நந்தினி எதிரே என்னத்தைப் பேசுவது?

''நந்தினி, உங்களுக்கு உறவா டாக்டர்?

சுரேஷ் மெள்ளச் சிரித்தான். ''இனிமே ஏற்படப்போற உறவு விது. இவளை நான் மறுமணம் பண்ணிக்கப் போறேன்.''

நந்தினி தலை குனிந்து நிலம் பார்த்தாள். பலவந்தமாகச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள்.

''கங்க்ராட்ஸ் நந்தினி''

நந்தினி இவள் கையைப் பற்றிக் கொண்டாள்.

''நந்தினி, ஏற்கனவே உனக்கு ஒரு குழந்தை இருக்கு இல்லை?''

நந்தினி மெல்ல மிழற்றினாள், ''இவருக்கு முன்னாடி சொன்னா அது முகஸ்துதியா இருக்கும் விது. டாக்டர் முற்போக்குச் சிந்தனையாளர். என்னைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு பிடிவாதம் பிடிக்கிறார். எனக்கு ஒரு வாழ்வு தரணும்னு துடிக்கிறார். அதனால இந்தக் கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சு.

''நான் மதுரைல வேலையா இருக்கேன். டாக்டர் ஒரு தடவை மதுரை வந்தப்ப குழந்தைக்கு உடம்பு சரியாய் இல்லை. அவர் குழந்தையைக் கவனிச்சார். அப்ப ஏற்பட்ட அறிமுகம். அது திருமணம் வரை வந்து விட்டது விது. நான் கல்யாணத்துக்கு அழைப்பு அனுப்புவேன். கண்டிப்பா வந்துரணும்'' என்றாள்.

''நீங்கதான் மணப்பெண்ணிற்குத் தோழி'' என்றான் சுரேஷ்.

'வரேன் விது''

சுரேஷுடன் இணைந்து நடந்த நந்தினியையே பார்த்துக்கொண்டிருந்தாள். இவளுக்கு இத்தனை அழகான கணவனா?

''விது, கோவிலுக்குப் போகல்லே? இங்கேயா நிக்கறே?'' வாசு அவளைத் தேடிக்கொண்டு வந்து விட்டான்.

அவன்கையில் சின்னப்பொட்டலம். ஒரு புடவைப் பெட்டி.

''நான்ஏன் பதினைந்து நாளா வரலேனு கேட்கல்லையே?''

''இப்ப கேட்கறேன்...சொல்லுங்க.. ஏன் வரல்லே வாசு?''

''டெல்லி போயிருந்தேன். மெட்ராஸ் வந்ததும் லெட்டர் பார்த்தேன். உடனே கிளம்பிட்டேன். உனக்கு பால்கோவா வாங்கி வந்திருக்கேன். உனக்கு பர்த்டே பரிசா இந்தா பனாரஸ் புடவை.''

ஓ....என் பிறந்த நாளை இவன் கொண்டாடுகிறான். புடவை சிவப்புக் கலரில் பளபளத்தது.

இருளில் அணையும் பகல், இருளைக் கண்டு வெறுப்படைவதில்லை. இதுதான் ஜீவராசிகளின் நியதியோ?

''என்ன முணுமுணுக்கறே விது?''

''ஒண்ணுமில்லே..உங்க மாமா கிட்ட சொல்லி நாள் பாருங்க''

:விது''

மெல்லப் படர்ந்த இருளில் அவனும் கருப்பாக நின்றான். அவனுக்குத்தான் பெண்கள் மனசு புரியவில்லையோ? இருவரும் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தார்கள். இருளுக்கு ஒளியா? ஒளிக்கு இருளா? ஒன்றில் அடங்கி ஒன்று பிரகாசிக்கிறது என்பதை வித்யா உணர்ந்து கொண்டவளாயிற்றே?

# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 1987-88-ஆம் ஆண்டில் 100.00 ஏக்கரில் மல்பரி பயிரிடத் திட்டமிட்டு, 147.50 ஏக்கரில் மல்பரி பயிர் புதிதாகப் பயிரிடப்பட்டுள்ளது. 299 விவசாயிகள் (45 ஆதிதிராவிடர் குடும்பங்கள் உட்பட) மல்பரியைப் புதிதாகப் பயிரிட்டுப் பலன் அடைந்து வருகின்றனர். இத் திட்டப்பணிகளின் கீழ் ரூ. 6,000 மல்பரி விதைக் குச்சி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 60 விவசாயிகளுக்குப் பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் விவசாயப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 100 உதவித் தொகையும், பயிற்சிக்குப்பின் ரூ. 400 பெறுமானமுள்ள இலவசப் பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ.30,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதுவரை இப்பயிற்சியாளர்களுக்குப் பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டுவதற்காகவும், புழு வளர்ப்புத் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காகவும் ரூ. 21,250 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் போகநல்லூர் கிராமத்தில் (கடையநல்லூர்) அரசு பட்டுப்பண்ணை 10 ஏக்கரில் நிறுவப்பட்டு, மல்பரி நடவு வேலைகளும், கிணறு தோண்டும் பணி மற்றும் கட்டடம் கட்டும் வேலைகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. செங்கோட்டையில் மாதிரி மல்பரி நாற்றங்கால் பட்டுப் பண்ணை நிறுவப்பட்டு, நிலச் சீர்திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம், வரும் ஆண்டில் புதிதாக மல்பரி பயிரிடும் விவசாயிகளுக்குத் தேவையான 4 லட்சம் மல்பரி நாற்றுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

குற்றாலத்தில் இயங்கி வரும் அரசு கலப்பினப் பட்டு முட்டை தயாரிப்பு நிலையம் 1,06,562 பட்டு முட்டைகள் தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்துள்ளது.

டிசம்பர் மாதம் வரை 40,734 பட்டு முட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு, 8691.500 கி.கி. பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 825.050 கி.கி. பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சமுதாய இளம் புழு வளர்ப்புப் பண்ணை ஒன்று குருவிகுளம் வட்டாரத்தில் மருதக்கிணறு என்ற கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது. நிலச் சீர்திருத்த வேலைகள் முடிவு பெற்ற 1.50 ஏக்கர் பரப்பில் மல்பரிப் பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பண்ணையைச் சுற்றி 34 விவசாயிகள் புதிதாக மல்பரி நடவு செய்துள்ளார்கள். 19 விவசாயிகளுக்கு, பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

---

# அண்ணா மாவட்டத்தில் கோடைச்சாகுபடித் திட்டம்

அண்ணா மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 28,860 எக்டேர் நெல் சாகுபடி செய்யப்பட்டு, இது நாள் வரை 2500 எக்டேர் பரப்பில் அறுவடை ஆகியுள்ளது. அறுவடை மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

காலத்தே பயிர்ப் பாதுகாப்பு முறைகள் அனுசரிக்கப்பட்டு, பூச்சி பூஞ்சாண நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு, நெல்லில் சராசரி மகசூல் எக்டேருக்கு 5900 கிலோ கிடைத்துள்ளது. பயிர் விளைச்சல் போட்டியில் ஐ. ஆர். 20, பொன்னி போன்ற இரகங்கள் எக்டேருக்குச் சுமார் 9700 கிலோ வரை கிடைத்துள்ளது. பின் பருவத்தில் கிடைத்த நல்ல மழையைக் கொண்டு மானாவாரி நிலங்களில் சோளம் கோ. 26, ஐ. எஸ். 3541, சி.எஸ்.எச். 1 எக்டேருக்குச் சுமார் 5000 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. பயறு வகைகளிலும் சுமார் 600 கிலோ எக்டேருக்கு அறுவடை ஆகியுள்ளது.


பின் மழையின் காரணமாக கிணறுகளில் நீர் உள்ளதால் கோடையில் நல்ல மகசூல் பெற முடியும் என்ற ஒரு நம்பிக்கை உருவாகியுள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு அண்ணா மாவட்டத்தில் கோடைப் பருவத்தில் சோளம், கம்பு, பயறுவகைகள், பருத்தி, நெல் கரும்பு போன்ற பயிர்களில் வேளாண்மைத் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து, இருக்கும் நீரைச் சிக்கனமான முறையில் பயன்படுத்த, நீர்நிர்வாக உத்திகளைக் கையாண்டு, அதிக மகசூல் பெறக் கோடைச் சாகுபடித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, இம்மாவட்டத்தில் சிறு தானியத்தில் 10,000 எக்டேரும், பயறு வகைப் பயிர்களில் 2000 எக்டேரும், பருத்தியில் 2000 எக்டேரும், கரும்புப் பயிரில் 1000 எக்டேரும், நெற்பயிரில் 1000 எக்டேரும் சாகுபடி செய்து அதிக உற்பத்தி பெற்றிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுதானியப் பயிர்களில் எக்டேருக்கு 3000 கிலோ மகசூலும், பயறு வகைப் பயிர்களில் எக்டேருக்கு 1250 கிலோ மகசூலும், பருத்தியில் 25 குவிண்டால் மகசூலும், கரும்புப் பயிரில் எக்டேருக்கு 110 டன் மகசூலும், நெற்பயிரில் எக்டேருக்கு 5800 கிலோ மகசூலும் சராசரியாகப் பெற்றிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுதானியப் பயிர்களில் உயர் விளைச்சல் ரகத்தேர்வு, அசோஸ்பைரில்லம் இடுதல், பயிர் எண்ணிக்கை பராமரிப்பு, சரியான அளவு உரமிடல், தேவைக்கேற்ற பயிர்ப் பாதுகாப்பு போன்ற உத்திகள் பயறு வகைப் பயிர்களில் ரகத் தேர்வு, ரைசோபிய நுண்ணுயிர் நேர்த்தி, சரியான அளவுகளில் உரமிடுதல், பயிர் எண்ணிக்கை பராமரித்தல், தேவைக்கேற்ற பயிர்ப் பாதுகாப்பு போன்ற உத்திகள், பருத்தியில் ரகத்தேர்வு, அசோஸ்பைரில்லம் இடுதல், பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு போன்ற உத்திகள், கரும்புப் பயிரில் கரணை நேர்த்தி, பயிர் எண்ணிக்கைப்பராமரிப்பு, உரிய அளவில் உரமிடல், ஒட்டுண்ணி விடுதல் போன்ற உத்திகள், நெற் பயிரில் உயர் உரம் இடுதல், பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, சிங்கல்பேட் இடுதல், பொட்டாஷ் உரத்தைப் பிரித்து இடுதல், தேவைக்கேற்ப பயிர்ப் பாதுகாப்பு போன்ற உத்திகள் மற்றும் நீர் நிர்வாக முறைகளைச் சிறந்த முறையில் கடைப்பிடித்து அதிக மகசூல் பெறுதல், போன்ற தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடிக்க வழிவகைகள் செய்யப்பட்டன. அவற்றிற்கான விளக்கக் கூட்டங்கள், கருத்துக் காட்சிகள், திரைப்படம் மற்றும் சிலைடுக்காட்சிகள், சுவரொட்டிகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் விரிவாக்கப் பணிகள் ஆற்றிடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**வி.ஜி பிரசாத்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**அண்ணா மாவட்டம்,**
**திண்டுக்கல்.**



# கத்தரியின் கதை!

சந்தையில் குவியல் குவியலாகக் குவித்து வைத்திருக்கும் கத்தரிக் காயைப் பார்த்திருக்கலாம். அதைச் சமைத்துச் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் அதைப் பற்றிய பல சுவையான செய்திகள் அநேக ருக்குத் தெரிந்திராது.

கத்தரிக்காயை மணற் பாங்கான மண்ணிலிருந்து களிமண் உட்பட பல தரப்பட்ட மண்ணில் ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம். நன்றாக நீர் வளம் பொருந்திய நிலங்களில் அதிக விளைச்சலைக் கொடுக்கும்.

கத்தரியில் பல ரகங்கள் உண்டு. காயின் வடிவம், அமைப்பு, நிறம், செடியின் வளர்ச்சி போன்ற குணாதிசயங்களில் ரகங்கள் வித்தியாசப் படுகின்றன.

நிறத்தைப் பொறுத்து மஞ்சள், வெள்ளை, பச்சை, பழுப்பு, சாம்பல் முதலிய பல வகைகள் உண்டு. உருண்டை அல்லது முட்டை வடிவக் கத்தரிக்காய்களை 'எங்குலாண்டம்' என்றும், நீண்டு மெலிந்த காய்களைச் 'செர்ப்பன்டைனம்' என்றும், குள்ளமான, குறுகிய வயதுடைய ரகங்களை டெப்ரெஸ்ஸம்' என்றும் விஞ்ஞானப் பெயர்களால் அழைக்கிறார்கள்.

கத்தரிச் செடியில் பல இனங்கள் உண்டு. அவைகளாவன:

1. ஆகாச கத்தரி-இதில் இரண்டு வகை: அ. சிறு ஆகாச கத்தரி. ஆ. பெரு ஆகாச கத்தரி, 2. கண்டங் கத்தரி, 3. காறல் கத்தரி, 4. கத்தரி நாயகம் (யானைச் சிரகம்) 5. கொத்துக் கத்தரி, 6. சிறு வழுதலை (முள்ளி)

கத்தரிக்காய் தமிழ் நூல்களில் ''வழுதுணங்காய்'' என்று அழைக்கப்படுகிறது. ஆயுர்வேத முறைப்படி கத்தரி ஒரு நல்ல மூலிகை. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இது மிகவும் சிறந்த உணவு.

இந்தப் பிஞ்சை, தினசரிப் பதார்த்தங்களில் ஒன்றாகக்கூட்டி சமைத்து உண்ணலாம். பத்திய உணவுக்காரர்களுக்குப் பிஞ்சுக் கத்தரிக்காய் ஏற்ற உணவு. கத்தரிப் பிஞ்சில் நீர் அதிகம் உண்டு. எனவே இது எளிதில் ஜீரணமாகக் கூடியதாகையால் நோயாளிகளுக்கு ஏற்ற உணவாகக் கொள்ளலாம்.

இதனால் குடலுக்குப் பலம் உண்டாகும். முக்குற்றத்தையும், கபக் கட்டையும் நீக்கும். மலம் இளகி இறங்கும். ஆனால் படை, கிரந்தி நோய்களை அதிகப்படுத்தும்!

வெறி நாய்க்கடி குணமாகக் கத்தரிப்பிஞ்சு, எள்ளு, கற்கண்டு ஆகியவைகளைச் சம எடையாக அரைத்து, காலை மாலை இரு வேளையும் எலுமிச்சம் பழம் அளவு மூன்று நாள் சாப்பிட்டு உப்பில்லாப் பத்தியம் இருக்க வேண்டும்.

இதைச் சமைத்தும், வற்ற விட்டும், வறுத்தும் உண்ணலாம். கத்தரிக்காய் பித்தத்தால் வந்த கபத்தை நீக்கும். அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் ஆறிய கரப்பான் படை, சொறி, சிரங்கு இவைகளை உண்டாக்கும். மேக ஊரலையும் அதிகப்படுத்தும்!

—நன்றி : 'செய்தி மடல்'


'தமிழரசு'

தமிழ் - மாதம் இருமுறை

சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 24.00 |
| 6 மாதம் சந்தா | ரூ. | 12.00 |

'தமிழரசு' - ஆங்கிலம்

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 12.00 |

6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

சந்தா தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்பவேண்டிய முகவரி :

உதவி இயக்குநர்,
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.




# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

# சென்னையில் உலக மகளிர் நாள்



சமுதாயத்தின் எல்லாத்துறைகளிலும் பெண்கள் முன்னேற வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில், உலக மகளிர் விழா, சமூக நல இயக்ககத்தின் சார்பில், சென்னை கலைவாணர் அரங்கில் 8.3.88 அன்று நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி வைஜயந்திமாலா பாலி அவர்கள், உடல் ஊனமுற்றவர்களுக்குக் கருவிகள், விதவை மகளுக்குத் திருமண நிதியுதவி, நலிந்த பிரிவினருக்குக் கடனுதவி ஆகியவற்றை வழங்கிப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''பெண்கள் எந்தச் சூழ்நிலையிலும் அஞ்சாமல் பொதுத் தொண்டில் ஈடுபட வேண்டும். பெண்கள் தங்களைக் குறைவாக நினைத்துக் கொள்ளக்கூடாது. வீட்டுவேலை, குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுதலோடு நின்று விடக்கூடாது. உங்களிடம் சக்தி இருக்கிறது; பலம் இருக்கிறது. அதைப் பயன்படுத்த வேண்டும். பெண்கள் நிலை மேலும் மேலும் உயர வேண்டும்''.

குடும்ப நலத்துறை இயக்குநர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள்பேசுகையில், ''தாய்மார்கள் பெண் குழந்தைகள் என்றாலேயே வெறுக்கிறார்கள். எந்தக் குழந்தையாக இருந்தாலும் அவற்றைப் பேணி வளர்க்க வேண்டும். இன்று பள்ளியில் சத்துணவு வழங்கப்படுகிறது; இலவசக் காலணி தரப்படுகிறது. ஆகவே பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். பெண்தானே, படிப்பு எதற்கு என்று அலட்சியமாக இருந்துவிடக்கூடாது'' என்றார்.

பாரதி மகளிர் கல்லூரிப் பேராசிரியை டாக்டர் ஜோஸ்பின் பாரதி அவர்கள் பேசுகையில், ''வரதட்சிணைக் கொடுமை போக்கப்பட வேண்டும். பெண்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும், தாய்மார்கள் குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத்தர வேண்டும்'' என்றார்.

பத்திரிகையாளர் திருமதி உஷா சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், ''உலகப் பெண்களுக்கு எந்த வகையிலும் சளைத்தவர்களல்ல நம் இந்தியப் பெண்கள். கலை, மருத்துவம், விஞ்ஞானம் முதலான துறைகளில் இந்தியப் பெண்கள் சிறந்து விளங்குகிறார்கள். இந்தச் சமுதாயம் தலைநிமிர்ந்து நடக்க, பெண்களுக்குத் துணிவு, தன்னம்பிக்கை ஏற்பட வேண்டும்'' என்றார்.

திருமதி சுசீலா மாரியப்பன் அவர்கள் பேசுகையில், ''அரசுத் திட்டங்களுக்கு நாம் முழு ஒத்துழைப்புத் தர வேண்டும். ஒவ்வொருவருக்கும் நோக்கம் இருக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் முன்னேற முடியும்'என்றார்.

தொடக்கத்தில், சமூக நல இயக்குநர் திருமதி ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''பெண் கல்வி மிக முக்கியம். அதற்கு நாம் பாடுபட வேண்டும். அத்தோடு சுகாதாரத்தையும் நாம் அவர்களுக்கு விளக்க வேண்டும். ''நாம் எதற்கும் குறைந்தவர்களல்ல' என்ற உணர்வும், தன்னம்பிக்கையும் பெண்களுக்கு வர வேண்டும்'' என்றார்.

சமூக நலத்துறை இணை இயக்குநர் திரு அ.ராஜன் அவர்கள் நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்.


## தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகப் பணிகள்

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் இதுவரை 2431.33 எக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இத்துடன் வனத்துறையில் கொளப்பள்ளி கோட்டத்தில் பயிரிடப்பட்ட தேயிலைத் தோட்டங்கள் 347 எக்டேர் பரப்பும் இக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

1987ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மட்டும் 22,03,437 கி.கி. தேயிலைக் கொழுந்து அறுவடை செய்யப்பட்டுள்ளது.

தோட்டக் கழகத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 2,753 தொழிலாளர் குடியிருப்புகளில் 1987 டிசம்பர் வரை 2,532 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளைக் கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# சுவாமி விவேகானந்தருக்கு விழா

புதுமைக் கருத்துக்களைச் சமூகத்தில் புகுத்தி, மக்களின் பகுத்தறிவைச் சுடரேற்றி வைத்த அகல் விளக்கான சுவாமி விவேகானந்தர் அவர்களின் 125-வது பிறந்தநாள் விழா 8.2.88 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சிக் குலவி, இயற்கையின் தென்றலைத் தவழவிடும் நாகர் கோவில் நகரச் சீமையில் அமைந்துள்ள கலைவாணர் கலையரங்கில் கண்களைச் சிமிட்டும் கண்கவர் ஒளி அலங்கார மேடையில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. கலையரங்கம் நுழைவு வாயில் முன்புறமே பார்ப்பவர் விழிகளைப் பரவசமூட்டும் வகையில் சுவாமி விவேகானந்தர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்குகின்றவண்ணம் ஓவியக் கண்காட்சி இடம் பெற்றிருந்தது. இதில் 150 ஓவியப் புகைப்படங்கள் இடம் பெற்றன. இக்கண்காட்சி, விழாவினை மேலும் மெருகூட்டும் வகையில் அமைந்திருந்தது. முதல் கட்டமாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எஸ். முனீர் ஹோதா, இ.ஆ.ப., முன்னிலையில், மாவட்ட நீதிபதி திரு அ. இராமமூர்த்தி ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்கள்.


மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என். முனீர் ஹோதா, இ.ஆ.ப., தலைமை வகித்து உரை நிகழ்த்தினார்கள். உயர்நிலைப்பள்ளி, மேல் நிலைப் பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியர்களுக்குத் தனித் தனியாக நடைபெற்ற பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்குத் தனித் தனியாக 18 பரிசுகளையும், நற்சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

விழா இறுதியில் கல்லூரி, பள்ளி மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.






# மதுரையில் ஆளுநரின் ஆலோசகர்



தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ். சித்து அவர்கள் 29-2-88 அன்று மதுரைக்கு வருகை தந்தார்கள். மதுரை விமானநிலையத்தில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. தேவராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு நில நிர்வாக ஆணையர் திரு வி. ராமமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் மாவட்ட உயர் அலுவலர்கள் வரவேற்றார்கள்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த மருத்துவம், வீட்டுவசதி, பொதுப்பணித்துறை, குடிநீர் வாரியம், விவசாயம், தொழில், பால்வளம், சத்துணவு, வைகை, சண்முகாநதி மேம்பாட்டுத்திட்டம், உலக வங்கித் திட்டங்கள் குறித்த வரைபடங்கள், புகைப்படங்கள், மாடல்கள் ஆகியவற்றை ஆலோசகர் பார்வையிட்டார்.

பின்னர், வளர்ச்சி மன்றக் கூடத்தில், மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்தும் வந்திருந்த பொது மக்களைச் சந்தித்து, அவர்கள் கொடுத்த மனுக்களைப் பெற்றுக் கொண்டு, அவர்கள் குறைகளைக் கேட்டறிந்தார். சம்பந்தப்பட்ட அலுவலரிடம் உடனே நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டார்.

கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த 20 ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாகக் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் சாவிகளை ஒப்படைத்தார். 10 முதியோருக்கு உதவித்தொகை, விதவையின் மகள் திருமணத்திற்கு ரூ.1,000, 5 சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசக் கருவிகள், 10 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா ஆகியவை வழங்கினார். மயிலாடும்பாறையைச் சேர்ந்த வீராசாமி - காளியம்மாள் தம்பதிகளுக்கு, கலப்புத் திருமணம்செய்து கொண்டதற்காக ரூ. 4,300க்கான ஊக்கத் தொகையும், சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரம் வளர்ப்போருக்கு அனுமதியும் வழங்கினார்.

மதுரை, இராமநாதபுரம், பசும்பொன், காமராசர் மற்றும் அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் 20 அம்சத் திட்டப்பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

மதுரை நகரையொட்டியுள்ள வண்டியூர்க் கண்மாய்க் கரைப் பூங்கா, உல்லாசப்படகு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டார். சுற்றுலாக் கழக நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாநகராட்சி ஆணையர் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார். மதுரை மாநகராட்சி அலுவலகத்தைப் பார்வையிட்டு மாநகராட்சி அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

**தகவல்: ச. கோவிந்தம்மாள்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மதுரை.**



## தமிழகத்தைச் சேர்ந்த 2 சர்க்கரை ஆலைகளுக்கு விருது

**தேசிய உற்பத்தித் திறன் கவுன்சிலின் (என்.பி.சி.) சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதுக்கு 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.**

**தமிழ்நாட்டைச் சேர்ந்த அண்ணா சர்க்கரை ஆலைக்கு முதல் பரிசும், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு இரண்டாவது பரிசும் கிடைத்துள்ளன.**

**குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு சர்க்கரை ஆலைக்கு மூன்றாவது பரிசு கிடைத்துள்ளது.**

**உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு சர்க்கரை ஆலைக்கு, சிறப்பாகச் செயல்பட்டதற்காகச் சான்றிதழ் கிடைத்துள்ளது.**



# கோவையில் ஆளுநரின் ஆலோசகர்

**கோ**வை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட வ..ர்ச்சி மன்றக கூட்ட அரங்கில் 2.3.88 அன்று காலை நடைபெற்ற கோவை, பெரியார், நீலகிரி, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு.ஏ.பத்மநாபன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு மாவட்டங்களில் நடைபெற்று வரும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார்.

### பொதுமக்களின் குறைகேட்டல்

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்பும், பின்பும், பொதுமக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்து உடனுக்குடன் ஆணைகள் பிறப்பித்தார்.

கணவனை இழந்த விதவை திருமதி சரளா தனக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டி விண்ணப்பம் அளித்தார். உடனடியாக இவருக்குச்சத்துணவு மையத்தில் பணி வழங்கி 2 மணி நேரத்தில் பணி ஆணையை நேரிடையாக மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் வழங்கினார். பொது மக்களின் பல்வேறு குறைகளுக்கான உடனடித் தீர்வினை மேற்கொள்ளுமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அன்று மாலை கோவை மாநகராட்சியின் பல்வேறு பணிகள் மற்றும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து ஆலோசனை செய்தார்

### வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆலோசகர்

3.3.88 அன்று காலை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திற்கு மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் வருகை புரிந்தார். வேளாண் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புக்களையும், நவீனவழிமுறைகளையும் பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பொது மக்கள் குறைகளைக் கேட்டறிந்தார். தொடர்புடைய அலுவலர்களை உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்வதோடு, அலுவலர்கள் மேற்கொண்ட நடவடிககைகளை ஆலோசகர் அவர்களுக்குத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

### செய்தியாளர்கள் கூட்டத்தில்

மாலையில் செய்தியாளர்கள் கூட்டத்தில் ஆலோசகர் அவர்கள் பேசினார்.

"கோவை குடிநீர் விநியோகம் பற்றி மாநகராட்சி அலுவலர்களிடம் பேசப்பட்டது; சிறுவாணி அணையில் 7 மீட்டர் உயரம் குடிநீர் உள்ளது. இது ஜூலை மாதம் வரை போதுமானது. நாளொன்றிற்கு 540 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. குடிநீர் ஒருநாள் விட்டு ஒருநாள் மாநகராட்சிப் பகுதிகளில் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் தேவைப்படும் பகுதிகளில் லாரிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது."

''கோவைக்குக் குடிநீர் வழங்க அத்திக்கடவு திட்டத்தினை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இத்திட்டம் ரூ. 70 கோடி செலவில் நிறைவேற்றப்படும். உலக வங்கி உதவியோடு நிறைவேற்றப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம் பவானி ஆற்று நீர் கோவைக்குக் கொண்டு வரப்படும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் கோவைக்கு 650 இலட்சம் காலன் தண்ணீர் கிடைக்கும். இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 1990-91ஆம் ஆண்டில் இத்திட்டம் முடிக்கப்படும். இதை மேலும் விரைவில் முடிக்கும்படி குடிநீர் வடிகால் வாரியத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது''.

''கோவை நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் உள்ளது. ரூ. 7 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டம் தொடங்கி பணி நடைபெற்று வருகிறது. 4 ஆண்டுகளில் இத்திட்டம் முடிக்கப்படும்''

''பொது மக்களின் குறைகளைக் கேட்டபோது வீட்டுமனைப் பட்டா மற்றும்வேலைவாய்ப்பு வழங்குமாறு மனு அளித்துள்ளனர். 200க்குப் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டன. அரசு, பொது மக்கள் பிரச்சினைகளைக் கண்காணித்து அதை நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்தி வருகிறது''

''பொது மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைத் தீர்வு செய்வதையே முதன்மையாகக் கொள்ள வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது'' இவ்வாறு மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு ஏ.பத்மநாபன் அவர்கள் செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

**தகவல்: தில்லை கோவிந்தன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், கோவை.**

# கைத்தறி நெசவாளர்களுக்கு அரசின் சலுகைகள்

நூல் விலை உயர்வு காரணமாக கூட்டுறவுத் துறையின் கீழ் அமைப்பு ரீதியாக வந்த நெசவாளர்களுக்கு உதவுவதற்காகத் தமிழக அரசு உடனடியாக பத்துக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களிலும் இதர சில குறிப்பிட்ட விசேஷ காலங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணி விற்பனையைப் பெருக்கும் நோக்கத்துடன் தள்ளுபடிச்சலுகை வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட தள்ளுபடித் தொகையை ஈடு செய்யும் வகையில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு அமைப்புகளுக்கு அரசிடமிருந்து செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ஏறத்தாழ முப்பத்திரண்டு கோடி ரூபாய் அளவுக்கு நிலுவையில் இருந்தது. இதில் உடனடியாக பத்து கோடி ரூபாயைக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு வழங்க அரசு முடிவு செய்து, இதற்கான ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இதன் மூலம், கூட்டுறவு நெசவாளர்களும், அமைப்புகளும், நூல் கொள்முதல் செய்து, தறி போட்டுப் பணி துவங்கலாம். இதனால் அவர்களுக்கு வேலை கிடைப்பதுடன், வருவாயும் கிடைக்கும்.

முதியோர்கள், ஆதரவற்ற இளம் பெண்கள், விதவைகள் போன்றவர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 14 கோடி ரூபாய் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு அரசு செலுத்த வேண்டியிருந்தது. இது உடனடியாக ஈடு செய்யப்படும். இதன்மூலம், ஆரம்பக் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் நிதிப் புழக்கம் ஏற்பட்டு நெசவாளர்களுக்கு நூலும், வேலை வாய்ப்பும் கிடைக்கவும் வழி ஏற்படும்.

நெசவாளர்களுக்கு ஓரளவுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையில், நூற்பாலைகளிலிருந்து நூல் கிடைக்கச் செய்ய ஓர் ஏற்பாடு உருவாகியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியம் மார்ச் மாதத்தில் மட்டும் நூற்பு ஆலைகளுக்கு ஏழுமில்லியன்யூனிட் மின்சாரத்தைச் சலுகைக் கட்டணத்தில் கொடுக்கும். இவ்வாறு மின்சாரத்தை நூற்பாலைகளுக்கு சலுகைக் கட்டணத்தில் கொடுப்பதன் மூலம், பொதி (பேல்) ஒன்றுக்கு 520 ரூபாய் உற்பத்திச் செலவு குறையும். இதைப் பயன்படுத்திக் கொண்டு கூட்டுறவு நூற்பாலைகளும், தனியார் துறையிலுள்ள நூற்பாலைகளும் நெசவாளர்களுக்கு மலிவு விலையில் நூல் கிடைக்கச் செய்ய வேண்டும். இந்த மின் கட்டணச் சலுகை காரணமாக நூற்பாலைகளிலிருந்து 10 ஆயிரம் பொதி (பேல்) நூல் உற்பத்தி செய்யலாம்.

இவை தவிர, விற்பனை வரி வீதத்தில் எந்த அளவுக்குச் சலுகை கொடுக்க முடியும் என்பது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

கைத்தறித் துணி விற்பனைக்குத் தள்ளுபடி வழங்கிய இனத்தில் மட்டும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு ஈட்டுத் தொகையாகத் தமிழக அரசு 32 கோடி ரூபாயும், மத்திய அரசு 16 கோடி ரூபாயும் ஈடு செய்ய வேண்டியுள்ளது. இதில் பத்து கோடி ரூபாயைத் தமிழக அரசு இப்போது ஒதுக்கியுள்ளது.

## நூல் விலைக்குறைப்பு

நூல்களின் விலை ஏற்றத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்தும் நெசவாளர்கள் சங்கங்கள் விடுத்த கோரிக்கைகள் மீதும் அரசு மிகுந்தகவனம் செலுத்தி வருகிறது. நூல் ஏற்றுமதியைத்தடைசெய்வது குறித்துப்பரிசீலிக்குமாறும், பருத்தி மற்றும் செயற்கை நூல் இறக்குமதியை அனுமதிக்குமாறும், நூல் மற்றும் பருத்தியை அத்தியாவசியப் பொருள்களாக அறிவிக்குமாறும் மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

விஸ்கோஸ் நூலிழைகள் ஒதுக்கீடு குறித்தும் பருத்தி மற்றும் நூல் விலை குறைப்பு குறித்தும் தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்தின் அலுவலர்களுடனும் தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கத்தினருடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன.

கூட்டுறவுத்துறை மற்றும் தனியார் துறையைச் சார்ந்த, விரும்பும் நூற்பாலைகளுக்கு 7 மில்லியன் யூனிட் கூடுதல் மின்சாரம் வழங்க தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் இசைந்துள்ளார். இந்த ஏற்பாட்டின் மூலம் நூல்களின் விலை குறையும்.

நூல் விலைகளை 1987ஆம்ஆண்டு ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் இருந்தஅளவுக்கு ஒரு நிலைப்படுத்துவதற்காகவும் தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தனியார் துறை நெசவாளர்களுக்கும், முதல் கட்டமாக மூன்று மாதங்களுக்கு நூல் வினியோகம் செய்வதற்கும் வழிசெய்யும் வகையில் ரூ. 16.80 கோடி மானியம் வழங்குவது குறித்து மத்திய அரசு ஆணையிடுமாறு 25.2.88 அன்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

நூலையும் பருத்தியையும் நியாயமான விலையில் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெசவாளர்துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கி அறிவிப்பு ஒன்று. வெளியிடுமாறும் மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது.


மாநிலத்திற்குள் செயல்படும் வண்ணம் அத்தியாவசியப் பொருள்கள் சட்டம் 1955ன் மூன்றாவது பிரிவின் கீழ், நூல் பற்றிய அறிவிப்புகளை வெளியிடவும், ஆணைகள் பிறப்பிக்கவும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணை பிறப்பித்து அறிவிக்குமாறும் மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது.


தமிழ்நாடு அரசின் மின்சார வாரியம் கூடுதலாக மின்சாரம் வழங்க முன்வந்திருப்பதால் தென்னிந்திய மில் உரிமையாளர்கள் சங்கம், நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் மாதத்திற்குக் கூடுதலாக 5,000 பேல்கள் நூல் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசு 1988-89ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் விஸ்கோஸ் நூலிழை மற்றும் பருத்தி இழை மீதான உள்நாட்டு வரியினைக் கணிசமான அளவிற்கு, ஒரு கிலோவிற்கு ரூ. 7லிருந்து ரூ.5 ரூபாயாகக் குறைத்துள்ளது.

நூல் மீதான விலையினைக் கட்டுப்படுத்த அனைத்து வழிமுறைகளும் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களாக வெளிச்சந்தையில் நூல் மீதான விலை, கட்டு ஒன்றுக்கு ரூ.7லிருந்து ரூ. 10 வரை குறையத் தொடங்கியுள்ளது.

நூல் விநியோகத்தை ஒரு நிலைப்படுத்துவதற்காக நூல் ஏற்றுமதியை தடை செய்வதிலும், பருத்தி மற்றும் நூலிழைகள் இறக்குமதியை அனுமதிப்பதிலும் மத்திய அரசின் தலையீட்டின் விளைவாகவும் ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ள நிதியுதவிகளின் விளைவாகவும், தற்போதுள்ள பிரச்சினைகள் நீங்கி சுமுகமான நூல் விநியோகம் ஏற்படும். நூலின் விலை மேலும் குறையும் என்று அரசு நம்புகிறது.



# காவிரிப் படுகையில் எண்ணெய் வளம்

காவிரி வட்ட எண்ணெய் நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவு நனவாகி வரும் காலம் இது.

பூமிக்கு அடியில் உள்ள எண்ணெய், எரிவாயு முதலியனவற்றைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தும் பணியை மேற்கொள்வதற்காக 1959-இல் நிறுவப்பட்ட இந்திய அரசு எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக்குழு ( Oil & Natural Gas Commission)காவிரிப்படுகையில் எண்ணெய் வளத்தைக் கண்டுபிடிக்கும் பணியை அது நிறுவப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே தொடங்கியது.

தமிழ்நாட்டில் காரைக்கால் பகுதியில்தான் 1964-ஆம் ஆண்டில் எண்ணெய்க் கிணறு தோண்டும் பணி தொடங்கப்பட்டது. இப்பணியில் தொடக்கம் முதல் உற்சாகமான பலன் கிடைத்ததால், எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டும் பணி காவிரிப்படுகைப் பகுதியில் விரிவுபடுத்தப்பட்டது. நடப்புத்'திட்டக் காலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நரிமணம், கோவில் களப்பால் ஆகிய பகுதிகளிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் புவனகிரியிலும் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன.


காவிரிப்படுகையில் நிலப்பகுதியில் மட்டும் 25,000 சதுர கி.மீட்டர் பரப்பளவுக்குத் தமிழ்நாட்டிலும், புதுவை யூனியன் பிரதேசத்திலும் எண்ணெய் வளம் அமைந்துள்ளது. இப்பகுதிகளை ஒட்டி அமைந்துள்ள கடல் பகுதியில் 23,000 சதுரகிலோ மீட்டர் அளவுக்கு எண்ணெய் வளம் உள்ளது. இதற்கான நிலவியல் ஆய்வுகள் 1959-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்தன.

## அட்டை சொல்லும் செய்தி

பரங்கிப்பேட்டை அருகில் கடல் பகுதியில் 1979-ஆம் ஆண்டில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக்குழு துரப்பணப் பணியைத் தொடங்கியது. 1980-இல் இங்கு இயற்கை வாயு கிடைத்தது. இதனைத் தொடர்ந்து 1981-ஆம் ஆண்டில் பாக் வளைகுடாப் பகுதியில் எண்ணெய்க் கிணறு தோண்டும் பணி நடைபெற்றது.

இப்படித் தோண்டப்பட்ட எண்ணெய்க் கிணறுகளில் வர்த்தக ரீதியாக இயங்குபவை வருமாறு:

கோவில் களப்பால்
நரிமணம்
திருக்காளூர்
புவனகிரி


GEOLOGICAL MAP OF CAUVERY BASIN
SHOWING DRILLED & RELEASED LOCATIONS
5 0 5 10 15 20 25 30 35 km
5 M/U MIOCENE
4 PALEOCENE
3 UPPER CRETACEOUS
2 LOWER CRETACEOUS
1 ARCHAEAN
STRUCTURAL WELL
DRILLED WELL
RELEASED WELL
78° 15
30'
79° 00'
30
80° 00'
80° 15'
12° 0'
30'
11° 00'
30'
10° 00'
30'
9° 0'
Villupuram
Pondicherry
Cuddalore
PYH-2-1
Vriddhachalam
BVG-1
Porto nova
PY-1-1
Toludur
BVG-2
Chidambaram
CDM-1
NLR-1
KMR-1
KMK-1
MDM-1
MDM Sh.
PY-3-1
PDN-1
Mayavaram
TKD-1
MYM-1
Tranquebar
CAUVERY R.
Kumbakonam
KMB-1
KH-1-1
KH-2-1
KKL-1
Karaikal
VENNAR R.
SLM-1
PNCR-1
NGR-1
TVR-1
AKM-1
NRM-1
NLM-1
Tanjavur
TJR-1
Nagapattinam
KMP-1
TUR-1
NGT-1
MNG-1
GOV-1
OND-1
TKL-1
TDP-1
KVK-1/4
TTP Sh.
TPD-1
RNP-1
TTP-1
TTP-2
PKT-1
PKT-2
Pudukottai
Vedaranniyam
KDK-1
PCM-1
PH-12-1
PH-7-1
NKD-1
PH-8-1
PH-9-1
Karaikkudi
KKD-1
PH-13-1
PH-11-1
PH-14-1
PH-15-1
PH-10-1
PEDRO-1
Sivagangai
PH-16-1
Tondi
DELFE-1
PH-3-1
PDK-1
Ramnad
UPL-1
MDP-1
Rameswaram
PALK BAY-1
M-1-1A

# மக்கள் நலம் பேணும் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை

இந்திய மக்களின் நலிந்த பிரிவினர், ஏழை எளியவர்கள், விவசாயிகள், விவசாயக் கூலிகள், நிலைத்த வருமானம் அற்றோர் இவர்களுடைய நலத்தையே இலட்சியமாகக் கொண்ட 1988-89-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு என்.டி. திவாரி அவர்கள் 29-2-'88 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்கள். மக்கள் நலம் பேணும் இந்த மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் ஏழை எளியவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் ஏராளம். கிராமப்புறத்து இந்தியாவின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வடிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் சிறப்பு அம்சங்களை அனைவரும் பாராட்டுகின்றனர்.

கடற்பகுதியில் தோண்டப்பட்ட கிணறுகளில் இரண்டும் பயன்படத் தக்க நிலையில் உள்ளன.

**நரிமணம்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நரிமணத்தில் இதுவரை மூன்று எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. நான்காவது எண்ணெய்க் கிணறு தோண்டும் பணி நடைபெற்று வருகிறது.

நரிமணத்தின் முதலாவது எண்ணெய்க் கிணறு 15-2-86இல் தனது உற்பத்தியைத் தொடங்கியது. நரிமணத்தில் எண்ணெய்க் கிணற்றிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்ட பிறகுதான் தென்னகத்தில் முதன் முதலாக 'கச்சா எண்ணெய்' உற்பத்தி தொடங்கியது.

இங்கு எடுக்கப்படும் 'கச்சா' எண்ணெய், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு அனுப்பப்படுகிறது.

வர்த்தக ரீதியாக எரிவாயுவை ( Gas ) விநியோகிக்கும் முறை கடந்த பிப்ரவரியில் தொடங்கியது.

நரிமணம் இயற்கை வாயு முதன் முதலாக 1988 பிப்ரவரியில் நாகப்பட்டினத்திலுள்ள ஸ்டீல் ரோலிங் மில்லுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த வாயுவை எடுத்துச் செல்ல 14 கிலோ மீட்டர் தொலைவுக்கு எண்ணெய் மற்றும் இயற்கைவாயுக் குழு அதன் பொறுப்பில் குழாய் அமைத்துக் கொடுத்துள்ளது.

இன்னும் இரண்டு இரசாயனத் தொழில்களுக்கும் எரிவாயு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது, இப்படி நாள்தோறும் இங்கிருந்து 15,000 கன மீட்டர், எரிவாயு விநியோகிக்கப்படும்.

**கோவில் களப்பால்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நரிமணத்திற்குத் தெற்கில் அமைந்துள்ள கோவில் களப்பாலில் நான்கு கிணறுகளில் இரண்டு தோண்டப்பட்டுவிட்டன. இங்கு எண்ணெயை விட அதிகமாக இயற்கை வாயு கிடைக்கிறது. இங்கு நாளொன்றுக்கு 50,000 கனமீட்டர் அளவுக்கு 'காஸ்' உற்பத்தி அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்வாரியம் கோவில் களப்பாலில் 5 மெ. வா. மின் உற்பத்தி செய்ய உள்ளது. இதற்கு கோவில்களப்பால் எண்ணெய்க் கிணற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு 4,000 கனமீட்டர் காஸ்' விநியோகிக்கப்படும.

**புவனகிரி**

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் அருகேயுள்ள புவனகிரியில் 1987 டிசம்பர் முதல் எண்ணெய், எரிவாயு உற்பத்தி செய்யப்படுகிறது.

எதிர்காலத்தில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக்குழு துரப்பணப் பணிகளை மேற்கொள்ளவிருக்கும் பகுதிகள் வருமாறு:

நாகப்பட்டினம் பகுதி:

நரிமணம்
திருவாரூர்
கோவில் களப்பால்
காரைக்கால் சுற்று வட்டாரம்
நன்னிலம்
கமலாபுரம்
அடியக்கமங்கலம்

அரியலூர்—புதுவைப் பகுதி:

புவனகிரி
குமராட்சி
நஞ்சலூர்ப் பகுதிகள்

இராமநாதபுரம் படுகை

உச்சிப்புளி
இராமநாதபுரம்
நயினார் கோவில்

தஞ்சாவூர்ப் படுகை

ஒரத்தநாடு
காரைக்குடிப் பகுதிகள்

கடற் பகுதி

பாக் வளை குடா
காரைக்கால் கடற் பகுதி
பரங்கிப்பேட்டை கடற் பகுதி
வேதாரண்யம் கடற் பகுதி
மன்னார் வளைகுடா
பாண்டிச்சேரி கடற் பகுதி

சோவியத் நாட்டுடன் செய்து கொண்ட தொழில்நுட்ப ஒப்பந்தத்தின்படி சோவியத் நாட்டு நிபுணர்களின் உதவியுடன் 1987 முதல் 1993 முடிய அரியலூர் பாண்டிச்சேரிப் பகுதியில் 44 கிணறுகளைத் தோண்டவும், ஆழப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பொழுது சோவியத் குழுவினர் இந்தப் பகுதியில் சாத்தப்பாடியில் ஒரு கிணற்றைத் தோண்டும் பணியைத் தொடங்கியுள்ளனர்.

எண்ணெய் இயற்கை வாயுக் குழு இதுவரை காவிரிப் படுகையில் எண்ணெய் வளம் கண்டுபிடிப்புக்காக ரூ. 260 கோடி செலவு செய்துள்ளது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வரும் இரண்டு ஆண்டுகளில் நிலப்பகுதியிலும், கடற் பகுதியிலுமாகச் சேர்ந்து ரூ. 200 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர 1986 முதல் 1993-ஆம் ஆண்டு வரை இந்திய-சோவியத் ஒப்பந்தப்படி நிறைவேற்றிட இருக்கும் திட்டங்களுக்கு ரூ. 200 கோடி செலவிடப்படும்.

1989-90-ஆம் ஆண்டு இறுதியில் ஆண்டுக்கு இரண்டு இலட்சம் மெட்ரிக் டன் எண்ணெய் உற்பத்தி செய்யப்படும். நாளொன்றுக்கு 4 இலட்சம் கன மீட்டர் எரிவாயு கிடைக்கும்.

மொத்தத்தில் இப்பொழுது காவிரிப் படுகையில் 61 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இவைகளில் 36 நிலப்பகுதியிலும் 25 கடற்பகுதியிலும் தோண்டப்பட்டுள்ளன.

நரிமணம், கோவில்களப்பால், புவனகிரி ஆகிய இடங்களிலிருந்து கிடைத்த எண்ணெய்யில் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு இதுவரை ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பீப்பாய்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நமது நாட்டில் இயற்கைச் செல்வங்களில் ஒன்றானதும், இருபதாம் நூற்றாண்டின் தேவைகளில் முக்கியமானதுமான எண்ணெய் வளம், காவிரிப்படுகைப் பகுதியில் 37 கோடி மெட்ரிக் டன் உள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

—மாமூலன்

ஆசிரியரும் வெளியிடுபவரும் :


இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது

முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





நரிமணம் எண்ணெய்க் கிணறு